Follow us:
# தமிழன்
THAMILAN தமிலன்
தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்
மலர் : 03, இதழ் : 14 சுபகிருது வருடம், ஆனி மாதம் 27ஆம் திகதி திங்கட்கிழமை
(11.07.2022) ஹிஜ்ரி - 1443, துல்ஹஜ் - 11, 0115886187 - பக்கங்கள் 12
விலை ரூ.50

## புதன்கிழமை பதவி விலகும் ஜனாதிபதி கோட்டாபய!



முடிவை சபாநாயகருக்கு அறிவித்தார்

02 பக்கம்

தமிழன்
2022, ஜூலை 11ஆம் திகதி, திங்கட்கிழமை

## மக்கள் கிளர்ச்சியின் வரலாற்று முக்கியத்துவ வெற்றி!



இலங்கையின் வரலாறு காணாத மக்கள் கிளர்ச்சி அதன் உச்சக்கட்டத்தில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை உத்தியோகபூர்வ வாசஸ்தலமான ஜனாதிபதி மாளிகையில் இருந்து நேற்று முன்தினம் சனிக்கிழமை வெளியேறச் செய்துவிட்டது.

நாட்டின் நாலாபுறங்களில் இருந்தும் தலைநகர் கொழும்பில் திரண்ட இலட்சக்கணக்கான மக்கள் ஜனாதிபதி மாளிகை, ஜனாதிபதி செயலகம் மற்றும் பிரதமரின் உத்தியோகபூர்வ வாசஸ்தலமான அலரிமாளிகை ஆகியவற்றை முற்றுகையிட்டு, அரசியல் கட்சிகளினால் செய்யமுடியாமல் போனதை செய்துகாட்டியிருக்கிறார்கள். அதாவது தனது பதவிக் காலத்தின் இறுதிவரை ஆட்சியதிகாரத்தில் இருந்து விலகப்போவதில்லை என்று விடாப்பிடியாக இருந்த கோட்டாபயவை பதவியிலிருந்து விலகுவதாக அறிவிக்க வைத்திருக்கிறது மக்கள் சக்தி.

பொருளாதார நெருக்கடியில் இருந்து விடுபட நிவாரணம் கோரி நான்கு மாதங்களுக்கு முன்னர் வீதிகளில் இறங்கி மக்கள் செய்யத்தொடங்கிய போராட்டம் நாளடைவில் முக்கியமான அரசியல் கோரிக்கைகளை வலியுறுத்தும் மக்கள் கிளர்ச்சியாக மாறியது. ஜனாதிபதி கோட்டாபயவும் அரசாங்கமும் பதவி விலகவேண்டும், நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சிமுறை ஒழிக்கப்படவேண்டும், புதியதொரு அரசியல் கலாசாரத்தை தோற்றுவிக்கக்கூடிய முறைமை மாற்றம் தேவை என்ற முக்கிய கோரிக்கைகளை வலியுறுத்திய மக்கள் போராட்டத்தின் உலகறிந்த அடையாளமாக விளங்கும் கொழும்பு காலிமுகத்திடல் 'கோட்டா கோ கம'வின் 92ஆவது தினத்தில் மக்கள், ஜனாதிபதியை மாளிகையை விட்டு ஓட வைத்திருக்கிறார்கள்.

இராணுவ பாதுகாப்புடன் பல வாகனங்கள் அதிவேக நெடுஞ்சாலையில் கட்டுநாயக்க விமானநிலையம் நோக்கிச் சென்றதையும், கொழும்பு துறைமுகத்தில் கடற்படைக்கப்பலில் பல பொதிகள் ஏற்றப்பட்டதையும் காண்பிக்கும் பதிவுகள் சமூக ஊடகங்களில் பரவியதைக் காணக்கூடியதாக இருந்தது. ஆனால் உண்மையில் ஜனாதிபதி எங்கே தங்கியிருக்கிறார் என்பது பற்றிய தெளிவான தகவல்கள் இல்லை. "இராணுவத்தின் பாதுகாப்பில் முகாமொன்றில் அவர் தங்கவைக்கப்பட்டிருப்பதாகவும் தன்னை அடையாளம் காண்பிக்கவேண்டாம்" என்றும் கேட்டுக்கொண்ட அதிகாரியொருவரை மேற்கோள் காட்டி சில ஊடகங்கள் செய்தி வெளியிட்டிருக்கின்றன.

இந்த நிலைவரம், பிரதமர் டட்லி சேனநாயக்கவின் அரசாங்க காலத்தில் இடதுசாரிக் கட்சிகளின் தலைமையில் முன்னெடுக்கப்பட்ட 1952 ஆகஸ்ட் 12 மாபெரும் ஹர்த்தால் போராட்டத்தின்போது மக்களின் எதிர்ப்புக்கு முகங்கொடுக்கமுடியாமல் பிரதமரும் அமைச்சரவையும் துறைமுகத்தில் தரித்துநின்ற பிரிட்டிஷ் கப்பலில் தங்கியிருந்த வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த சம்பவத்தை நினைவுபடுத்துகிறது.

அந்த போராட்டத்தை அடுத்து பிரதமர் பதவியில் இருந்து டட்லி சேனநாயக்க உடனடியாக பத விலகவில்லை. இரு மாதங்களுக்கு பிறகு அக்டோபரில்தான் அவர் பதவியிலிருந்து இறங்கினார். ஆனால் அந்த ஹர்த்தால் போராட்டத்தையெல்லாம் ஒரு அற்பமாக்கிவிட்ட தற்போதைய மக்கள் கிளர்ச்சிக்கு முன்னால் கோட்டாபய ராஜபக்ஷ பதவி விலகும் அறிவிப்பை உடனடியாகவே செய்ததைக் காணக்கூடியதாக இருந்தது.

ஆட்சியதிகார மாடங்கள் மக்களினால் முற்றுகையிடப்பட்ட நிலையில், தலைநகர் சீற்றம் கொண்ட மக்கள் அலையில் மூழ்கியிருந்த நிலையில், நாடாளுமன்ற கட்சித் தலைவர்களின் கூட்டத்தை கூட்டுவதாக பிரதமர் ரணில் விக்ரமசிங்க அறிவித்தார். ஜனாதிபதியும் கட்சித் தலைவர்களின் கூட்டத்தில் எடுக்கப்படக்கூடிய எந்த தீர்மானத்துக்கும் இணங்குவதாக மறைவிடத்தில் இருந்து அறிவித்தார்.

சபாநாயகரின் வாசஸ்தலத்தில் கூடிய கட்சித்தலைவர்கள், ஜனாதிபதியும் பிரதமரும் பதவி விலகவேண்டும் என்றும் இடைக்கால ஜனாதிபதியாக சபாநாயகர் மகிந்த யாப்பா அபேவர்தன பதவியேற்கவேண்டும் என்றும் இடைக்கால சர்வகட்சி அரசாங்கம் ஒன்று அமைக்கப்படுவதற்கான ஏற்பாடுகள் உடனடியாக முன்னெடுக்கப்படவேண்டும் என்றும் தீர்மானித்தார்கள்.

02 பக்கம்

# கொந்தளித்த கொழும்பு!

யோ.தர்மராஜ்

இலங்கை அரசியல் வரலாற்றில் முதன்முறையாக இடம்பெற்ற பெரும் மக்கள் புரட்சி வெற்றியளித்து, அதனால் அரச தலைவர்கள் தமது பதவிகளை துறக்கும் நிகழ்வு இடம்பெற்றதை 'தமிழன்' நாளிதழ் இத்தால் மக்களுக்கு அறியத்தருகின்றது. அரசாங்கத்தின் மோசமான பொருளாதாரக் கொள்கைகளால் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடியில் சிக்கித் தவித்த மக்கள் ஓரணியில் நேற்றுமுன்தினம் கொழும்பை முற்றுகையிட்டதில் பெரும் பதற்ற நிலைமை ஏற்பட்டது. மக்களின் கோபாவேசத்தை எதிர்கொள்ள முடியாமல் தடுமாறிப்போன ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவும், பிரதமர் ரணில் விக்ரமசிங்கவும் பதவிகளை துறப்பதாக அறிவித்துள்ளனர். (மக்கள் போராட்டம் குறித்தான விரிவான தகவல்கள் 3 ஆம் பக்கத்தில்)

## ரணில் இல்லத் தாக்குதல் குறித்து நீதியான விசாரணை தேவை

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் கோரிக்கை

02 பக்கம்

## அமைச்சர்கள் ஐவர் திடீர் இராஜினாமா

யோ.தர்மராஜ்

ஜனாதிபதி உள்ளிட்ட அரசாங்கம் பதவி விலகுமாறுக் கோரி மக்கள் முன்னெடுத்த போராட்டத்தின் காரணமாக அமைச்சரவை... 02 பக்கம்

## கமெண்ட் கந்தர்..

ஜனாதிபதி மாளிகைக்குள்ள போய் 'கோட்டா கோ ஹோம்' எண்டு கத்தாதீங்கோ... இனி கத்துறதெண்டா கோட்டா கோ அமெரிக்கா ஹோம் எண்டு கத்துங்கோடாப்பா..



## ரணிலின் வீடு தீக்கிரை; நூலகம் எரிந்து நாசம்

மூவர் பொலிஸாரால் கைது



02 பக்கம்

## இலங்கையின் நிலைவரத்தை உன்னிப்பாக கவனிக்கிறோம்

சர்வதேச நாணய நிதியம் தெரிவிப்பு

இலங்கையில் நடைபெற்று வரும் சம்பவங்களை உன்னிப்பாக அவதானித்து வருவதாக சர்வதேச நாணய நிதியம் தெரிவித்துள்ளது. அத்துடன், சர்வதேச நாணய நிதிய ஆதரவுத் திட்ட உரையாடலை...

02 பக்கம்

## நெருக்கடிகளுக்கு நீண்டகால தீர்வைப் பெற அமையவுள்ள புதிய அரசு உழைக்க வேண்டும்



அமெரிக்கா நேற்று முக்கிய அறிவிப்பு

இலங்கையில் மக்கள் கிளர்ச்சி மூலம் ஜனாதிபதி செயலகம் கைப்பற்றப்பட்டதுடன், பதவி விலகுவதாக ஜனாதிபதி அறிவித்துள்ள நிலையில், நாடு எதிர்கொள்ளும சிக்கல்களுக்கு நீண்டகாலத் தீர்வைப் பெறும் முயற்சிகளில் துரிதமாக ஈடுபடுமாறு இலங்கை அரசியல் தலைவர்களை அமெரிக்கா வலியுறுத்தியுள்ளது. 02 பக்கம்

## உஷ்



கொழும்புக்குள் மக்கள் கூட்டம் வருவது குறித்து தகவல்களை முறையாக வழங்கவில்லையென தெரிவித்து, பாதுகாப்புப் படைகளின் பிரதானிகளுடன் முரண்பட்டாராம் ஜனாதிபதி கோட்டாபய.

கொழும்புக்குள் மக்கள் பேரணி வரும்போது ஜனாதிபதி மாளிகையில் கோட்டாபயவும் பெசில் ராஜபக்ஷவும் உயர்மட்ட படைத்தளபதி களுடன் இருந்துள்ளனர். நிலைமை கட்டுக்கடங்காமல் போகவே ஜனாதிபதி மாளிகையின் பின்புறம் வழியாக துறைமுகத்தின் ஊடாக இவர்கள் வெளியேற்றப்பட்டனர். படைமுகாம் ஒன்றில் தங்கவைக்கப்பட்டுள்ள ஜனாதிபதி கோட்டா, பதவி விலகுவதாக அறிவித்தாலும் மாற்று வழிகள் குறித்தும் ஆராய்வதாக தகவல்.

## ஜனாதிபதி பதவி விலகாவிடின் நாடு முழுவதும் ஹர்த்தால்

தொழிற்சங்கங்கள் அறிவிப்பு

எதிர்வரும் 13ஆம் திகதி ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பதவியிலிருந்து விலகாவிட்டால், அறிவித்தல் இன்றி வேலை நிறுத்தம் மற்றும்...

02 பக்கம்

## இன்று முதல் மீண்டும் எரிவாயு விநியோகம்

3700 மெட்ரிக் தொன் எரிவாயுவை ஏற்றிய கப்பல் நேற்று நாட்டை வந்தடைந்தது.

அதேசமயம் இன்றைய தினம் 3,740 மெட்ரிக் தொன் எரிவாயு அடங்கிய இரண்டாவது கப்பலும் வருகை தரவுள்ளது.

அத்துடன் 3,200 மெட்ரிக் தொன் எரிவாயுவை ஏற்றிய மூன்றாவது கப்பல் எதிர்வரும் 15ஆம் திகதி நாட்டை வந்தடையவுள்ளதாக ஜனாதிபதி ஊடகப்பிரிவு குறிப்பிட்டுள்ளது.

02 பக்கம்

## ஜனாதிபதி மாளிகையிலிருந்து மீட்கப்பட்ட ஒரு கோடி ரூபா

பொலிஸாரிடம் ஒப்படைப்பு

ஜனாதிபதி மாளிகையில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பயன்படுத்தியதாக நம்பப்படும் அறையொன்றிலிருந்து மீட்கப்பட்ட, ஒரு கோடியே 78 இலட்சத்து ஐம்பதாயிரம் ரூபாவுக்கும் அதிகமான பணத்தை கணக்கிட்டு,

02 பக்கம்



# மக்கள் கிளர்ச்சியின்...

இடைக்கால சர்வகட்சி அரசாங்கம் ஒன்று அமைக்கப் படுவதற்கு வசதியாக தான் பதவி விலகுவதாக பிரதமர் விக்ரமசிங்க அறிவித்த அதேவேளை, ஜனாதிபதி நாளை மறுதினம் புதன்கிழமை பதவி விலகி முறைப்படியான அதிகார மாற்றத்தைச் செய்வதாக தனக்கு அறிவித்திருப்பதாக நாட்டு மக்களுக்கு சபாநாயகர் கூறினார். இடைக்கால அரசாங்கம் பதவியேற்கத் தயாராகும்வரை பிரதமர் பதவியில் இருக்கப்போவதாக விக்ரமசிங்க அறிவித்ததையும் காணக்கூடியதாக இருந்தது.

அலரிமாளிகையிலிருந்து கட்டவிழ்த்துவிடப்பட்ட ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் ஆதரவாளர்களும் குண்டர்களும் காலிமுகத்திடல் போராட்டக்காரர்கள் மீது மேற்கொண்ட காட்டுமிராண்டித்தனமான வன்முறைகளையடுத்து நாட்டின் பல பகுதிகளிலும் வன்முறை பரவிய நிலையில், மே 9 மஹிந்த ராஜபக்ஷ பிரதமர் பதவியை துறந்து திருகோணமலையில் கடற்படை முகாமில் குடும்பத்தவர்களுடன் தஞ்சமடைந்தார். ஜூன் 9 அவரது ஒரு சகோதரரும் இன்றைய பொருளாதார நெருக்கடிக்கான சூத்திரதாரிகளில் ஒருவருமான முன்னாள் நிதியமைச்சர் பெசில் ராஜபக்ஷ தனது நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை துறந்துவிட்டு இன்றைய நெருக்கடிக்கு தங்களுக்கு வாக்களித்த மக்களும் பொறுப்பு என்று கூறிவிட்டுச் சென்றார். ஜூலை 9 மக்கள் கிளர்ச்சியின் உச்சக்கட்டத்தில் இன்னொரு சகோதரரான கோட்டாபய ஜனாதிபதி மாளிகையில் இருந்து வெளியேறி இன்னும் அடையாளம் தெரியவராத ஒரு இடத்தில் இருந்துகொண்டு பதவியிலிருந்து விலகுவதாக அறிவித்திருந்தார். இந்நிலையில் ஓகஸ்ட் 9 என்ன நடக்கும் என்று சமூக ஊடகங்களில் பலரும் நகைச்சுவையுணர்வுடன் கேள்விகளைக் கேட்கிறார்கள்.

நிச்சயமாக ஓகஸ்ட் 9 அல்ல, அதற்கு முன்னதாகவே உடனடியாக நாட்டில் தற்போது நிலவும் அசாதாரண நிலைவரம் முடிவுக்குக் கொண்டுவரப்படவேண்டும். அரசாங்க நிர்வாகத்தை முன்னெடுக்கவும் பொருளாதார நெருக்கடியிலிருந்து படிப்படியாக மீள்வதற்கான நடவடிக்கைகளை சர்வதேச சமூகத்தின் உதவியுடனும் ஒத்துழைப்புடனும் பயனுறுதியுடைய முறையில் முன்னெடுக்கக்கூடிய சர்வகட்சி அரசாங்கம் ஒன்று அமைக்கப்பட வேண்டும். நெருக்கடி நிலையில் ஒரு தணிவை ஏற்படுத்துவதற்கு - எரிபொருட்கள், உணவுவகைகள், மருந்துப்பொருட்கள் உட்பட அத்தியாவசிய பண்டங்களை இறக்குமதி செய்து பட்டினிச்சாவைத் தவிர்ப்பதற்கு - அவசரமாகத் தேவைப்படுகின்ற நிதியுதவிகளை சர்வதேச சமூகத்திடமிருந்து பெறுவதற்கு அவர்களின் நம்பிக்கையை வென்றெடுக்க அரசியல் உறுதிப்பாடு ஏற்படுத்தப்பட வேண்டும்.

தற்போதைய பொருளாதார நெருக்கடி மாத்திரமல்ல, அதன் விளைவாக மூண்டிருக்கின்ற அரசியல் நெருக்கடியும்கூட இலங்கை அதன் வரலாற்றில் முன்னென்றும் கண்டிராததாகும். அத்தகையதொரு அசாதாரண சூழ்நிலை நிச்சயமாக அசாதாரண அணுகுமுறைகளையும் தீர்வுகளையுமே வேண்டிநிற்கிறது என்பதை எமது அரசியல் தலைவர்கள் உணர்ந்துகொண்டு கட்சி அரசியல் நலன்கள் மற்றும் மாச்சரியங்களுக்கப்பால் சிந்தித்து நாட்டையும் மக்களையும் காப்பாற்றுவதில் தங்களுக்கு இருக்கும் பொறுப்பை நிறைவேற்ற வேண்டும். காலம் வேண்டிநிற்பதற்கு ஏற்றமுறையில் அரசியல் துணிவாற்றலையும் தொலைநோக்குடனான அணுகுமுறையையும் அவர்கள் வரவழைத்துக்கொள்ள வேண்டும். அவ்வாறு செய்யத் தவறினால் அது நாட்டுக்கும் மக்களுக்கும் எதிர்காலத் தலைமுறைகளுக்கும் செய்யும் பெருந்துரோகமாகும்.

அதேவேளை, ஜனாதிபதி மாளிகையையும் அலரிமாளிகை யையும் முற்றுகையிட்டிருக்கும் மக்கள், அங்கு செய்கின்ற காரியங்கள் தங்களது போராட்டங்களின் வெற்றியின் விளைவாக அவர்கள் ஒருவித பரவசநிலையில் இருப்பதை வெளிக்காட்டுகின்றன. அத்தகைய செயல்களில் தொடர்ந்து ஈடுபட்டால் அது போராட்டத்தின் அரசியல் பயன்விளைவுகளை அசிங்கப்படுத்துவதாக அமையும் என்பதை போராட்டக்காரர்களுக்கு ஆதரவாக கடந்த சில மாதங்களாக ஆதரவளித்துவரும் அமைப்புகள் அவர்களுக்கு உணர்த்தவேண்டும். போர் வெற்றியின் குதூகலத்தில் ராஜபக்ஷ குடும்பம் முன்னெடுத்த அரசியல் அணுகுமுறைகள்தான் நாட்டை இன்றைய நிலைக்குக் கொண்டுவந்திருக்கின்றன என்பது ஒரு வரலாற்றுப் படிப்பினையாக அமையவேண்டும்.

ஜனாதிபதி மாளிகையினதும் அலரிமாளிகையினதும் இன்றைய காட்சிகள் 36 வருடங்களுக்கு முன்னர் சர்வாதிகாரி பேர்டினண்ட் மார்கோஸை நாட்டைவிட்டு தப்பியோடவைத்த மக்கள் புரட்சிக்குப் பிறகு அவரின் மாளிகைக்குள் சென்ற மக்கள் செய்த காரியங்களை நினைவுபடுத்துகின்றன. சாதாரண மக்கள் மத்தியில் அத்தகைய உணர்வுகள் வெளிக்கிளம்புவதை தடுப்பது கஷ்டம்தான். என்றாலும் எல்லை மீறாதிருப்பதை உறுதிசெய்வது போராட்டங்களை வழிநடத்தும் அமைப்புகளின் பொறுப்பாகும்.


அமைதிவழிப் போராட்டங்களில் இலட்சக்கணக்கான மக்கள் பங்குபற்றுகின்றபோது விரும்பத்தகாத சம்பவங்கள் இடம்பெறவே செய்யும். சனிக்கிழமையன்று மக்கள் கிளர்ச்சியிலும் இதைக் காணக்கூடியதாக இருந்தது. பிரதமர் விக்ரமசிங்கவின் தனிப்பட்ட வாசஸ்தலம் சூறையாடப்பட்டு தீவைக்கப்பட்ட சம்பவம் கடுமையாக கண்டிக்கப்படவேண்டியதாகும். இதை பிரதமரின் அரசியலை ஆதரிப்பதாக அர்த்தப்படுத்தவேண்டியதில்லை. இத்தகைய சம்பவங்கள் தொடருமானால், இறுதியில் அது கட்டுமீறி நாடெங்கும் அராஜகம் தாண்டவமாடவே வழிவகுக்கும். மக்களின் நியாயமான கிளர்ச்சியை திசைதிருப்பிவிடுவதற்கு நாசகார சக்திகள் முயற்சிகளை முன்னெடுக்கக்கூடிய ஆபத்தும் இருக்கிறது. வன்முறைச் சம்பவங்கள் தொடருமானால், இறுதியில் போராட்டங்களின் நோக்கமும் திசைமாறி இராணுவத்தின் தலையீட்டுக்கு வழிவகுத்ததாக அமைந்துவிடும். பொருளாதார நெருக்கடியில் திணறிக்கொண்டிருக்கும் மக்களை மேலும் அவலத்துக்குள்ளாக்கக்கூடாது.

இலங்கையின் வரலாற்றில் ஜூலை 9 நியையான இடத்தைப் பெற்றுவிட்டது. புதியதொரு அரசியல் கலாசாரத்தை தோற்றுவித்து முறைமை மாற்றத்தை செய்யவேண்டுமென்ற இலங்கை மக்களின் அபிலாஷைகள் எவருமே நினைத்துக்கூட பார்த்திருக்காத அளவுக்கு வெளிப்படுத்தப்பட்ட தினமாக அது ஒளிர்கிறது. அதன்மூலம் பெற்ற அரசியல் விளைபயன்களை அடுத்தகட்டத்துக்கு நகர்த்துவதில் அக்கறை காட்டவேண்டுமேயன்றி, காலவரையறையின்றி வீதிகளில் ஆர்ப்பாட்டம் செய்துகொண்டிருக்க முடியாது என்ற யதார்த்தம் உணரப்படவேண்டும்.

இறுதியாக, மஹிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியாக இருந்தபோது வெளிநாட்டு தொலைக்காட்சி சேவையொன்றுக்கு அளித்த நேர்காணல் ஒன்றில் அவரிடம் கேட்கப்பட்ட கேள்விக்கு அளித்த பதிலை இச்சந்தர்ப்பத்தில் நினைவுபடுத்துவது பொருத்தமானதாகும்.

ராஜபக்ஷ குடும்பத்தின் பல உறுப்பினர்கள் அரசியலில் செலவாக்கு செலுத்துவது பற்றி அவரிடம் கேட்கப்பட்டது.

"அவர்களை மக்கள் தெரிவுசெய்கிறார்கள். அதற்கு நான் என்ன செய்யமுடியும். ராஜபக்ஷாக்களை மக்கள் விரும்புகிறார்கள். விரும்பாவிட்டால் முழு ராஜபக்ஷாக்களையும் கூண்டோடு மக்கள் தூக்கியெறிவார்கள்".






*ஈதுல் அல்ஹா ஹஜ்ஜுப் பெருநாள் தொழுகை நேற்றுக் காலை கொழும்பு பெரியபள்ளிவாசலில் பள்ளிவாசலின் பிரதம இமாம் மௌலவி ஏ.எம்ஹாபீல் (ரவ்லி ) தலைமையில் நடைபெற்றது. தொழுகையையும் குத்பா பிரசங்கத்தையும் பள்ளிவாசல் பிரதம இமாம் நிகழ்த்தியதுடன், நாட்டுமக்களின் சுபீட்சத்திற்காகவும் தற்போதைய வறுமை நிலை நீங்கவும் வேண்டி விசேட துஆ பிரார்த்தனையும் இடம்பெற்றது. (ஏ.எஸ்.எம்.ஜாவித்)*

## இன்றுமுதல் மீண்டும்...

இந்நிலையில், இன்று முதல் எரிவாயு விநியோகம் முறையாகவும் சீராகவும் இடம்பெறுமென ஜனாதிபதி ஊடகப்பிரிவு வெளியிட்டுள்ள அறிக்கையில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

இம்மாத இறுதிக்குள் வீடுகளுக்கான எரிவாயு தேவை தொடர்பான பிரச்சினை முற்றிலும் தீர்க்கப்படும் என லிட்ரோ நிறுவனத் தலைவர் முதித்த பீரிஸ் கூறியுள்ளார்.

## ஜனாதிபதி...

அங்கு கடமையிலிருந்த விசேட அதிரடிப்படை பொலிஸ் அத்தியட்சகர் ஒருவரிடம் ஆர்ப்பாட்டக்காரர்கள் ஒப்படைத்துள்ளனர்.

அங்கு வந்த கோட்டை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி பணத்தைப் பெற்றுக்கொண்டு பணத்தைக் கண்டுபிடித்து எண்ணுவதற்கு உதவிய ஐந்து பேரின் வாக்குமூலங்களைப் பதிவுசெய்த பின்னர் பணத்தை கோட்டை பொலிஸ் நிலையத்திற்கு எடுத்துச் சென்றதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## ஜனாதிபதி பதவி ...

முழு கடையடைப்பில் ஈடுபடப் போவதாக தொழிற்சங்கங்கள் மற்றும் வெகுஜன அமைப்புகளின் ஒன்றியம் நேற்று அறிவித்துள்ளது.

கொழும்பு கோட்டையிலுள்ள இலங்கை ஆசிரியர் சங்க காரியால யத்தில் நடைபெற்ற தொழிற்சங்கங்கள் மற்றும் வெகுஜன அமைப்புகளின் ஒன்றியம் நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பில் இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் இதனைத் தெரிவித்தார்.

எவ்வாறாயினும், சபாநாயகரின் உத்தியோகபூர்வ இல்லத்தில் நடைபெற்ற கட்சித் தலைவர்களின் கூட்டத்தின் தீர்மானங்களுக்கு மதிப்பளித்து, எதிர்வரும் 13ஆம் திகதி தனது பதவியிலிருந்து விலகுவதாக ஜனாதிபதியினால் சபாநாயகருக்கு அறிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத் தக்கது.

இதேவேளை, ஜனாதிபதி, பிரதமர் பதவி விலகும்வரை ஜனாதிபதி மாளிகை, அலரி மாளிகை மற்றும் ஜனாதிபதி செயலகத்தை தொடர்ந்தும் கட்டுப்பாட்டில் வைத்திருக்கப் போவதாக போராட்டக்காரர்கள் நேற்று அறிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## அமைச்சர்கள் ஐவர்...

அந்தஸ்துள்ள 5 அமைச்சர்கள் தங்களுடைய அமைச்சுப் பதவிகளை இராஜினாமா செய்துள்ளனார்.

அதன்படி, அமைச்சர்களான பந்துல குணவர்தன, ஹரின் பெர்னாண்டோ, மனுஷ நாணயக்கார, மஹிந்த அமரவீர மற்றும் தம்மிக்க பெரேரா ஆகியோர் தமது அமைச்சுப் பதவிகளை இராஜினாமா செய்துள்ளனர்.

போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் வெகுஜன ஊடக அமைச்சரான பந்துல குணவர்தன, அமைச்சுப் பதவிகளிலிருந்தும், ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியிலிருந்தும் தான் விலகுவதாக அறிவித்திருந்தாhர்.

மேலும், நாடாளுமன்றத்தில் சுயாதீனமாக செயற்பட தீர்மானித்துள்ள தாகவும் அவர் தெரிவித்தார்.

கமத்தொழில், வனஜீவராசிகள் மற்றும் வனவளங்கள் பாதுகாப்பு அமைச்சரான மஹிந்த அமரவீர தனது அமைச்சுப் பதவியிலிருந்து இராஜினாமா செய்வதாக அறிவித்துள்ளார்.

இந்திய கடனுதவியின்கீழ் நாட்டிற்கு கொண்டுவரப்படும் உரத்தை உத்தியோக பூர்வமாக பொறுப்பேற்றதன் பின்னர் அமைச்சர் பதவியிலிருந்து இராஜினாமா செய்வதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, பதவியேற்று வெறும் 16 நாட்களேயான முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சர் தம்மிக்க பெரேரா சற்றுமுன்னர் தனது அமைச்சுப் பதவியை இராஜினாமா செய்துள்ளார்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தேசியப்பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினராகவும் பதவிப்பிரமாணம் செய்துகொண்டதோடு, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ முன்னிலையில் அவர் ஜூன் 24ஆம் திகதி அமைச்சராக பதவிப்பிரமாணம் செய்துகொண்டார்.

## ரணில் இல்ல தாக்குதல்...

பிரதமர் ரணில் விக்ரமசிங்கவின் பிரத்தியேக இல்லம் மீதான தாக்குதல் குறித்து நீதியான விசாரணை நடத்துமாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச வலியுறுத்தியுள்ளார். இது தொடர்பில் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ளதாவது,

பிரதமர் ரணில் விக்ரமசிங்கவின் இல்லத்தை இலக்குவைத்து சில நாசகாரக் குழுவால் தீயிட்டு எரித்ததை வெறுப்புடன் கண்டிப்பதோடு, இச்சம்பவத்தில் தொடர்புடைய அனைவர் மீதும் நியாயமான விசாரணை நடத்தப்பட்டு, தராதரம் பாராமல் தண்டனை வழங்கப்பட வேண்டும் என்பதை வலியுறுத்துகிறோம்.

ஜனநாயகம், மனித உரிமைகள் மற்றும் சட்டத்தின் ஆட்சியால் ஆளப்படும் சமூகத்துக்காக இந்நாட்டின் ஒட்டுமொத்த மக்களும் ஒரு சிவில் போராட்டத்தில் இணைந்தனர் என்பதோடு, அதன் உன்னத நோக்கங்களை ஒருபோதும் காட்டிக்கொடுக்காத அளவுக்கு அவர்கள் ஒழுக்கமும் நாகரீகமும் கொண்டவர்கள் என்று நாங்கள் உறுதியாக நம்புகிறோம். ஆனால், அந்தப் போராட்டத்தின் போர்வையில் சில சந்தர்ப்பவாத மற்றும் சீர்குலைக்கும் எண்ணப்பாடுகள்கொண்ட குழுக்களால் மேற்கொள்ளப்பட்ட சொத்துச் சேதங்கள், தீ வைப்புச் சம்பவங்கள், மக்களின் இயல்பு வாழ்க்கையை சீர்குலைக்கும் சிறு சிறு சம்பவங்கள் என்பவற்றை நிபந்தனையின்றி முற்றாக எதிர்க்கிறோம்.

கடந்த சில நாட்களில், பேராட்டக் காரர்கள், சிவில் ஆர்வலர்கள், ஊடகவியலாளர்கள், குடிமக்கள் உட்பட ஏராளமான மக்கள் வன்முறையை எதிர்கொள்ளவேண்டியிருந்ததோடு, இது குறித்தும் விரிவான விசாரணைகள் நடத்தப்பட வேண்டும் என்பதையும் வலியுறுத்துகிறோம்.

வன்முறையற்ற அமைதியான நாட்டிற்காக பாதுகாப்பாக கட்டமைக் கப்பட்ட குடிமக்களின் போராட்டத்திற்கு கறுப்புப் புள்ளிகளை சேர்க்க முயலும் வெளிச் சக்திகள் பற்றி ஒட்டுமொத்த சமூகமும் விழிப்புடன் இருக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

இது மிகவும் முக்கியமான தருணம் என்பதால், அமைதியாகவும், நிதானமாகவும், ஜனநாயகத்தைப் பாதுகாப்பதற்கும் நல்லிணக்கத்தை மேம்படுத்துவதற்கும் ஒன்றுபடுமாறு அனைத்து குடிமக்களையும் நாங்கள் மரியாதையுடன் அழைக்கிறோம் - என்று குறிப்பிடப்பட்டுள்ளது .

## புதன்கிழமை பதவி விலகும்...

மக்கள் போராட்டம் உச்சக்கட்டத்தையடைந்து எதிர்வரும் 13ஆம் திகதி ஜனாதிபதி பதவியில் இருந்து விலகுவதாக ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அறிவித்துள்ளதாக சபாநாயகர் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் இரவு விசேட அறிவிப்பு ஒன்றை வெளியிட்ட சபாநாயகர் மகிந்த யாப்பா அபேவர்தன இதனை குறிப்பிட்டுள்ளார். இதன்படி, ஜூலை 13ஆம் திகதி ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பதவி விலகுவதற்கு தீர்மானித்துள்ளதாக சபாநாயகர் குறிப்பிட்டுள்ளார்.

நாட்டில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடியை தொடர்ந்து அரசாங்கத்திற்கு எதிரான மக்கள் போராட்டம் தீவிரமடைந்திருந்தது. மே மாதம் 9ஆம் திகதி முன்னெடுக்கப்பட்ட மக்கள் போராட்டத்தின் காரணமாக அப்போதைய பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ பதவி விலகியிருந்தார்.

இதனைத் தொடர்ந்து புதிய பிரதமராக ரணில் விக்ரமசிங்க பதவியேற்றிருந்தார். எனினும், நாட்டில் ஏற்பட்டிருந்த பொருளாதார நெருக்கடி மற்றும் அரசியல் நெருக்கடிக்கு தீர்வுகள் கிடைக்கவில்லை.

இந்நிலையிலேயே, நேற்றுமுன்தினம் கொழும்பிலும் நாட்டின் பல்வேறு இடங்களிலும் பெரும் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட் டிருந்தன. இதன்போது ஜனாதிபதியின் உத்தியோகபூர்வ இல்லம் மற்றும் ஜனாதிபதி செயலகம் என்பன போராட்டக்காரர்களினால் முற்றுகையிடப்பட்டிருந்தன.

எனினும், ஜனாதிபதி உள்ளிட்ட முக்கியஸ்தர்கள் பாதுகாப்பான இடங்களுக்கு சென்றுவிட்டதாக தெரிவிக்கப்பட்டிருந்தது. போராட்டம் தீவிரமடைந்திருந்த நிலையில், சனிக்கிழமை மாலை அவசர கட்சித் தலைவர்கள் கூட்டம் இடம்பெற்றிருந்தது.

மேலும், ஆளும் கட்சியைச் சேர்ந்த முக்கிய உறுப்பினர்கள் ஜனாதிபதி உடன் பதவி விலக வேண்டும் எனக் கோரியிருந்த நிலையில், முக்கிய அரசியல் கட்சிகளின் தலைவர்களும் பதவி விலக வேண்டும் என்று கோரிக்கை விடுத்திருந்தனர்.

இந்நிலையிலேயே எதிர்வரும் 13ஆம் திகதி ஜனாதிபதி பதவியிலிருந்து விலகுவதாக ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அறிவித்துள்ளதாக சபாநாயகர் தெரிவித்துள்ளார்.

***கட்சித் தலைவர்கள் கூட்டத்தின் தீர்மானங்கள்***

சபாநாயகரின் உத்தியோகபூர்வ இல்லத்தில் பெரும்பான்மையான கட்சிகளின் தலைவர்கள் மற்றும் கட்சிகளின் பிரதிநிதிகளின் பங்கேற்புடன் கட்சித் தலைவர்கள் கூட்டம் சனிக்கிழமை நடைபெற்றது. இதில் கலந்துகொண்ட பிரதிநிதிகளுடன் தற்பொழுது நாட்டில் ஏற்பட்டுள்ள நிலைமைகள் தொடர்பில் நீண்டநேரம் கலந்துரையாடல் நடைபெற்றது.

இதன்போது பிரதமர் ரணில் விக்ரமசிங்க உள்ளிட்ட கட்சிகளின் பிரதிநிதிகளால் எடுக்கப்பட்ட தீர்மானத்துக்கமைய சபாநாயகர் கடிதமொன்றை ஜனாதிபதிக்கு அனுப்பினார்.

1) ஜனாதிபதி மற்றும் பிரதமர் விரைவில் தமது பதவிகளிலிருந்து இராஜினாமா செய்தல்.

2) நாடாளுமன்ற ஜனநாயக முறைமைக்கு அமைய மற்றும் அரசியலமைப்புக்கு இணங்க அடுத்தகட்டமாகப் பதில் ஜனாதிபதி ஒருவரை நியமிப்பது தொடர்பில் ஏழு நாட்களுக்குள் நாடாளுமன்றத்தைக் கூட்டி பொது இணக்கப் பாட்டுடன் தீர்மானமொன்றை எடுத்தல்.

3) அந்த ஜனாதிபதியின் கீழ் தற்பொழுது நாடாளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் சர்வகட்சிகளையும் சேர்ந்த மக்கள் பிரதிநிதிகளின் இணக்கத்துடன் புதிய பிரதமர் தலைமையில் இடைக்கால அரசாங்கத்தை அமைத்தல்.

4) இதன்பின்னர் குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் தேர்தலை நடத்தி புதிய நாடாளுமன்றத்தைத் தெரிவுசெய்ய மக்களுக்குச் சந்தர்ப்பம் வழங்குதல்.

இதற்கு மேலதிகமாக பிரதமரினால் முன்வைக்கப்பட்ட மூன்று மாற்று யோசனைகளும் ஜனாதிபதியிடம் சுட்டிக்காட்டப்பட்டுள்ளன.

I) உடனடியாக ஜனாதிபதி இராஜினாமா செய்து பிரதமர் பதில் ஜனாதிபதியாகத் தெரிவுசெய் யப்படுதல்.

II) அவ்வாறு நியமிக்கப்பட்டு அனைத்துக் கட்சிகளினையும் ஒன்றிணைத்துப் புதிய பிரதமர் ஓிவரின் தலைமையின் கீழ் இடைக்கால அரசாங்கமொன்றை அமைத்தல்.

அல்லது

I) ஜனாதிபதி, பிரதமர் ஆகிய இருவரும் பதவி விலகி, நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் பதில் ஜனாதிபதியாக நியமிக்கப்பட்டு அதன் பின்னர் சர்வகட்சிகளின் இணக்கத்துடன் புதிய பிரதமர் ஒருவரை நியமித்தல், இடைக்கால அரசாங்கத்தை அமைத்தல் மற்றும் குறிப்பிட்ட காலத்துக்குள் புதிய அரசாங்கத்தை அமைப்பதற்குச் சந்தர்ப்பம் வழங்கல்.

## அமையவுள்ள புதிய...

இலங்கையில் அமையவுள்ள எந்தவொரு புதிய அரசாங்கமும் நீண்ட கால பொருளாதார ஸ்திரத்தன்மையை அடையக்கூடிய மற்றும் இலங்கை மக்களின் அதிருப்தியை நிவர்த்தி செய்யக்கூடிய தீர்வுகளை விரைவாகக் கண்டறிந்து செயற்படுத்த வேண்டும் என அமெரிக்க வெளியுறவுத்துறை செய்தித் தொடர்பாளர் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பதவி விலகத் தயாராகிவரும் நிலையில், அரசியல் கட்சிப் பேதங்களைக் கடந்து தேசத்தின் முன்னேற்றத்திற்கான அர்ப்பணிப்புடன் இந்தத் தருணத்தை அணுகுமாறு இலங்கை நாடாளுமன்றத்திற்கு அமெரிக்கா அழைப்பு விடுக்கிறது - என அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் செய்தித் தொடர்பாளர் கூறியுள்ளார்.

பொருளாதார ஸ்திரத்தன்மையை அடைவதற்கு தூரநோக்குடன் செயற்பட வேண்டும். மின்சாரம், உணவு மற்றும் எரிபொருள் தட்டுப்பாடு உள்ளிட்ட மோசமான பொருளாதார நெருக்கடி நிலைமைகள் தொடர்பான இலங்கை மக்களின் அதிருப்தியை நிவர்த்தி செய்வதற்கான தீர்வுகளை கண்டறிந்து விரைவாக நடைமுறைப்படுத்துமாறு தற்போதைய இலங்கை அரசை அல்லது அரசியலமைப்பு ரீதியாக தெரிவுசெய்யப்படவுள்ள புதிய அரசாங்கத்தையும் நாங்கள் கேட்டுக்கொள்கிறோம் எனவும் அமெரிக்கா தெரிவித்துள்ளது.

எதிர்ப்புப் போராட்டக்காரர்கள் அல்லது பத்திரிகையாளர்கள் மீதான தாக்குதல்கள் குறித்தும் எதிராக அமெரிக்கா எச்சரித்துள்ளது. எனினும், போராட்டங்களின்போது ரணில் விக்ரமசிங்கவின் வீடு எரிக்கப்பட்ட வன்முறைகளையும் அமெரிக்கா விமர்சித்துள்ளது.

அமைதியான முறையில் குரல் எழுப்ப இலங்கை மக்களுக்கு உரிமை உள்ளது. அதேநேரம் போராட்டங்களின்போது வன்முறைச் சம்பவங்களில் ஈடுபட்ட எவரையும் கைதுசெய்து, முழுமையாக விசாரணை மேற்கொள்ளவும் அவர்களுக்கு எதிரான சட்ட நடவடிக்கை எடுக்கவும் நாங்கள் அழைப்பு விடுக்கிறோம். என அமெரிக்க வெளியுறவுத்துறை செய்தித் தொடர்பாளர் தெரிவித்துள்ளார்.

## இலங்கையின் ...

மீண்டும் தொடங்க அனுமதிக்கும் தற்போதைய சூழ்நிலையின் தீர்வை எதிர்பார்ப்பதாகவும் தெரிவித்துள்ளது. "தற்போது நிலவும் பொருளாதார நெருக்கடியின் தாக்கம் மக்கள், குறிப்பாக, ஏழை மற்றும் பாதிக்கப்படக்கூடிய குழுக்கள் மீது நாங்கள் ஆழ்ந்த அக்கறை கொண்டுள்ளோம், மேலும் சர்வதேச நாணய நிதியத்தின் கொள்கைகளுக்கிணங்க, இந்த கடினமான நேரத்தில் இலங்கைக்கு ஆதரவளிப்பதற்கான எங்கள் உறுதிப்பாட்டை மீண்டும் உறுதிப்படுத்துகிறோம்" - என்று சர்வதேச நாணய நிதியம் தெரிவித் துள்ளது.

நிதியமைச்சு மற்றும் இலங்கை மத்திய வங்கியுடன் தொழில்நுட்ப கலந்துரையாடல்களை தொடரும் என சர்வதேச நாணய நிதியம் மேலும் தெரிவித்துள்ளது.

## ரணிலின் வீடு...

பிரதமர் ரணில் விக்ரமசிங்கவின் தனிப்பட்ட இல்லத்திற்கு நேற்றுமுன்தினம் இரவு 8 மணியளவில் கும்பலொன்று தீ வைத்ததில் வீடு முற்றாக தீக்கிரையானது. பெறுமதிவாய்ந்த புத்தகங்கள் உட்பட்ட பொருட்கள் எரிந்துபோயின.

நேற்றுமுன்தினம் (9) அரசுக்கு எதிராக கொழும்பில் திரண்ட மக்கள், ஜனாதிபதி மாளிகை, ஜனாதிபதி செயலகத்தை கைப்பற்றியதை தொடர்ந்து, பிரதமரின் தனிப்பட்ட இல்லத்திற்கு தீ வைக்கப்பட்டது.

விக்ரமசிங்கவை பிரதமர் பதவியிலிருந்து விலகக் கோரி நேற்றுமுன்தினம் மாலை முதல் கொள்ளுப்பிட்டி 5ஆவது லேனில் அமைந்துள்ள இல்லத்திற்கு வெளியே சுமார் 200 பேர் கொண்ட கூட்டம் ஒன்று கூடியிருந்தது. நண்பகல் நேரம் போராட்டக்காரர்கள் குடியிருப்பை நோக்கி செல்ல முயன்றபோது, பொலிஸார் கண்ணீர்ப் புகை மற்றும் தண்ணீர்ப் பீரங்கிகளை வீசினர்.

பொலிஸ் மற்றும் விசேட அதிரடிப்படையினர் குடியிருப்புக்கு வெளியே நின்றிருந்த தனியார் தொலைக்காட்சி ஒன்றின் பல ஊடகவியலாளர்கள் மீதும் தாக்குதல் நடத்தியுள்ளனர். இந்தத் தாக்குதலைத் தொடர்ந்து வலையமைப்புடன் இணைக்கப்பட்ட மொத்தம் ஆறு ஊடகவியலாளர்கள் காயமடைந்து மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

தாக்குதல் பற்றிய செய்தி பரவியதும், ஒரு பெரிய குழு அந்த இடத்தில் குவியத் தொடங்கியது. ஒரு பொலிஸ் பஸ் ஒன்றும் தகர்க்கப்பட்டது.

**ரணில் அறிக்கை**

ஊடகவியலாளர்கள் மீதான தாக்குதலுக்கு விக்ரமசிங்க வருந்துவதாக பிரதமர் அலுவலகம் அறிக்கை ஒன்றை வெளியிட்டது.

இந்த சமயத்தில், சம்பவ இடத்துக்கு புதிதாக வந்த குழுவொன்று, ஊடகவியலாளர்கள் மீதான தாக்குதலுக்கு பதிலடி கொடுக்கவேண்டுமென போராட்டத்தில் ஈடுபட்டிருந்தவர்களை தூண்டிவிட்டுக் கொண்டிருந்ததாக அங்கிருந்த செய்தியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இறுதியில் ஒரு குழு பாதுகாப்புத் தடுப்புகளை உடைத்து, இரவு 9 மணியளவில் பிரதமரின் வீட்டுக்குள் நுழைந்து, தீ வைத்து எரித்தது.

தீயணைப்பு வாகனம் வந்ததும், பிரதமரின் தனிப்பட்ட இல்லத்தில் தீயை அணைக்கவிடாமல் தீயணைப்பு வீரர்களையும் அந்தக் குழுவினர் தடுத்துள்ளனர். எனினும், பக்கத்து வீடுகளில் இருந்தோர் தீயணைப்புப் பணி மேற்கொள்ள அனுமதித்துள்ளனர். இதன்போது, தீயணைப்பு வாகனத்தையும் போராட்டக்காரர் ஒருவர் கட்டுப்பாட்டில் எடுத்தார்.

இரண்டு வாகனங்கள் அனுப்பப்பட்ட போதும், பிரதமரின் இல்லத்தில் தீயணைப்புப் பணி மேற்கொள்ள அனுமதிக்கப்படவில்லை. எவ்வாறாயினும் நேற்றுமுன்தினம் இரவு பற்றவைக்கப்பட்ட தீ நேற்று அதிகாலையே கட்டுக்குள் கொண்டுவரப்பட்டது.

இதற்கிடையில், இந்த தீவைப்புச் சம்பவம் தொடர்பில் மூவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர். குற்றப்புலனாய்வு விசாரணைகளை நடத்தி வருகின்றனர். இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் பலர் கைதுசெய்யப்படவுள்ளனர்.

# கோட்டாவுக்கு நடந்த கதி





## போரை வென்ற பெருந்தகை என்ற நாமம் அழிந்து, புகழ்ந்த மக்களாலேயே இகழப்பட்ட துயரம்

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பதவியிலிருந்து அகற்றப்பட வேண்டும் எனக் கோரி முன்னெடுக்கப்பட்ட போராட்டம் வெற்றியளித்துள்ளது.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை பதவி விலகுமாறு கோரி 92 நாட்களுக்கு மேலாக முன்னெடுக்கப்பட்ட போராட்டத்திற்கு மத்தியில் அவர் பதவி விலகாதமையினால், உடனடியாக பதவி விலகவேண்டுமென மீண்டும் அழுத்தம் கொடுப்பதற்காக கடந்த 9ஆம் திகதி முழு நாட்டு மக்களும் கொழும்புக்கு என்ற பாரிய போராட்டத்தினால் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தன்னுடைய பதவியிலிருந்து விலகுவதாக அறிவித்துள்ளார்.

இலங்கை வரலாற்றில் முதல் முறையாக ஜனாதிபதி ஒருவரின் உத்தியோகபூர்வ இல்லம் மற்றும் செயலகம் என்பன முற்றுகையிடப்பட்டு, மக்களின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டுள்ளது.

**அரசுக்கு எதிரான போராட்டம்**

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ உள்ளிட்ட அரசாங்கம் பதவி விலக வேண்டும் எனக் கோரி கடந்த ஏப்ரல் 9ஆம் திகதி போராட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டன. அன்று தொடக்கம், காலிமுகத்திடலில் 'கோட்டா கோ கம' என்ற கிராமத்தை அமைத்து, 'கோ ஹோம் கோட்டா' என்ற போராட்டத்தைத் தொடர்ந்து முன்னெடுத்து வருகின்றனர்.

இந்தப் போராட்டம் நாளுக்கு நாள் உக்கிரமடைந்ததோடு, நாடு முழுவதும் கோட்டா – மஹிந்த அரசாங்கத்திற்கு கடும் எதிர்ப்புகள் முன்வைக்கப்பட்டன. அத்தோடு, இருவரும் பதவி விலக மறுத்தமையினால் அலரிமாளிகைக்கு முன்பாகவும் 'மைனா கோ கம' என்ற கிராமத்தை உருவாக்கி, முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவையும் பதவி விலகுமாறு வலியுறுத்தினர். எனினும், ஜனாதிபதி பதவி விலகாது பிரதமர் தலைமையிலான அரசாங்கத்தை பதவி விலகுவதற்கு அறிவுறுத்தல் வழங்கியதால், முழு அமைச்சரவையும் பதவி விலகியது.

எனினும், பிரதமர் பதவி விலகாது தன்னுடைய பலத்தைக் காட்டுவதற்காக மே 9ஆம் திகதி தன்னுடைய ஆதரவாளர்களை கொழும்புக்கு அழைத்து, 'கோட்டா கோ கம' மற்றும் 'மைனா கோ கம' ஆகிய போராட்டக்காரர்களை தாக்கி நாட்டில் பெரும் வன்முறையைத் தூண்டினார். இதனால், ஆத்திரமடைந்த பொதுமக்கள்



உறுப்பினர்களின் வீடுகளை அடித்து நொறுக்கி, தீயிட்டுக் கொளுத்தினர்.

இதனையடுத்து, அவர் தன்னுடைய பிரதமர் பதவியை இராஜினாமா செய்தார். பின்னர் இடைக்கால அரசாங்கத்துக்கு அழைப்பு விடுக்கப்பட்டபோதிலும், யாரும் முன்வராதமையினால் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்ரமசிங்கவை பிரதமராக நியமித்தார் ஜனாதிபதி. எனினும், கோட்டாபய – ரணில் அரசாங்கத்திற்கும் எதிர்ப்புகள் கிளம்பின.

இதற்கிடையில் அரசாங்கத்தின் புதிய அமைச்சரவையுடன் நாட்டின் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்ட நிலையில், கடந்த ஜூன் 9ஆம் திகதி முன்னாள் நிதி அமைச்சர் பெசில் ராஜபக்ஷ தன்னுடைய தேசியப்பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர் பதவியிலிருந்து விலகினார். இவருடைய வெற்றிடத்திற்கு பிரபல வர்த்தகர் தம்மிக்க பெரேரா நியமிக்கப்பட்டு, அவருக்கு முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சும் வழங்கப்பட்டது.

எனினும், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பதவி விலக வேண்டும். அவருடன் பிரதமரும் பதவி விலக வேண்டும் என்ற அழுத்தங்கள் தொடர்ந்தும் முன்வைக்கப்பட்டன. இந்த நிலையில், 9ஆம் திகதிகளில் ராஜபக்ஷக்களின் குடும்ப உறுப்பினர்கள் பதவி விலகியதால், ஜூலை 9ஆம் திகதி ஜனாதிபதியை பதவியிலிருந்து விலக்கவேண்டும் என போராட்டங்கள் ஏற்பாடு செய்யப்பட்டன.

**9ஆம் திகதி போராட்டம்**

ஜனாதிபதியும் 9ஆம் திகதியே பதவியிலிருந்து நீங்கவேண்டும் என காலிமுகத்திடலிலிருந்து போராட்டக்காரர்கள் பாரிய போராட்டம் ஒன்றை முன்னெடுப்பதற்கு ஏற்பாடுசெய்தனர்.

இப்போராட்டத்திற்கு முழு நாட்டு மக்களும் கலந்துகொண்டு, கொழும்பிலுள்ள ஜனாதிபதி செயலகம் மற்றும் மாளிகையை முற்றுகையிடுவதற்கும் அழைப்பு விடுத்திருந்தனர்.

அதன்படி, 'முழு நாட்டு மக்களும் 9ஆம் திகதி கொழும்புக்கு' என்ற தொனியில் இந்த போராட்டம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்ததுடன், அனைத்து பகுதிகளிலிருந்தும் மக்கள் கொழும்புக்கு வருவதற்கான ஏற்பாடுகளும் முன்னெடுக்கப்பட்டிந்தன.

**கொழும்புக்கு வந்த பல்கலை மாணவர்கள்**

9ஆம் திகதிக்கு ஆதரவு தெரிவிப்பதற்காக 8ஆம் திகதி காலை ஒன்றிணைந்த பல்கலைக்கழக மாணவர்கள் பாரிய ஆர்ப்பாட்டப் பேரணி ஒன்றை முன்னெடுத்து, காலிமுகத்திடலை நோக்கி வந்தனர். எனினும், அவர்களை தடுப்பதற்காக தடுப்புவேலிகள் அமைக்கப்பட்டிருந்தபோதிலும் அதனை தகர்த்தெறிந்து, முன்னேறிச் சென்றபோது, அவர்களை கலைப்பதற்கு பொலிஸாரினால் தண்ணீர்த் தாரை மற்றும் கண்ணீர்ப் புகை தாக்குதலும் நடத்தப்பட்டது. அதனை மீறியும் போராட்டக்காரர்கள் முன்னோக்கிச் சென்று, காலிமுகத்திடலில் அன்றிரவு தங்கி போராட்டத்தை முன்னெடுத்தனர்.

**ஊரடங்கு அமுல்**

9ஆம் திகதி முன்னெடுத்த போராட்டத்தை தடுப்பதற்கும் அப்போராட்டத்திற்கு வெளி மாவட்டங்களிலிருந்து வருகைதரும் மக்களை கட்டுப்படுத்துவதற்கும் 8ஆம் திகதி இரவு 9 மணிக்கு மறு அறிவித்தல்வரை மேல்மாகாணத்தில் பல பகுதிகளில் ஊரடங்கு சட்டம் அமுல்ப்படுத்தப்பட்டது. எனினும், 9ஆம் திகதி காலை காலிமுகத்திடலில் போராட்டம் முன்னெடுக்க ஆரம்பித்தவுடன், கொழும்பின் பல பகுதிகளில் மக்கள் வீதிக்கு இறங்கும் நிலை இருந்தமையினால், 9ஆம் திகதி காலை 8 மணிக்கு பொலிஸ் ஊரடங்குச் சட்டம் நீக்கப்படடது.

**வலுபெற்ற போராட்டம்**

ஊரடங்குச் சட்டம் நீக்கப்பட்டதோடு, நாட்டின் பல பகுதிகளிலிருந்து வருகைதந்த மக்களால் 9ஆம் திகதி போராட்டம் வலுபெற ஆரம்பித்தது. கோட்டை புகையிரத நிலையத்திற்கு முன்பாக ஆரம்பித்த பேரணி காலிமுகத்திடலை நோக்கிச் சென்றமையினால், லோட்டஸ் வீதி, காலிமுகத்திடல் வீதி, ஜனாதிபதி மாளிகை வீதி என அனைத்துப் பகுதிகளும் தடுப்புவேலிகளால் முடக்கப்பட்டிருந்தன.

எனினும், பல பகுதிகளிலிருந்து வருகைதந்த போராட்டக்காரர்களால் அனைத்து வீதிகளும் சுற்றிவளைக்கப்பட்டமையினால் தடுப்புவேலிகள் தகர்த்தெறிவதற்கான முயற்சிகளை முன்னெடுத்த போராட்டக்காரர்களை கலைப்பதற்கு பொலிஸார் தண்ணீர்த் தாரை மற்றும் கண்ணீர்ப் புகை தாக்குதலை முன்னெடுத்தனர்.

நேரம் செல்லச் செல்ல போராட்டக் களத்திற்கு அதிகமான மக்கள் வருகை தந்தமையினால், தாக்குதல்களையும் மீறி போராட்டக்காரர்கள் ஜனாதிபதி மாளிகையை நோக்கி முன்னேறினர். அதேபோன்று, வெள்ளவத்தை, கொள்ளுப்பிட்டி போன்ற பகுதிகளிலிருந்து ஜனாதிபதி செயலகத்தை நோக்கி மக்கள் வருகை தந்ததால் காலிமுகத்திடல் முழுவதும் மக்கள் வெள்ளத்தால் மூழ்கிப்போனது.

இதற்கிடையில் நாட்டில் எரிபொருள் தட்டுப்பாட்டினால் தனிப்பட்ட வாகனங்களில் வந்து போராட்டத்தில கலந்துகொள்ள



முடியாதமையினால், புகையிரதத்திற்கு மேல் ஏறியும் மக்கள் கொழும்பிற்கு வருகை தந்தனர். மேலும் கொழும்புக்கு அண்மையிலுள்ள மக்கள் நடைபாதையாக வந்து போராட்டத்தில் கலந்துகொண்டதுடன், லொறி உள்ளிட்ட வாகனங்களிலும் வந்த இலட்சக்கணக்கான மக்கள் கொழும்பை முற்றுகையிட்டனர்.

ஜனாதிபதி செயலகம் மற்றும் ஜனாதிபதி மாளிகையை முற்றுகையிடுவதற்கான நாலாபுறமும் மக்கள் திரண்டமையினால் அவர்களை தடுப்பதற்கு பல பகுதிகளில் தண்ணீர்த் தாரை மற்றும் கண்ணீர்ப் புகைத் தாக்குதலும் தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டன. எனினும், மக்கள் அலையை சமாளிக்க முடியாத பொலிஸாரும் பொலிஸ் அதிரடிப் படையினரும் அவ்விடத்தை விட்டு பின்னோக்கி நகர்ந்தனர்.

இவர்களையும் தாண்டி ஜனாதிபதி மாளிகையை முற்றுகையிடுவதற்கு மக்கள் முன்னோக்கிச் சென்றபோது துப்பாக்கிப் பிரயோகமும் முன்னெடுக்கப்பட்டது. எனினும், அவற்றையும் மீறி ஜனாதிபதி செயலகத்தின் நுழைவாயில்களை உடைத்துக்கொண்டு, உள்நுழைந்து ஜனாதிபதி மாளிகையை மக்கள் முற்றுகையிட்டனர். குறிப்பாக, பொலிஸாருக்குச் சொந்தமான லொறியொன்றைக்கொண்டே ஜனாதிபதி மாளிகையின் நுழைவாயிலை உடைத்தனர்.

எனினும், ஜனாதிபதியோ அல்லது அவருக்கு நெருக்கமான யாரும் மாளிகைக்குள் இருக்கவில்லை. ஆனால், அங்கு சேவையிலிருந்த பணியாட்களும் வரவேற்பறையில் தங்கியிருந்ததுடன், பாதுகாப்பு சேவையிலிருந்த பாதுகாப்புப் பிரிவினரும் தங்களுடைய பாதுகாப்புக் கருதி அங்கிருந்து வெளியேறியதையும் காணமுடிந்தது. குறிப்பாக, பாதுகாப்புப் படையினர் உள்ளே இருந்தால் போராட்டக்காரர்கள் ஆத்திரமடையக் கூடும் எனக்கூறி அவர்களை அங்கிருந்து வெளியேறு மாறும் ஏற்பாட்டாளர்கள் வலியுறுத்தியிருந்தனர்.

ஜனாதிபதி மாளிகை முற்றுகையிடப்பட்ட சற்று நேரத்தில் கடும் பாதுகாப்பு மற்றும் தண்ணீர்த் தாரை மற்றும் கண்ணீர்ப் புகைத் தாக்குதல் நடத்தப்பட்ட ஜனாதிபதி செயலகத்தின் நுழைவாயிலையும் உடைத்துக்கொண்டுசென்ற மக்கள் ஜனாதிபதி செயலகத்தையும் முற்றுகையிட்டனர்.

நேற்றுமுன்தினம் நண்பகல் ஜனாதிபதி செலயகம் மற்றும் மாளிகையை முற்றுகையிட்ட மக்கள் அங்கிருந்து வெளியேறாது, உள்ளேயே தங்கி போராட்டத்தை முன்னெடுத்து வருகின்றனர். மக்களால் வசப்படுத்தப்பட்ட ஜனாதிபதி மாளிகைக்குள் இருந்த நீச்சல் தடாகத்தில் குளித்து மகிழ்ந்த மக்கள், அங்குள்ள பூந்தோட்டத்திற்கும் சென்று கண்டுகளித்தனர். அத்தோடு, இதுவரை ஜனாதிபதி மாளிகையை பார்ப்பதற்கு மக்களுக்கு வாய்ப்பு கிடைக்காதமையினால், போராட்டத்திற்கு வருகைதந்த அனைத்து மக்களும் நேற்று முன்தினம் மாளிகையை பார்வையிடுவதற்கு கூட்டம் கூட்டமாக வருகை தந்தனர்.

9ஆம் திகதி இரவு ஜனாதிபதி மாளிகையில் தங்கிய போராட்டக்காரர்கள் அங்குள்ள உணவுப் பொருட்களை கொண்டு சமைத்து உண்டு மகிழ்ந்ததோடு, அங்குள்ள அறைகளிலேயே உறங்கி எழும்பி போராட்டத்தை தொடர்கின்றனர். மேலும் அங்கிருந்து தொலைக்காட்சியில் காண்பிக்கப்பட்ட செய்திகளின் ஊடாக வெளியில் நடக்கும் சம்பவங்களையும் கண்டுகளித்தனர். இதேவேளை, ஜனாதிபதி மாளிகையில் இருந்த 50 இலட்சம் ரூபா பணத்தையும் எடுத்த போராட்டக்காரர்கள் அதனை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைந்தனர்.

**அலரிமாளிகையும் முற்றுகை**

ஜனாதிபதி செயலகம் மற்றும் மாளிகையை முற்றுகையிட்ட கையோடு, நேற்றுமுன்தினம் மாலை குறிப்பிட்ட சிலர் அலரிமாளிகைக்குள்ளும் நுழைந்தமையால், அப்பகுதியில் போராட்டத்தில் ஈடுபட்டிருந்த மக்களால் அலரிமாளிகையும் முற்றுகையிடப்பட்டதுடன், அங்குள்ள காரியாலயமும் இனந்தெரியாதோரால்



உடைக்கப்பட்டிருந்தது. எனினும், நேற்று காலை அலரிமாளிகையின் பாதுகாப்புகள் பலப்படுத்தப்பட்டு பாதுகாப்புத்துறையினரின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டது.

**போராட்டத்தில் 96 பேர் காயம்**

போராட்டத்தின்போது ஏற்பட்ட முரண்பாடுகள் மற்றும் துப்பாக்கிச்சூட்டில் 96 பேர் படுகாயமடைந்து, கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர். இவர்களில் மூவரின் நிலைமை கவலைக்கிடமாக இருப்பதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

இதேவேளை, சிலருக்கு தலையில் ஏற்பட்ட காயங்கள், துப்பாக்கிச்சூட்டினால் ஏற்பட்ட காயங்கள் என வைத்திய பரிசோதனைகளில் தெரியவந்துள்ளதாகவும் கூறப்பட்டுள்ளது. பிரதமரின் வீட்டுக்கு முன்பாக இடம்பெற்ற போராட்டத்தில் செய்தி சேகரிப்பில் ஈடுபட்ட பிரதான ஊடகமொன்றின் ஊடகவியலாளர்கள் நால்வர் மற்றும் ஏனைய சில ஊடகவியலாளர்களும் பொலிஸ் அதிரடி படையினரினால் காட்டுமிராண்டித்தனமாக தாக்கப்பட்டு வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இதனையடுத்து, தாக்குதல் நடத்திய அதிரடிப் படையினர் பணி இடைநீக்கம் செய்யப்பட்டு, பொலிஸ் விசாரணைகளும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

**யோ.தர்மராஜ்**







# இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் உத்தேச கூட்டமைப்புக்கு இந்தியா தலைமைதாங்க வேண்டும்



இலங்கை பொருளாதார நெருக்கடி குறித்து பொருளாதார நிபுணர் கலாநிதி

**கணேசன் விக்னராஜா**




கடன் நெருக்கடியில் திணறிக்கொண்டிருக்கும் இலங்கைக்கு உதவுவதில் சீனா ஒரு திரிசங்கு நிலையில் இருக்கின்ற அதேவேளை, ஏனைய உலக நாடுகளும் ஐயவுணர்வைக் கொண்டிருக்கின்றன. சர்வதேச நாணய நிதியத்திடமிருந்து உதவி கிடைப்பதற்கும் காலம் எடுக்கும் என்பதால் உத்தேச உதவி வழங்கும் நாடுகள் கூட்டமைப்புக்கு (Aid Consortium) தலைமை தாங்குவதன் மூலம் பொருளாதார நெருக்கடியிலிருந்து இலங்கையை மீட்டெடுப்பதில் இந்தியா அதன் பங்கை ஆழமாக்கமுடியும் என்று சிங்கப்பூர் தேசிய பல்கலைக்கழகத்தின் சிரேஷ்ட ஆய்வாளரான கலாநிதி கணேசன் விக்னராஜா கருத்து வெளியிட்டிருக்கிறார்.

இலங்கையுடன் ஆழமான பிணைப்புகளைக்கொண்ட பொருளியல் நிபுணரான அவர், இலங்கைக்கான தெரிவுகள் குறுகிக்கொண்டு வருகின்றன என்றும் இலங்கையை நெருக்கடியிலிருந்து மீட்பது இந்தியாவின் நலன்களுக்கு உகந்தது எனறும் குறிப்பிட்டிருக்கிறார். தற்போதைய மனிதாபிமான மற்றும் உதவு உறவுகளுக்கு அப்பால் வாணிப மற்றும் முதலீட்டு உறவுமுறைகளை இந்தியா ஆழமாக்க முடியும் என்றும் அவர் கூறுகிறார்.

தொடர் கடன்கள் (Credit lines), தவணைக் கடன்கள் (Term loans) மற்றும் கடன் மீள்செலுத்துகை தாமதிப்பு Deffered loans) என்ற கூட்டு முறைகளில் இலங்கைக்கு இவ்வருடம் சுமார் 350 கோடி டொலர்கள் வழங்கியதன் மூலம் இலங்கையை மீட்பதற்கான முயற்சிகளில் முதலில் இறங்கிய நாடாக இந்தியா விளங்குகிறது. ஆனால், இலங்கை எரிபொருட்களைப் பெறுவதற்கு வசதியாக அமைந்த தொடர்கடன்கள் ஜூனில் ஒரு முடிவுக்கு வந்ததால் எரிபொருட்கள் கையிருப்பு தீர்ந்துபோனதையடுத்து நாடு ஒரு ஸ்தம்பித நிலைக்கு வந்திருக்கிறது.

தொடர்ந்து வீழ்ச்சி கண்டுவரும் பொருளாதாரத்தை ஓரளவுக்கேனும் கண்ணியமான ஒரு தளத்துக்கு கொண்டுவந்து வளர்ச்சியை மீண்டும் முடுக்கிவிடுவதற்கு அடுத்த மூன்று வருடங்களுக்கு இலங்கைக்கு குறைந்தபட்சம் 2000 -- 2500 கோடி டொலர்கள் தேவைப்படுகிறது என்று கலாநிதி விக்னராஜா மதிப்பிட்டிருக்கிறார்.

பொருளாதாரம் தொடர்ச்சியாக வீழ்ச்சி கண்டுபோகின்ற அதேவேளை, ஆயிரக்கணக்கானவர்கள் தொழில்வாய்ப்புகளை இழக்கக்கூடியதாகவும் இலட்சக் கணக்கானவர்கள் வறுமைக்குள் தள்ளுப் படக்கூடியதாகவும் கடுமையான பணவீக்கத்துடன் கூடிய பொருளாதார மந்தநிலைக்குள் இலங்கை சிக்கக்கூடும் என்று அவர் அச்சம் தெரிவிக்கிறார்.

“இலங்கையின் பொருளாதாரத்தை உறுதிநிலைப்படுத்துவது இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியின் அயலகத்துக்கு முதலிடம் என்ற கொள்கைக்கு பெரிய வெற்றியாக அமையமுடியும். இவ்வருடம் இலங்கைக்கு இந்தியா வழங்கிய உதவியே அது எந்தவொரு நாட்டுக்கும் வழங்கியிருக்கக்கூடிய மிகப்பெரிய இருதரப்பு உதவியாகும்.

“இதைவிடவும் மேலும் கூடுதலான அளவுக்கு இந்தியாவால் இலங்கைக்கு உதவமுடியும் என்று நான் நினைக்கிறேன். இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் உத்தேச கூட்டமைப்புக்கு இந்தியா தலைமை தாங்க முடியும். அதன்மூலமாக சர்வதேச நாணய நிதியத்துடனும் ஏனைய நட்புநாடுகளுடனும் ஒன்றிணைந்து அடுத்த மூன்று வருடங்களுக்கு இலங்கைக்கு 2000-2500 கோடி டொலர்கள் கிடைப்பதற்கு நடவடிக்கை எடுக்கலாம்.

“உதவிகளைப் பெறுவதில் இலங்கை உண்மையில் பெரும் சிக்கலை எதிர் நோக்கியிருக்கிறது. உலகின் வறிய நாடுகளில் 60 சதவீதமானவை ஏதோ ஒருவகையில் கடன் நெருக்கடியில் சிக்கியிருக்கின்றன. பல தசாப்தங்களாக விலைவாசி அதிகரித்துவருவதற்கு மத்தியில் உலகளாவிய பொருளாதார மந்தநிலை ஏற்படக்கூடிய ஆபத்தும் இருக்கிறது. அதனால் உலகின் ஏனைய நாடுகள் இலங்கைக்கு ஆதரவளிப்பதில் கடுமையான மட்டுப்பாடுகள் ஏற்படலாம்.

“பலவீனமான ஆட்சிமுறை மற்றும் தவறான பொருளாதார முகாமைத்துவம் ஆகியவற்றின் விளைவாக இலங்கை தனக்குத்தானே இன்றைய நெருக்கடி நிலையை ஏற்படுத்திக்கொண்டு கடன்களை மீளச்செலுத்த முடியாமல் வங்குரோத்து அடைந்திருக்கும் நிலையில் இலங்கை போன்ற தோல்வி கண்ட ஒரு பொருளாதாரத்தை மீட்டெடுக்க இன்னொரு நாட்டின் வரியிறுப்பாளர்கள் ஏன் முன்வர வேண்டும் என்ற கேள்வியும் எழுகிறது.

“நெருங்கிய நட்புநாடாக இருக்கின்ற போதிலும் இலங்கையை மீட்டெடுப்பதில் சீனா ஓர் இக்கட்டான நிலையை எதிர்நோக்குகிறது. ஏனென்றால், இலங்கைக்கு இன்றைய கட்டத்தில் உதவினால், உலகின் இரண்டாவது பெரிய பொருளாதாரமாக விளங்கும் சீனாவிடம் கடனைப்பெற்று கடன் நெருக்கடியிலுள்ள நாடுகள் கடன் மறுசீரமைப்பைச் செய்யுமாறு வரிசையில் வந்துநிற்கும் என்று பீஜிங் நினைக்கிறது. அதனால் இலங்கைக்கு உதவுவது தவறான முன்னுதாரணத்தை ஏற்படுத்திவிடும் என்று சீனர்கள் கருதுகிறார்கள். மறுபுறத்தில் தோல்வி கண்ட பொருளாதாரம் ஒன்றுக்கு உதவுவதன் மூலம் உலகரங்கில் தனது பெயருக்குக் களங்கத்தை ஏற்படுத்தவும் சீனா விரும்புவதாக இல்லை.

“இலங்கையின் கட்களை ஒருதலைப்பட்சமாக மறுசீரமைப்பு செய்தால் அல்லது கடனை மீளப்பெறுவதை தற்காலிகமாக இடைநிறுத்தினைால் தனது கடன் வழங்கும் நடைமுறைகளில் தவறான முன்னுதாரணத்தை ஏற்படுத்துவதாக இருக்கும் என்று சீனா விசனப்படுகிறது. சீனாவினால் நடைமுறைப்படுத்தப்பட்ட மண்டலமும் பாதையும் செயற்றிட்டத்தின் (Belt and Road Initiative) கீழான திட்டங்களுக்கு பெருமளவு கடனுதவிகளைப் பெற்ற நாடுகள் இலங்கைக்கு செய்ததைப்போன்று தங்களுக்கும் செய்யுமாறு கேட்டு வரிசையில் வந்துநிற்கும் என்பது சீனர்களின் கவலை.

“சீனாவுக்கு இரண்டாவது பிரச்சினையொன்றும் இருக்கிறது. உலகின் இரண்டாவது பெரிய பொருளாதாரமான சீனா, அமெரிக்காவுக்கு போட்டியாக இயங்குகிறது. தோல்வி கண்ட பொருளாதாரமொன்றுக்கு உதவுவதன் மூலமாக தனது பெயரைக் கெடுத்துக்கொள்ள சீனா விரும்பாது. பீஜிங்கைப் பொறுத்தவரை இது முக்கியமான ஒரு மதிப்பு சம்பந்தப்பட்ட பிரச்சினையாகும். அத்துடன், கொரோனா வைரஸ் பெருந்தொற்றின் விளைவான பாதிப்புகளினால் சீனப் பொருளாதாரமும் பிரச்சினைகளை எதிர்நோக்கி வளர்ச்சியில் பின்னடைவு ஏற்பட்டிருக்கிறது.

“பொருளாதார நெருக்கடியிலிருந்து மீள்வதற்கு சர்வதேச நாணய நிதியத்திடமிருந்து கிடைக்கக்கூடிய உதவியே இலங்கைக்கு தற்போதைக்கு இருக்கக்கூடிய ஒரே தெரிவு. ஆனால், அது கிடைப்பதற்கு காலம் எடுக்கும். சர்வதேச நாணய நிதியத்தின் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதில் ஒளிவுமறைவற்ற முறையிலும் நம்பகத்தன்மையுடனும் செயற்பட்டு தனது பொருளாதாரத்தை நிலைபேறான ஒன்றாக மாற்றுவதில் உண்மையில் அக்கறையுடன் கடப்பாட்டைக் கொண்டிருப்பதாக உலகிற்கு இலங்கை காண்பிக்கவேண்டும்.

“இலங்கை ஏற்கெனவே 16 தடவைகள் சர்வதேச நாணய நிதியத்தை நாடியிருந்தது. நிதியத்தினால் விதந்துரைக்கப்பட்ட கொள்கைகளை முறையாக பின்பற்ற கொழும்பு தவறியது. அதனால் இத்தடவை இலங்கை கடுமையான கண்காணிப்புக்கு உட்படக்கூடும். சர்வதேச நாணய நிதியத்தின் திட்டத்துக்கு தேசிய கருத்தொருமிப்பைக் கட்டியெழுப்புவதும் முக்கியமானதாகும்.

“ஏனென்றால் சர்வதேச நாணய நிதியத்தை மறந்துவிட்டு நாம் மத்தலவில் வற்றாளக் கிழங்கு பயிரிடுவோம் என்று சொல்பவர்கள் இன்னமும் இருக்கிறார்கள். தற்போதைய நிதி நெருக்கடியில் இதுவெல்லாம் சரிவராது. வெளிநாட்டு உதவிகள் நேர்மையான முறையில் பகிரப்படுவதையும் அவ்வுதவிகள் வேறு நோக்கங்களுக்கு திசைதிருப்பப்படாதிருப்பதையும் உறுதிசெய்வதற்கு சர்வதேச நாணய நிதியத்தின் திட்டத்தை பகிரங்கப்படுத்துவதுடன், கடுமையான ஊழல் எதிர்ப்பு நடவடிக்கைகளையும் முன்னெடுக்கவேண்டும்.

இலங்கை அணிசேரா வெளியுறவுக்கொள்கை யொன்றை பின்பற்றவேண்டும்” என்று கலாநிதி விக்னராஜா இலங்கை மத்திய வங்கியில் நடத்தப்பட்ட இணையவழி கருத்தரங்கில் விளக்கிக் கூறினார்.

# பொரிஸ் ஜோன்சன் வீழ்ந்த கதை...!

**எஸ். ராஜாராம்**

பிரிட்டிஷ் பிரதமர் பொரிஸ் ஜோன்சன் தனது பதவியை இராஜினாமா செய்திருப்பது எதிர்பார்க்கப்பட்டதுதான். ஆனால், கடந்த பொதுத் தேர்தலில் ஆளும் கன்சர்வேடிவ் கட்சியின் தலைவராக கட்சிக்கு இமாலய வெற்றியைப் பெற்றுத்தந்த அவர், மூன்றே ஆண்டுகளில் கட்சியின் நம்பிக்கையை இழந்து விலகியிருப்பதில் ஆச்சரியப்படுவதற்கு நிறைய விடயங்கள் உள்ளன.

ஐரோப்பிய ஒன்றியத்திலிருந்து பிரிட்டன் வெளியேறும் 'பிரக்ஸிட்' பிரசாரத்தை முன்னின்று மேற்கொண்டவர்களில் ஒருவரான பொரிஸ் ஜோன்சன், முன்னாள் பிரதமர் தெரசா மே தலைமையிலான ஆட்சியின்போது 2016-18 வரை வெளியுறவு அமைச்சராக இருந்தார். பிரக்ஸிட் விவகாரத்தில் அரசு மென்மையான போக்குடன் நடந்துகொள்வதாக அதிருப்தி தெரிவித்து அமைச்சர் பொறுப்பிலிருந்து விலகவும் செய்தார்.

2019இல் தெரசா மே பிரதமர் பதவியிலிருந்து விலகியதைத் தொடர்ந்து, அதே ஆண்டு, ஜூலையில் ஆளும் கன்சர்வேடிவ் கட்சியின் தலைவராக பொரிஸ் ஜோன்சன் தெரிவுசெய்யப்பட்டார். பிரிட்டனில் ஆளும் கட்சியின் தலைவரே பிரதமராவார் என்ற அடிப்படையில் பிரதமராகவும் பதவியேற்றார்.

பிரக்ஸிட் ஒப்பந்தத்தை நிறைவுசெய்ய நாடாளுமன்றத்தில் வலுவான பெரும்பான்மையைப் பெற விரும்பிய அவர் முன்கூட்டியே 2019இல் நாடாளுமன்றத் தேர்தலையும் சந்தித்தார். முழுவதும் பிரக்ஸிட்டை மையப்படுத்திய அவரது பிரசாரத்துக்கு பிரிட்டன் மக்கள் பேராதரவு அளித்தனர். அதன்படி, அத்தேர்தலில் பொரிஸ் ஜோன்சன் தலைமையிலான கன்சர்வேடிவ் கட்சி மொத்தம் உள்ள 650 இடங்களில் 356ஐ (56 சதவீதம்) கைப்பற்றி சாதனை படைத்தது. 1983இல் மார்க்ரெட் தட்சர் தலைமையில் கன்சர்வேடிவ் கட்சி 397 இடங்களில் வென்றிருந்தது. அதன் பின்னர் கன்சர்வேடிவ் கட்சித் தலைவர்களில் அதிக இடங்களைக் கைப்பற்றியவர் என்கிற பெருமை பொரிஸ் ஜோன்சனுக்கே உரியது. அவர், தேர்தல் பிரசாரத்தில் உறுதியளித்தபடி, பிரக்ஸிட் ஒப்பந்தம் 2020, ஜனவரியில் சட்டமானது.

2020, கொரோனா பெருந்தொற்று காலத்தில் பொரிஸ் ஜோன்சனுக்கு சரிவு தொடங்கியது. கொரோனா கட்டுப்பாட்டு விதிகளை மீறி டௌனிங் வீதியிலுள்ள பிரதமரின் அதிகாரப்பூர்வ இல்லத்தில் அதே ஆண்டு ஜூன் மாதம் தனது பிறந்த நாள் கொண்டாட்டத்தையொட்டி ஏற்பாடு செய்யப்பட்டிருந்த விருந்தில் பங்கேற்றதாக அவர் மீது குற்றச்சாட்டு எழுந்தது. மேலும், அரச அதிகாரிகள் நடத்திய விருந்திலும் அவர் பங்கேற்றதாக புகார்கள் எழுந்தன.

'பார்ட்டிகேட் ஊழல்' என்ற இந்த விவகாரம் தொடர்பாக விசாரணையும் நடத்தப்பட்டு, பொரிஸ் ஜோன்சன் மீதான குற்றச்சாட்டு உறுதிசெய்யப்பட்டதால், கடந்த ஏப்ரல் மாதம் அவருக்கு அபராதமும் விதிக்கப்பட்டது. அரசின் விதிமுறைகளை மீறிய முதல் பிரதமர் என அவரை எதிர்க்கட்சிகள் விமர்சித்தன. ஆளும் கட்சியிலும் அவருக்கு எதிர்ப்புக் குரல்கள் எழுந்தன. இதையடுத்து, நாடாளுமன்றத்தில் அவர் பகிரங்கமாக மன்னிப்பு கோரவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது.

அந்த எதிர்ப்பின் தொடர்ச்சியாக, ஆளும் கட்சி சார்பிலேயே அவருக்கு எதிராக கடந்த ஜூன் 6ஆம் திகதி நாடாளுமன்றத்தில் நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவரப்பட்டது. அதில் அவருக்கு ஆதரவாக 211 வாக்குகள் கிடைத்தாலும், எதிராக 148 பேர் வாக்களித்தனர். குறைவான வித்தியாசத்தில்தான் அவரது பிரதமர் பதவி தப்பியது என்ற நிலையில், அதன்பிறகு பொரிஸ் ஜோன்சன் சுதாரித்துக் கொள்ளாததுதான் சோகம்.

பாலியல் புகார் உள்ளிட்ட பல புகார்களில் தொடர்புடைய தனது கட்சி எம்.பி. கிறிஸ் பிஞ்சர் என்பவரை கட்சியின் துணை தலைமைக் கொறடாவாக நியமித்தார் பொரிஸ் ஜோன்சன். அதற்கு கட்சிக்குள்ளேயே கடும் எதிர்ப்பு கிளம்ப, “கிறிஸ் பிஞ்சர் மீதான புகார்கள் குறித்து பொரிஸ் ஜோன்சன் அறிந்திருக்கவில்லை” என பிரதமர் அலுவலகம் விளக்கமளித்திருந்தது. கடந்த ஜூன் 29ஆம் திகதி அதேபோன்ற ஒரு புகாரில் சிக்கிய கிறிஸ் பிஞ்சர், தனது கட்சிப் பதவியை இராஜினாமா செய்தார். இந்த முறை, 2019ஆம் ஆண்டே கிறிஸ் பிஞ்சர் மீதான புகார்கள் குறித்து தெரிந்தும் அவரை துணை தலைமைக் கொறடாவாக நியமித்தது தனது தவறுதான் என பொரிஸ் ஜோன்சன் மன்னிப்புக் கோரினார்.



இந்த விவகாரத்தில் பொரிஸ் ஜோன்சனின் முன்னுக்குப் பின் முரணான நிலைப்பாடு, கட்சியில் கொந்தளிப்பை ஏற்படுத்த, சுகாதாரத்துறை அமைச்சர் சஜித் ஜாவித், நிதியமைச்சரான இந்திய வம்சாவளியைச் சேர்ந்த ரிஷி சுனக் என அடுத்தடுத்து 50இற்கு மேற்பட்ட அமைச்சர்கள், எம்.பிக்கள் இராஜினாமா அறிவிப்பை வெளியிட, இறுதியில் கட்சியின் நம்பிக்கையை இழந்த நிலையில், தனது பிரதமர் பதவியை இராஜினாமா செய்துள்ளார் பொரிஸ் ஜோன்சன்

மக்களின் அமோக ஆதரவைப் பெற்று ஆட்சியமைத்தபோதிலும், பிரதமரின் பொறுப்புக்குரிய செயல்பாடுகளில் கவனக்குறைவாக இருந்ததால், இன்று பதவி விலகவேண்டிய நிலை அவருக்கு ஏற்பட்டுள்ளது.

ஐரோப்பிய ஒன்றியத்திலிருந்து பிரிட்டன் வெளியேறியதால் அதற்கு இலாபமா, நஷ்டமா என்ற கணக்கீடுகள், விமர்சனங்கள் தொடர்ந்து முன்வைக்கப் படுகின்றன. இருப்பினும், பிரக்ஸிட் ஒப்பந்தத்தை சொன்னபடி நிறைவுசெய்தது, உக்ரைன் மீது போர் தொடுத்துள்ள ரஷ்யாவுக்கு எதிராக ஐரோப்பிய நாடுகளை ஒருங்கிணைக்க முயற்சி மேற்கொண்டதென பொரிஸ் ஜோன்சனின் சாதனைகளைப் புறந்தள்ள முடியாது.

## நக்கல் நமசிவாயம்

ஒரு மாசம் நல்லா பிரெக்டிஸ் பண்ணிப்போட்டு ரூனமன்ட் நடக்கிற அண்டைக்கு காய்ச்சல் வந்து கப்ரன் படுக்கிற மாதிரிதான் சஜித் ஐயாவின்ர கதை..



## இன்றைய நாளில்...

- 1735 – குறுங்கோள் புளூட்டோ நெப்டியூனின் சுற்றுவட்டத்தினுள் இந்நாளில் வந்ததாகக் கணிப்புகள் தெரிவித்தன. இது பின்னர் 1979இல் மீண்டும் நிகழ்ந்தது.
- 1801 – பிரெஞ்சு வானிலையாளர் சான் பொன்சு தனது முதலாவது வால்வெள்ளிக் கண்டுபிடிப்பை அறிவித்தார். அடுத்த 27 ஆண்டுகளில் இவர் மேலும் 36 வால்வெள்ளிகளைக் கண்டுபிடித்தார்.
- 1811 – வளிமங்களின் மூலக்கூறுகள் பற்றிய தமது குறிப்புகளை இத்தாலிய அறிவியலாளர் அவகாதரோ வெளியிட்டார்.
- 1893 – முதன் முறையாக சப்பானைச் சேர்ந்த கொக்கிச்சி மிக்கிமோட்டோ செயற்கையாக முத்துகளை வளர்க்கும் முறையொன்றை அறிமுகப்படுத்தினார்.
- 1950 – பாகிஸ்தான் சர்வதேச நாணய நிதியத்தில் இணைந்தது.
- 1979 – அமெரிக்காவின் முதலாவது விண்வெளி நிலையம் ஸ்கைலேப் இந்தியப் பெருங்கடலில் வீழ்ந்து அழிந்தது.
- 1990 – கொக்காவில் இராணுவ முகாம் விடுதலைப் புலிகளினால் தகர்க்கப்பட்டது.
- 2007 – குடும்பிமலை புலிகளின் முகாம் வீழ்ச்சியடைந்தது.





ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ 13ஆம் திகதி பதவி விலகுவதாக அறிவித்துள்ள நிலையில், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, பிரதமர் ரணில் விக்ரமசிங்க ஆகியோர் பதவி விலகும் வரை ஜனாதிபதி மாளிகை, ஜனாதிபதி செயலகம், அலரி மாளிகையை விட்டு வெளியேறப்போவதில்லையென போராட்டக்காரர்கள் அறிவித்துள்ளனர். இந்நிலையில், போராட்டத்தில் ஈடுபட்டுவரும் மக்களுக்கு, அலரிமாளிகையில் காலை உணவு வழங்கும் செயற்பாடு இடம்பெற்று வருகின்றது.

(படப்பிடிப்பு :- சமன் அபேசிறிவர்தன)

# நாட்டு மக்களின் கோரிக்கைகளை நிறைவேற்ற அரசு முன்வர வேண்டும்

## அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமா சபை கோரிக்கை

நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள அரசியல் மற்றும் பொருளாதார நெருக்கடி காரணமாக மக்கள் தமது அடிப்படைத் தேவைகளைக்கூட பூர்த்திசெய்துகொள்ள முடியாத நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். இதன் காரணமாக மக்கள் பல போராட்டங்களையும், ஆர்ப்பாட்டங்களையும் நடத்தி தமது தேவைகளைப் பூர்த்திசெய்து தருமாறு அரசாங்கத்திடம் வேண்டுகோள் விடுத்து வருகின்றனர். இந்நிலையில், நாட்டு மக்களின் கோரிக்கையை நிறைவேற்ற அரசாங்கம் முன்வர வேண்டும் - என அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமா சபை கோரிக்கை விடுத்துள்ளது.

இந்த நெருக்கடிகளை தீர்ப்பதற்காக அரசாங்கத்தினால் முன்வைக்கப்படும் தீர்வுகள் மக்களின் தேவைகளையும், கோரிக்கைகளையும் பூர்த்திசெய்யாததால் அரசாங்கம் மீது மக்கள் நம்பிக்கையிழந்துள்ளனர் எனவும் உலமா சபை சுட்டிக்காட்டியுள்ளது.

இது தொடர்பில் அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமா சபை வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

மதத்தலைவர்கள், துறைசார்ந்தவர்கள், சிவில் அமைப்புகள் என பலதரப்பட்டவர்களும் இணைந்து குறித்த நெருக்கடியைத் தீர்ப்பதற்கான பல முன்மொழிவுகளை முன்வைத்திருக்கும் இந்நிலையில், அவற்றிற்கு அரசாங்கம் உரிய முறையில் செவிசாய்க்காது செயற்படுவதும் அவற்றை நடைமுறைப்படுத்த முன்வராததும் அனைவருக்கும் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது.

நெருக்கடியான இத்தருணத்தில் ஜனாதிபதி, பிரதமர் உட்பட அரசாங்கத்தினால் தொடர்ந்தும் இப்பிரச்சினைகளுக்குரிய தீர்வை வழங்க முடியாது காணப்படுவதால் ஜனாதிபதி, பிரதமர் உட்பட அரசாங்கம் பதவி விலகி, தகுதிவாய்ந்தவர்களை நியமிப்பதன் மூலம் இடைக்கால அரசாங்கமொன்றை உருவாக்கி, நாட்டை மீண்டும் அபிவிருத்தியின் பாதையில் இட்டுச்செல்ல முன்வரவேண்டுமென்று கேட்டுக் கொள்கின்றோம்.

நம் நாட்டில் ஏற்பட்டுள்ள நெருக்கடியான இந்நிலையை அவசரமாக நீக்கி, நம் தாய்நாட்டை சுபீட்சம் மற்றும் அபிவிருத்தியை நோக்கி இட்டுச்செல்ல ஒவ்வொரு பிரஜையும் குறிப்பாக, ஒவ்வொரு அரசியல்வாதியும் தமது அனைத்து வேறுபாடுகளையும் களைந்து, தம்மால் முடியுமான அனைத்து முயற்சிகளையும் மேற்கொள்ள முன்வர வேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.





உடப்பு முஸ்லிம் மக்கள் நேற்று (10) ஹஜ்ஜுப் பெருநாள் விசேட தொழுகைகளில் ஈடுபட்டபோது... (படங்கள் - உடப்பு நிருபர்)

# பிரதமரின் வீடு எரியூட்டப்பட்டமைக்கு சட்டத்தரணிகள் சங்கம் கண்டனம்

பிரதமர் ரணில் விக்ரமசிங்கவின் தனிப்பட்ட இல்லம் எரிக்கப்பட்டமை உள்ளிட்ட அனைத்து வன்முறைச் சம்பவங்களையும் கண்டிப் பதாக இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் சங்கம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

வன்முறையில் ஈடுபட வேண்டாம் என்றும், மக்களின் உடைமைகளுக்கு சேதம் விளைவிக்க வேண்டாம் என்றும் கேட்டுக்கொண்டுள்ளது.

இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் வன்முறைச் செயல்களில் ஈடுபட வேண்டாம் என்றும், நபர்களுக்கும் சொத்துகளுக்கும் தீங்கு விளைவிக்க வேண்டாம் என்றும் மக்களிடம் வேண்டுகோள் விடுக்கிறது. இவ்வாறான செயற்பாடுகளை மேற்கொள்ள இடமளிக்க வேண்டாம் என இலங்கை சட்டத் தரணிகள் சங்கம் மக்களிடம் கோரிக்கை விடுக் கின்றது.

தீ வைப்பு மற்றும் சொத்து சேதம் அமைதியான போராட்டத்தின் நோக்கங்களைத் தோற்கடிக்கும். இது நாட்டுக்கு சொல்லொணாத் தீங்கு விளைவிக்கும் மற்றும் பொருளாதாரத்தையும் இந்நாட்டு மக்களையும் கடுமையாகப் பாதிக்கும்.

பிரதமர் ரணில் விக்ரமசிங்கவின் தனிப்பட்ட வீடு எரிக்கப்பட்டமை உள்ளிட்ட அனைத்து வன்முறைச் சம்பவங்களையும் கண்டிப்பதாக இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

# பேக்கரி உற்பத்திகள் அனைத்தும் முற்றாக நிறுத்தப்படும் ஆபத்து

## அரசாங்கம் அவதானம் செலுத்தவில்லையென உரிமையாளர்கள் குற்றச்சாட்டு

தற்போதைய நெருக்கடி மற்றும் பொருளாதார சூழ்நிலையில் , பாண்கள் உள்ளிட்ட பேக்கரி உற்பத்தி இன்னும் இரண்டு அல்லது மூன்று நாட்களில் நிறுத்தப்படும் அபாயம் உள்ளதாக அகில இலங்கை பேக்கரி உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

பொருளாதார நெருக்கடியில் பெரும் பாதிப்பை எதிர்நோக்கியுள்ள பேக்கரி உரிமையாளர்கள் மற்றும் அந்தத் தொழிற்றுறை சார்ந்தோர் குறித்து அரசாங்கம் அக்கறை செலுத்தவில்லையென இலங்கை பேக்கரி உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் என்.கே. ஜயவர்தன கவலை வெளியிட்டுள்ளார்.

இது குறித்து அவர் மேலும் கருத்து வெளியிடுகையில்,

நிலவும் எரிபொருள் நெருக்கடி மற்றும் பேக்கரி உணவு உற்பத்திக்கான பொருட்களின் தட்டுப்பாடு மற்றும் விலையேற்றம் காரணமாக தற்போது பேக்கரிகளில் 50% உற்பத்தி நிறுத்தப்பட்டுள்ளது. மிகுதியும் மிக விரைவில் நின்றுவிடும்.

பேக்கரித் தொழில் பாரிய அச்சுறுத்தலை எதிர்நோக்கி வருவதாகவும், நிலவும் எரிபொருள் நெருக்கடியினால் வீழ்ச்சியடையும் எனவும் நான் ஏற்கனவே தெரிவித்திருந்தேன்.

இந்த எரிபொருள் நெருக்கடி குறித்து மின்சாரம் மற்றும் எரிசக்தி அமைச்சரிடம் தெரிவித்தோம். ஆனால், அமைச்சரிடமிருந்து இதுவரை எந்த பதிலும் இல்லை. பேக்கரி உற்பத்தியும் அத்தியாவசிய சேவை பிரிவின் கீழ் வருகிறது. ஆனால், பேக்கரி தொழிலை மீட்க இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை அவர் தெரிவித்துள்ளார்.

# மனோஜ் ராஜபக்ஷவின் லொஸ் ஏஞ்சல்ஸ் வீட்டுக்கு எதிரில் ஆர்ப்பாட்டம்







ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் புதல்வர் மனோஜ் ராஜபக்ஷவின் அமெரிக்காவின் லொஸ் ஏஞ்சல்ஸிலுள்ள வீட்டுக்கு எதிரில் இலங்கையர்கள் போராட்டத்தை ஆரம்பித்துள்ளனர்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ எதிர்வரும் 13 ஆம் திகதி கட்டாயம் பதவி விலக வேண்டும் என அழுத்தம் கொடுத்து இந்தப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

அத்துடன், அவரது குடும்ப உறுப்பினர்கள் அமெரிக்காவில் வீடுகளை கொள்வனவுசெய்ய எப்படி பணம் கிடைத்தது என்பது குறித்து விசாரணை நடத்தப்பட வேண்டும் எனவும் இலங்கையர்கள் என்ற வகையில் அந்தப் பணத்தை இலங்கைக்கு அனுப்பிவைக்க நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் எனவும் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளவர்கள் கூறியுள்ளனர்.

இதனிடையே சுவீடன் நாடாளுமன்றத்திற்கு அருகில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ உட்பட அரசாங்கம் பதவி விலக வேண்டும் என வலியுறுத்தி இலங்கையர்கள் சிலர் நேற்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

# நாட்டில் இடம்பெற்ற சம்பவங்கள் தொடர்பான உண்மையை அம்பலப்படுத்த வேண்டிய கடமை பாதுகாப்புப் பிரிவினரினதாகும்

## ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளர் சுட்டிக்காட்டு



நாட்டின் ஜனநாயக இருப்பையும், நல்ல விழுமியங்களையும், சட்டத்தின் ஆட்சியையும் பாதுகாக்க, நேற்று முன்தினம் இடம்பெற்ற சம்பவங்கள் குறித்து உடனடி நடவடிக்கை எடுத்து உண்மையைத் தெளிவுபடுத்துவதும் அம்பலப்படுத்துவதும் பாதுகாப்புப் படைகளினதும் புலனாய்வுப் பிரிவுகளினதும் முழுப் பொறுப்பென ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் விளக்கமளித்து ஊடக அறிக்கையிலேயே இதனைக் குறிப்பிட்டார்.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

பிரதமர் ரணில் விக்ரமசிங்கவின் வீட்டை ஒரு கும்பல் தீயிட்டு சேதப்படுத்தியதை ஐக்கிய மக்கள் சக்தியாக நாம் வன்மையாகக் கண்டிக்கிறோம். நாட்டில் அதிகரித்துவரும் நெருக்கடியை தீர்க்க, ராஜபக்ஷ ஆட்சி ஜனநாயக கட்டமைப்பிற்குள்ளான வழிமுறைகளின் ஊடாகவே மாற்றப்பட வேண்டும். அதற்காக இலங்கை மக்கள் அனைவரும் கட்சி, மத பேதமின்றி ஒன்றிணைந்து அமைதியான போராட்டத்தை முன்னெடுத்தனரேயன்றி வன்முறை மூலம் தீர்வு காண்பதற்காக அல்ல. இதுபோன்ற சம்பவங்கள் மூலம் அந்தப் போராட்டத்தின் வெற்றிக்கு ஒரு கரும்புள்ளி சேர்ந்திருப்பது பாரதூரமான விடயமாகும்.

இந்த காட்டுமிராண்டித்தனமான சம்பவம் குறித்து பாதுகாப்புத்துறை உடனடியாக முறையான விசாரணை நடத்தி, இதற்கு காரணமானவர்களை சட்டத்தின்முன் நிறுத்த வேண்டும் என்பதை நாங்கள் கடுமையாக வலியுறுத்துகிறோம். இது ஏதோ ஒரு மறைமுக நோக்கத்திற்காக ஒரு ஒழுங்கமைக்கப்பட்ட குழுவால் செயல்படுத்தப்பட்டதென்பது மிகத் தெளிவாகத் தெரிகிறது.

இந்நாட்டின் ஜனநாயக இருப்பையும், நல்ல விழுமியங்களையும், சட்டத்தின் ஆட்சியையும் பாதுகாக்க, இந்தச் சம்பவம் குறித்து உடனடி நடவடிக்கை எடுத்து உண்மையைத் தெளிவுபடுத்துவதும் அம்பலப்படுத்துவதும் பாதுகாப்புப் படைகளினதும் புலனாய்வுப் பிரிவுகளினதும் முழுப் பொறுப்பு என்பதை சுட்டிக்காட்டுகிறோம்.

எமது தாய்நாடு பாரிய அரசியல் மற்றும் பொருளாதார நெருக்கடியை எதிர்நோக்கியிருக்கும் இவ்வேளையில், அதற்காக ஜனநாயக மற்றும் அரசியலமைப்பு ரீதியிலான தீர்வுகளைப் பெறுவதற்கு நாடாளுமன்றம் ஊடாக செயற்பட்டு வருகின்ற இந்தத் தருணத்தில், அனைத்து தரப்பினரும் மிகவும் பொறுமையுடனும் பொறுப்புடனும் செயற்படுமாறு அனைத்து தரப்பினரிடமும் கேட்டுக்கொள்கிறோம்.

இந்த நெருக்கடியான தீர்மானமிக்க நேரத்தில் நமது செயல்பாடுகள் நாட்டின் எதிர்கால ஜனநாயக செயல்பாட்டில் வலுவான தாக்கத்தை ஏற்படுத்தும் என்பதை இங்கு ஞாபகமூட்டுகிறோம். நாட்டு மக்கள் அமைதியாகவும் பொறுமையுடனும் பணியாற்றுவதற்கு அனைத்து மதத் தலைவர்களும், வெகுஜன அமைப்புகள், சிவில் அமைப்புகள், தொழிற்சங்கங்கள் மற்றும் அனைத்துத் தரப்பினரும் வழிகாட்டுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறோம் - என்று குறிப்பிடப்பட்டுள்ளது.







பேருவளை ரியாளுஸ்ஸாலிஹீன் பள்ளிவாசலில் நடைபெற்ற ஹஜ் பெருநாள் தொழுகையின்போது... (படங்கள்: பீ.எம்.முக்தார்)

# அரசுக்கு எதிராக மலையகப் பகுதிகளில் முன்னெடுக்கப்பட்ட பாரிய போராட்டங்கள்






(க.கிஷாந்தன்)

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவும், பிரதமர் ரணில் விக்ரமசிங்க உள்ளடங்கலான அரசும் பதவி விலக வேண்டுமென வலியுறுத்தி மலையகத்தில் பல பகுதிகளிலும் நேற்றுமுன்தினம் போராட்டங்களும், பேரணிகளும் முன்னெடுக்கப் பட்டன.

நுவரெலியா, கண்டி, மாத்தளை, கேகாலை, இரத்தினபுரி, பதுளை மற்றும் மொனராகலை ஆகிய மலையக மாவட்டங்களில் எட்டு திக்கிலும் ''கோட்டா கோ ஹோம்'' என்ற கோஷம் ஓங்கி ஒலித்தது. மேற்படி மாவட்டங்களில் பிரதான மற்றும் சிறு நகரங்களின் வர்த்தக நிலையங்கள் மூடப்பட்டிருந்தன.

வர்த்தக நிலையங்களுக்கு முன்பாக கறுப்புக் கொடிகள் பறக்கவிடப்பட்டு, போராட்டத்துக்கு ஆதரவு தெரிவிக்கப்பட்டது.

அத்துடன், பெருந்தோட்டப் பகுதிகளில் தோட்டத் தொழிலாளர்கள் இன்று தொழிலுக்குச் செல்லவில்லை. தமது குடியிருப்புகளுக்கு முன்பாக கறுப்புக் கொடிகளை பறக்கவிட்டிருந்தனர். அதேபோல தோட்டவாரியாக எதிர்ப்பு நடவடிக்கையும் முன்னெடுக்கப்பட்டது.

ஒருசில பகுதிகளில் போக்குவரத்து முடங்கியிருந்தது. மேலும் சில இடங்களில் மட்டுப் படுத்தப்பட்டளவில் முன்னெடுக்கப்பட்டது.

நுவரெலியா மாவட்டத்தில் கொட்டகலை, தலவாக்கலை உட்பட சில நகரங்களில் போராட்டம் உக்கிரமடைந்தது. கட்சி, தொழிற்சங்க பேதமின்றி அனைவரும் மக்கள் சக்தியாக ஒன்றிணைந்து, கோட்டா- ரணில் அரசே பதவி விலகு என வலியுறுத்தினர்.

இதேவேளை, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பதவி விலக வேண்டும் என வலியுறுத்தி தலவாக்கலை மற்றும் கொட்டகலை நகரிலும் நேற்றுமுன்தினம் பாரிய போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

குறித்த நகரங்களில் கடைகள் மூடப்பட்டு, மக்கள் போராட்டத்துக்கு வர்த்தகர்கள் ஆதரவு வழங்கினர். சிவில் சமூக செயற்பாட்டாளர்கள், இளைஞர்கள், ஓட்டோ ஓட்டுநர்கள் என பல தரப்பினரும் போராட்டத்தில் குதித்தனர்.

அத்துடன், 'கோட்டா கோ கம' கிளையொன்றும் தலவாக்கலை நகரில் உதயமானது. ஜனாதிபதியும், அவர் தலைமையிலான அரசும் பதவி விலகும்வரை போராட்டத்தை தொடரும் வகையிலேயே 'கோட்டா கோ கம' கிளை உருவாக்கப்பட்டுள்ளது.

தலவாக்கலையையும், அதனைச் சூழவுள்ள பகுதிகளில் வாழும் பலர் போராட்டத்தில் பங்கேற்று, கொழும்பில் முன்னெடுக்கப்பட்டு வரும் போராட்டத்துக்கு ஆதரவை வழங்கினர்.

இதேவேளை, கொட்டகலை நகரிலும் நகர வர்த்தகர்கள், சிவில் சமூக செயற்பாட்டாளர்கள், இளைஞர்கள், ஆசிரியர்கள், சிறுவர்கள் என பலரும் கலந்துகொண்டு போராட்டத்தை முன்னெடுத்தனர்.

அத்தோடு, கொட்டகலை கொமர்ஷல் பகுதி மக்களும் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# ஊடகவியலாளர்களை பாதுகாக்க ஸ்திரமான சட்டம் வேண்டும்

## நாடாளுமன்ற உறுப்பினர் இராதாகிருஸ்ணன்



(நுவரெலியா நிருபர்)

கொழும்பில் நேற்று முன்தினம் (09) நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் ஊடகவியலாளர்கள் தாக்கப்பட்டமை மிகவும் கண்டிக்கத்தக்கதும் மிலேச்சத்தனமானதும் தகவல்கள் தெரிந்துகொள்வதை தடுத்து நிறுத்துவதுமான ஒரு செயலாகும் - என மலையக மக்கள் முன்னணியின் தலைவரும் நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான வேலுசாமி இராதாகிருஸ்ணன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் நேற்று (10) ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கையில்,

ஊடகவியலாளர்கள் நடக்கின்ற சம்பவங்களை இந்த நாட்டுக்கும் சர்வதேசத்திற்கும் கொண்டு செல்கின்ற பொறுப்பையும் கடமையையும் நிறைவேற்றுகின்றவர்கள்.

அவர்களுடைய கடமைக்கு இடையூறு ஏற்படுத்துகின்றவர்களுக்கு கடுமையான தண்டனையை வழங்க வேண்டும். ஏனெனில், செய்கின்ற தவறுகள் வெளியில் தெரிந்துவிடும் அல்லது சர்வதேசத்தில் இந்த நாட்டிற்கு அவப்பெயர் வந்துவிடும் என்ற காரணத்தினாலேயே ஊடகவியலாளர்கள் தாக்கப்படுகின்றார்கள்.

ஆனால், கடமையில் இருக்கின்ற பொலிஸாரும் இராணுவத்தினரும் தங்களுடைய கடமைகளை சரியாக செய்தால் யாருக்கும் எந்தப் பிரச்சினையும் ஏற்படாது. அவர்கள் தங்களுடைய கடமைகளை மறந்து சட்டத்தை கையில் எடுக்கின்றபோதே தேவையற்ற பிரச்சினைகள் உருவாகின்றன.

இலங்கையில் ராஜபக்ஷக்கள் என்று ஆட்சிக்கு வந்தாலும் ஊடகவியலாளர்களுக்கு பாதுகாப்பு இல்லாத ஒரு நிலையே காணப்படுகின்றது. ஊடகவியலாளர்கள் தாக்கப்படுவதும், கொலை செய்யப்படுவதும் சாதாரண ஒரு செயலாக மாறிவிடுகின்றது.

எனவே, பாதிக்கப்பட்டுள்ள ஊடகவியலாளர்களுக்கு நீதி கிடைக்க வேண்டும். வெறுமனே கண்துடைப்பிற்காக பதவிநீக்கம் செய்வதோ இடமாற்றம் வழங்குவதோ சரியான தீர்வாக அமையாது. இந்தச் சம்பவத்தில் தொடர்புடைய அனைவரும் இனங்காணப்பட்டு அவர்களுக்கு உரிய தண்டனையை நீதிமன்றம் ஊடாக வழங்க வேண்டும். அதற்காக சட்டத்தரணிகள் அனைவரும் முன்வர வேண்டும்.

ஊடகவியலாளர்களின் பாதுகாப்பையும் அவர்களுடைய கடமையையும் தங்கு தடையின்றி முன்னெடுக்கவும் எதிர்காலத்தில் இப்போது இருக்கின்ற சட்டங்களைவிட அதிகமான சட்டங்கள் கொண்டுவரப்பட வேண்டும். அப்படியான சட்டங்களை யார் கொண்டுவந்தாலும் ஒரு நாடாளுமன்ற உறுப்பினர் என்றவகையில் எனது முழுமையான ஒத்துழைப்பை வழங்குவதற்கு தயாராகவே இருக்கின்றேன் - என்றார்.

மலையக செய்திகள்
thamilanmalayagam@gmail.com

# ஊடக அடக்குமுறைக்கு எதிராக அனைவரும் ஒன்றுதிரள வேண்டும்

## நுவரெலியா ஊடகவியலாளர் ஒன்றியத்தின் தேசிய அமைப்பாளர் தியாகு



(நுவரெலியா நிருபர்)

ஆர்ப்பாட்டத்தின்போது செய்தி சேகரித்துக் கொண்டிருந்த ஊடகவியலாளர்கள் தாக்கப்பட்டமை யானது வன்மையாக கண்டிக்கத்தக்கது. இதற்கு எதிராக அனைத்து ஊடகவியலாளர்களும் ஒன்றிணைய வேண்டும் - என நுவரெலியா மாவட்ட ஊடகவியலாளர் ஒன்றியத்தின் தேசிய அமைப்பாளர் சுப்பிரமணியம் தியாகு தெரிவித்துள்ளார்.

இலங்கையின் தகவல் திணைக்களத்தால் வழங்கப்பட்டுள்ள அடையாள அட்டையை அணிந்திருக்கின்ற தங்களை ஊடகவியாலாளர்கள் என அடையாளப்படுத்தியும் அவர்களை தொடர்ந்து தாக்கியுள்ள பொலிஸாரும் இராணுவமும் செய்திருக்கின்ற செயலானது மிகவும் கோழைத்தனமான ஒரு செயலாகும்.

பொலிஸாரும் இராணுவமும் அவர்களுடைய கையில் ஆயுதத்தை வைத்துக்கொண்டு நிராயுதபாணிகளாக தங்களுடைய கடமைகளை செய்கின்ற ஊடகவியலாளர்களை தாக்குவதென்பது கோழைத்தனமான ஒரு செயற்பாடாகும்.

இதற்கு எதிராக அனைத்து ஊடகவியலாளர்களும் ஒன்றுதிரண்டு குரல் கொடுக்க வேண்டும். நாங்கள் அனைவரும் ஒவ்வொரு ஊடக நிறுவனத்தில் கடமையாற்றினாலும் நாங்கள் ஊடகவியலாளர்களாக ஒன்றிணையவேண்டிய தருணம் இதுவாகும்.

கடந்த காலங்களில் தொடர்ச்சியாக ஊடகவியலாளர்கள் தாக்கப்பட்டு வருகின்றார்கள். இதற்கு எதிராக இதுவரை எந்தவொரு காத்திரமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. எனவே, இனிமேலும் அதனை பொறுத்துக்கொண்டிருக்க முடியாது.

நாங்களும் எங்களுடைய ஒற்றுமையை இந்த அராஜக கும்பலுக்கு முன் எடுத்துக்காட்ட வேண்டும். அமைதியை ஏற்படுத்த வேண்டிய பொலிஸார் யாரோ ஒருசிலரின் கைக்கூலிகளாக செயற்பட்டு எங்களுடைய ஊடகவியலாளர்களை தாக்குவது எந்தவிதத்தில் நியாயமானதென்பது புரியவில்லை. எங்களின் ஊடக நண்பர்கள் என்ன குற்றம் செய்தார்கள்? போராட்டம் செய்தார்களா? அரச சொத்துக்கு சேதம் விளைவித்தார்களா? அல்லது பொலிஸாரையோ இராணுவத்தையோ தாக்கினார்களா? தேச விரோத செயலில் ஈடுபட்டார்களா? எதனையும் செய்யவில்லை. அங்கே நடைபெற்ற விடயங்களை தங்களுடைய கெமராக்களில் பதிவுசெய்து தங்களுடைய ஊடக நிறுவனங்களுக்கு அனுப்பிவைத்து தங்களுடைய கடமையை செய்தார்கள். இதற்குத் தண்டனை தாக்குதலா?

இன்று குற்றம்புரிந்த பலரையும் பொலிஸாரும் இராணுவமும் பாதுகாப்பு வழங்கிவருவதை நினைத்து அவர்கள் வெட்கப்பட வேண்டும். ஆனால், எங்களுடைய ஊடகவியலாளர்களை தாக்குகின்றார்கள். ஊடகவியலாளர்களை தாக்குவதை உடனடியாக நிறுத்திக்கொள்ளுங்கள். நாங்கள் அனைவரும் ஒன்றுதிரண்டால் நிலைமை என்னவாகும் என்பனை தெரிந்துகொள்ளுங்கள்.

ஊடகவியலாளர்கள் அனைவரும் குரலற்ற மக்களின் குரலாகவே செயற்படுகின்றார்கள். நடக்கின்ற தவறுகளை சுட்டிக்காட்டுகின்றார்கள். தொடர்ந்தும் இந்த நிலைமை தொடருமாக இருந்தால் இதற்கு எதிராக நாம் சர்வதேசத்தை நாட வேண்டும். எங்களுடைய தொழில் பாதுகாப்பை நாங்களே உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டிய காலமே ஏற்பட்டுள்ளது.

ஊடகவியலாளர்களுக்கு ஆட்சியாளர்களும் பொலிஸாரும் பாதுகாப்பு வழங்கத் தவறினால் நாங்கள் எங்களுடைய பாதுகாப்பிற்காக ஒன்றிணையவேண்டிய காலம் இது. பாதிக்கப்பட்டு சிகிச்சைபெற்று வருகின்ற எங்களின் ஊடக நண்பர்கள் விரைவில் குணமடைந்து கடமைக்கு திரும்பவேண்டும் என அனைவரும் பிராத்திப்போமாக.

# மத்திய மாகாணத்தில் சைக்கிள் ஓடுவதை ஊக்கப்படுத்த விசேட வேலைத்திட்டம்




(கண்டி நிருபர்)

மத்திய மாகாகணத்தில் சைக்கிள் ஓடுவதை ஊக்கப்படுத்துவதற்காக விசேட வேலைத் திட்டமொன்று மத்திய மாகாண ஆளுநர் லலித் யூ கமகேவின் வழிகாட்டலின் கீழ் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

சைக்கிள்கள் போன்றவற்றை போக்குவரத்து சாதனமாகப் பயன்படுத்துவதன் மூலம், மக்களின் உடல் நலம் மற்றும் மன நலனை மேம்படுத்தலாம் என்பது பற்றி கூடுதல் விளக்கமளிக்கப்பட்டு வருகிறது.

அத்துடன், சுற்றுச்சூழலுக்கு உகந்த போக்குவரத்து சாதனமாகவும் சைக்கிள்கள் இருப்பதாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. எனவே, அவற்றை ஊக்கப்படுத்துவதற்கான செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இந்த முயற்சி மாகாணம் முழுவதும் பிரபலப்படுத்தப்படவுள்ளது. மத்திய மாகாண ஆளுநர் லலித் யூ கமகேவின் வழிகாட்டலில் மாகாணத்திலுள்ள பல்வேறு தொழில் வல்லுனர்களின் நேரடி பங்களிப்புடன் இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

இந்த வேலைத்திட்டத்தின் கீழ் முதற்கட்டமாக கண்டி கொடுகொடெல்ல விதியில் பாதுகாப்பான துவிச்சக்கரவண்டி தரிப்பிட நிலையம் ஒன்றும் அமைக்கப்பட்டுள்ளது.




**சீரற்ற காலநிலையால் நுவரெலியா நகரின் கெலேகால சந்திக்கு அருகில் பாரிய மரமொன்று முறிந்து வீழ்ந்ததன் காரணமாக நேற்று முன்தினம் (09) வாகனப் போக்குவரத்து தடைப்பட்டுள்ளது. நுவரெலியா மாநகர சபை குறித்த மரத்தை வெட்டி அகற்றும் நடவடிக்கைகளை முன்னெடுத்தது.**
**(தலவாக்கலை நிருபர்)**







**ஜனாதிபதியையும் அரசாங்கத்தையும் வெளியேறுமாறு கோரி நாடு முழுவதும் ஜூலை 9ஆம் திகதி மக்கள் போராட்டங்களை ஏற்பாடு செய்திருந்ததுடன், பதுளை மாவட்டத்தின் பதுளை, பண்டாரவளை, ஹாலிஎல பிரதேசங்களிலும் பாரிய போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன.**
**(ஹாலி-எல நிருபர்)**

# நவாலி சென். பீற்றர்ஸ் தேவாலய படுகொலை நினைவு தினம்










**(யாழ். நிருபர்)**

நவாலி சென். பீற்றர்ஸ் தேவாலயம் மீதான விமானத் தாக்குதலின் 27ஆம் ஆண்டு நினைவுதினம் நேற்று முன்தினம் (09) மாலை சென். பீற்றர்ஸ் தேவாலயத்தில் அனுஷ்டிக்கப்பட்டது.

சென். பீற்றர்ஸ் தேவாலயத்தின் பங்குத்தந்தை தலைமையில் வழிபாடுகள் நடைபெற்றன.

அதனைத் தொடர்ந்து உயிரிழந்தவர்களின் உறவினர்கள், பொதுமக்கள் மலர் தூவி, சுடரேற்றி அஞ்சலி செலுத்தினார்கள்.

கடந்த 1995ஆம் ஆண்டு ஜூலை மாதம் 09ஆம் திகதியன்று நவாலி சென். பீற்றர்ஸ் தேவாலயத்திலும், நவாலி ஸ்ரீ கதிர்காம முருகன் ஆலயத்திலும் இடம்பெயர்ந்து தங்கியிருந்த மக்கள் மீது விமானப்படையினரின் மூன்று விமானங்கள் தொடர்ச்சியாக 13 குண்டுகளை வீசியதில் 147 பேர் பலியாகினர்.

அன்று அதிகாலை வலிகாமம் பிரதேசங்களை நோக்கி எறிகணைத் தாக்குதல், விமானத் தாக்குதல்களின் உதவியுடன் இராணுவத்தினர் முன்னேறிப் பாய்தல் (Leap forward ) எனும் இராணுவ நடவடிக்கையை மேற்கொண்டனர்.

தொடர் எறிகணைத் தாக்குதல்களால் தமது வாழ்விடங்களைவிட்டு நவாலியை நோக்கி இடம்பெயர்ந்த மக்கள் நவாலி சென். பீற்றர்ஸ் தேவாலயத்திலும் நவாலி ஸ்ரீ கதிர்காம முருகன் ஆலயத்திலும் தஞ்சமடைந்தனர்.

அன்றைய காலை திடீரென வந்த மூன்று விமானங்கள் தொடர்ச்சியாக 13 குண்டுகளை மக்கள் தஞ்சமடைந்திருந்த தேவாலயம் மற்றும் ஆலயம் மீது வீசின.

இக்குண்டுவீச்சு சம்பவத்தில் குழந்தைகள், பெண்கள் உட்பட 147 பேர் அந்த இடத்திலேயே உடல் சிதறி பலியாகியிருந்தனர். 350இற்கும் மேற்பட்டோர் காயமடைந்திருந்தனர்.

## வட்டுவாகல் சப்தகன்னியர் ஆலய விவகாரம்;

# நீதிமன்றில் பாரப்படுத்துமாறு பொலிஸாரை கோரியுள்ள கோவில் நிர்வாகம்




**(முல்லைத்தீவு நிருபர்)**

முல்லைத்தீவு - வட்டுவாகல் சப்தகன்னியர் ஆலய விவகாரம் தொடர்பில் விசாரணை மேற்கொள்வதற்காக இராணுவத்தினர் மற்றும் ஆலய நிர்வாகத்தினர், முன்னாள் வடமாகாண சபை உறுப்பினர் துரைராசா ரவிகரன், அன்ரனி ஜெயநாதன் பீற்றர் இளஞ்செழியன் ஆகியோரை மீண்டும் முல்லைத்தீவுப் பொலிஸார் அழைத்திருந்தனர்.

குறித்த விசாரணையின்போது தீர்த்தம் எடுப்பதற்காக பயன்படுத்தும் வீதி மற்றும் சப்தகன்னியர் ஆலயத்தின் வருடாந்தப் பொங்கலின் இறுதிப்பூசை இடம்பெறும் இடம் என்பவற்றை ஆலய நிர்வாகம் பயன்படுத்துவதற்கு இராணுவத்தினர் மறுப்புத் தெரிவித்திருந்தனர்.

எனவே, ஆலயத்திற்குரிய காணிக்குள் இராணுவத்தினர் கட்டடம் அமைத்து பாதுகாப்புக் கடமைகளை மேற்கொண்ட இடத்தை இராணுவத்திற்கு மீள வழங்கமுடியாதென கோவில் நிர்வாகத்தினரும் தெரிவித்துள்ளனர்.

அத்தோடு இந்த விவகாரத்தை விரைவுபடுத்தி நீதிமன்றில் பாரப்படுத்த நடவடிக்கை எடுக்குமாறு பொலிஸாரை சப்தகன்னியர் ஆலய நிர்வாகத்தினர் கோரியுள்ளனர்.

இது தொடர்பில் மேலும் தெரியவருகையில்,

முல்லைத்தீவு - வட்டுவாகல் பகுதியில் அமைந்துள்ள வரலாற்றுச் சிறப்புமிக்க சப்தகன்னிமார் ஆலயத்தின் வருடாந்தப் பொங்கலுக்கு, தீர்த்தம் எடுப்பதற்காக கடந்த 04.07.2022ஆம் திகதியன்று அடியவர்கள் சென்றபோது, தீர்த்தம் எடுப்பதற்காகச் செல்கின்ற பாரம்பரிய வீதியை மூடிய இராணுவத்தினர் குறித்த வீதியூடாகச் சென்று தீர்த்தம் எடுக்க முடியாதென அடியவர்களைத் தடுத்திருந்தனர்.

இந்நிலையில், அடியவர்கள் பிறிதொரு வீதியினூடாகச் சென்று வருடாந்தப் பொங்கலுக்கான தீர்த்தத்தினை எடுத்திருந்தனர்.

அத்தோடு இராணுவத்தின் இத்தகைய செயற்பாட்டால் ஆத்திரமடைந்திருந்த கோவில் நிர்வாகத்தினரும், அடியவர்களும் குறித்த வட்டுவாகல் சப்தகன்னிமார் ஆலயத்திற்கு அண்மையில், ஆலயக் காணியில் கட்டடங்களை அமைத்து பாதுகாப்புக் கடமையிலிருந்த இராணுவத்தினர் அங்கிருந்து வெளியேறவேண்டும் எனவும் ஆர்ப்பாட்டத்திலும் ஈடுபட்டிருந்தனர்.

அதனைத்தொடர்ந்து அப்பகுதியிலிருந்த இராணுவத்தினர் அங்கிருந்து வெளியேறியிருந்தனர். அந்தவகையில் மறுநாளான 05.07.2022 அன்று, கோவில் நிர்வாகம் மற்றும் இராணுவம் ஆகிய இருதரப்பினரையும் அழைத்து முல்லைத்தீவு பொலிஸார் கலந்துரையாடலில் ஈடுபட்டிருந்தனர்.

இந்நிலையில், தீர்த்தம் எடுப்பதற்காக பயன்படுத்தும் பாரம்பரிய வீதியினை பயன்படுத்த இடமளிக்க முடியாதெனவும், தாம் பயன்படுத்திய கட்டடத்திலிருந்து தொடர்ந்து பாதுகாப்புக் கடமைகளில் ஈடுபட ஆலய நிர்வாகம் இடமளிக்கவேண்டுமெனவும், இராணுவத்தினர் அக்கலந்துரையாடலில் தெரிவித்திருந்தனர்.

இரணுவத்தின் இக்கருத்திற்கு ஆலய நிர்வாகத்தினர் மறுப்பும் தெரிவித்திருந்தனர்.

அதனைத் தொடர்ந்து இராணுவத்தினர், ஆலய நிர்வாகத்தினர், முன்னாள் வடமாகாண சபை உறுப்பினர் துரைராசா ரவிகரன், அன்ரனி ஜெயநாதன் பீற்றர் இளஞ்செழியன் ஆகியோரை மீண்டும் விசாணைக்கென முல்லைத்தீவு பொலிஸார் அழைத்திருந்தனர்.

அதன்போது, தமது காணியில் இராணுவத்தினர் இருப்பதற்கு அனுமதிக்கமுடியாதென கோவில் நிர்வாகத்தினர் தெரிவித்ததுடன், தீர்த்தம் எடுக்கப் பயன்படுத்தும் பாரம்பரிய வீதியை தம்மாலும் விடமுடியாதெனவும், வருடாந்தப் பொங்கலின் இறுதிப்பூசை இடம்பெறும் இடத்தையும் விடமுடியாது எனவும் இராணுவத்தினரும் தெரிவித்திருந்தனர்.

இந்நிலையில், இந்த விடயத்தை நீதிமன்றில் பாரப்படுத்துமாறு பொலிஸாரிடம் ஆலய நிர்வாகத்தினர் கேட்டுக்கொண்டமையும் குறிப்பிடத்தக்கது.

வடக்கு செய்திகள்
thamilannorth@gmail.com

## வீரமாகாளியம்மன் ஆலய தங்க ரத திருவிழா




**(யாழ். நிருபர்)**

யாழ்ப்பாணம், வண்ணை வீரமாகாளி அம்மன் ஆலய வருடாந்த மகோற்சவத்தின் தங்க ரத திருவிழா கடந்த வெள்ளிக்கிழமை இரவு இடம்பெற்றது.

அதற்கு முன்னர் புதுப்பொலிவுடன் அமைக்கப்பட்ட புதிய தங்க ரத வெள்ளோட்டம் இடம்பெற்றது.

இந்த தங்க ரதத்தினை ஈழத்து சிறப்பு ஸ்தபதியான கலைவாணி சிற்பக்கூடத்தின் முதன்மைச் சிற்பியான சிற்பவாரிதி கு.சந்திரதாசனின் தலைமையில் இந்தியாவிலிருந்து வரவழைக்கப்பட்ட ஸ்தபதிகள் குழாமினால் நேர்த்தியாக இந்தத் தங்க ரதம் அமைக்கப்பட்டுள்ளது.

இதன் சிறப்பானது திருப்பதி வெங்கடாசல பதியின் தங்க ரதத்தின் வடிவமைப்பினை ஒத்ததாகவும் ஈழத்தில் இருக்கின்ற கோயில்களின் தங்க ரதங்களிலும் பார்க்க பெரிய தங்க ரதமாகவும் அமைக்கப்பட்டுள்ளது.

வெள்ளோட்டத்தை தொடர்ந்து புதிய தங்க ரதத்தில் அம்பாளின் திருவீதி வலம் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்றது.



திகதி 08.07.2022
வெள்ளிக்கிழமை உத்தியோகபூர்வ முடிவுகள் www.nlb.lk NLB

மஹஜன சம்பத
சீட்டிழுப்பு இலக்கம்: 4810
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 7,504,440.00
ஆங்கில எழுத்து E வெற்றி இலக்கங்கள் 0 8 6 6 5 5
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 17,422,758.40

ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு இலக்கம் : 1288
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 2,401,440.00
வெற்றி இலக்கினம் கன்னி வெற்றி இலக்கங்கள் 3 0 0 4 1 2
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 10,161,799.20

கொவிசெத Govisetha
சீட்டிழுப்பு இலக்கம் 3052
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 3,443,680.00
ஆங்கில எழுத்து K வெற்றி இலக்கங்கள் 14 22 23 36
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 63,156,147.60

தன நிதானய
சீட்டிழுப்பு இலக்கம் : 840
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 1,910,740.00
வெற்றி இலக்கினம் M வெற்றி இலக்கங்கள் 02 29 52 68
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 117,565,916.00

ராசி சுப பலன் Handahana
சீட்டிழுப்பு இலக்கம் : 119
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 4,401,200.00
இலக்கினம் கன்னி வெற்றி இலக்கங்கள் 02 09 26 28
விசேட இலக்கினம் கன்னி
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 2,951,910.60

கோடி 26+ Mega POWER மெகா பவர்
சீட்டிழுப்பு இலக்கம் 1158
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 2,956,140.00
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 260,247,410.00
W 11 28 46 57 70
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00

தேசிய லொத்தர் சபை National Lotteries Board
தொலைபேசி: 011-4607000, 011 - 4607001 - 2 Email : info@nlb.lk
பெக்ஸ்: 011-4669475 Web : www.nlb.lk
இலக்கம் 32, தேஷமான்ய N.W.J. முதலிகே மாவத்த, கொழும்பு 01







ஜனாதிபதி மாளிகைக்குள் நுழைந்த போராட்டக்காரர்கள்
(படங்கள் - லலித் பெரேரா)

# கிழக்கில் புனித ஹஜ் பெருநாள் தொழுகை





கல்முனை முஹம்மதியா ஜும்ஆ மஸ்ஜித்





கல்முனை ஹூதா திடலில்





பாலமுனை



கிண்ணியா மத்திய கல்லூரி







மருதமுனை கடற்கரை



றொட்டவெவ மஸ்ஜிதுல் ஹுதா ஜும்மா பள்ளி





வாழைச்சேனை செம்மண்ணோடை

(படங்கள் : கல்முனை, பாலமுனை, கிண்ணியா, திருகோணமலை, காத்தான்குடி, மட்டக்களப்பு, மருதமுனை, வாழைச்சேனை நிருபர்கள்)

## அரசாங்கத்துக்கு எதிரான போராட்டத்தில் ஊடகர்கள் தாக்கப்பட்டமைக்கு கண்டனம்

### கிழக்கு ஊடகவியலாளர் சங்கங்கள்

(திருகோணமலை, மட்டக்களப்பு, கல்லடி நிருபர்கள்)

கொழும்பில் நேற்று முன்தினம் (09) இடம்பெற்ற அரசுக்கு எதிரான ஆர்ப்பாட்டத்தில் செய்தி சேகரிப்பில் ஈடுபட்ட நான்கு ஊடகவியலாளர்கள் தாக்கப்பட்டமைக்கு தமது வன்மையான கண்டனத்தை தெரிவிப்பதாக திருகோணமலை ஊடகவியலாளர் சங்கம் தெரிவித்துள்ளது.

பிரதமர் ரணில் விக்ரமசிங்கவின் வீட்டின் அருகில் ஊடகவியலாளர்கள் நால்வர் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலுக்கே திருகோணமலை ஊடகவியலாளர் சங்கம் இவ்வாறு தமது கண்டனத்தை வெளியிடப்பட்டுள்ளது.

ஊடகவியலாளர்கள் மீது தாக்குதலை மேற்கொண்ட பாதுகாப்புப் படையினர், அதிகாரிகள் உடன் கைதுசெய்யப்பட்டு, சட்ட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் எனவும் இதன்போது வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, மட்டக்களப்பு மாவட்ட தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியம் மற்றும் மட்டு. ஊடக அமையம் ஊடகவியலாளர்கள் தாக்கப்பட்டமையை வன்மையாகக் கண்டிப்பதாக தமது ஊடக அறிக்கையில் தெரிவித்துள்ளன.

அவ்வறிக்கையில் மேலும் குறிப்பிடப் பட்டிருப்பதாவது,

போராட்டங்களின்போது ஊடகவியலாளர்களைப் பாதுகாக்கவேண்டியவர்களே அவர்கள் மீது தாக்குதல் நடத்தியமை என்பது இந்த நாட்டின் ஊடகத்துறையை மேலும் கேள்விக் குறியாக்கியுள்ளது.

கடந்த சனிக்கிழமை இடம்பெற்ற மக்கள் எழுச்சிப் போராட்டத்தின்போது செய்தி சேகரிக்கச் சென்ற ஊடகவியலாளர்கள் தங்களை அடையாளப்படுத்தும் வகையிலான ஆடைகளை அணிந்தும், ஊடக அடையாள அட்டைகளை அணிந்துமே சென்றுள்ளனர். இந்நிலையில், அவற்றினைக் கருத்திற்கொள்ளாது அவர்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளமையானது பாதுகாப்புத் தரப்பினரும், பொலிஸாரும் ஊடகவியலாளர்கள் மீது கொண்டுள்ள காழ்ப்புணர்ச்சியை வெளிப்படுத்துவதாக அமைந்துள்ளது. இதனை ஒரு திட்டமிடப்பட்ட செயற்பாடாகவே எமது அமைப்பு நோக்குகின்றது.

பாதுகாப்புத் தரப்பினரும், பொலிஸாரும் சட்டத்தை தமது கையிலெடுத்து ஊடக வியலாளர்கள் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்களை வன்மையாகக் கண்டிப்பதுடன், ஊடகவியலாளர்களைப் பாதுகாப்பதற்கான நடவடிக்கைகளை சர்வதேச ஊடக அமைப்புகளும், இலங்கையில் செயற்படும் அமைப்புகளும் முன்னெடுக்க வேண்டுமென்ற கோரிக்கையினையும் இத்தருணத்தில் முன்வைக்கின்றோம்.

இதேவேளை, கடந்த காலங்களில் தமிழ் ஊடகவியலாளர்களுக்கு இவ்வாறான தரப்பினர் தொடர்ச்சியான அச்சுறுத்தல்களை விடுத்து வந்திருந்தனர். இந்நிலையில், இன்று மக்கள் முன்னிலையில் ஊடகவியலாளர்கள் தாக்கப்பட்டிருக்கின்றனர். இது தொடர்பில் இந்த நாட்டில் செயற்படும் சிவில் சமூக செயற்பாட்டாளர்கள் கவனத்திற்கொள்ள வேண்டும் - என்றுள்ளது.

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com

## நிந்தவூரில் புத்தாக்க கண்டுபிடிப்பாளர்கள் கௌரவிப்பு



(மாளிகைக்காடு நிருபர்)

இறக்குமதி நெருக்கடிக்குத் தீர்வுகாணும் புத்தாக்க கண்டுபிடிப்பாளர்களை ஊக்குவிக்கும் நிகழ்வொன்று நிந்தவூர் சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தில் நிந்தவூர் சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் கே.எல்.எம்.றயீஸ் தலைமையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் Lemon Gras, Health Mix, Organic bio Cleaner ஆகிய மூன்று புத்தாக்க கண்டுபிடிப்புகள் அறிமுகம் செய்துவைக்கப்பட்டதுடன், இவற்றை புத்தாக்க சிந்தனையுடன் கண்டுபிடித்தவர்களும் பாராட்டி கௌரவிக்கப்பட்டனர்.

இந்நிகழ்வுக்கு பிரதம அதிதியாக கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் ஐ.எல்.எம்.றிபாஸ், நிந்தவூர் பிரதேச சபை தவிசாளர் எம்.ஏ.அஷ்ரப் தாஹிர், நிந்தவூர் சுகாதார வைத்திய அதிகாரி அலுவலக பொதுச் சுசுகாதார பரிசோதகர்கள், சுகாதார வைத்திய அதிகாரி காரியாலய உத்தியோகத்தர்கள் உள்ளிட்ட பல பிரமுகர்கள் கலந்துகொண்டிருந்தனர்.

## ஆலய உண்டியல் வருமானத்தில் மாணவர்களின் கல்விக்காக செலவிடும் அக்கரைப்பற்று ஸ்ரீ வம்மியடிப்பிள்ளையார் ஆலயம்



(ஆலையடிவேம்பு நிருபர்)

ஆலய உண்டியல் மூலம் கிடைக்கும் வருமானத்தில் மூன்றில் ஒரு பகுதியை மாணவர்களின் கல்வி மேம்பாட்டிற்காக செலவிடுவது எனும் அக்கரைப்பற்று ஸ்ரீ வம்மியடிப்பிள்ளையார் ஆலயத்தின் தீர்மானத்திற்கமைய ஆனிப் பௌர்ணமி மகோற்சவத்தை முன்னிட்டு கல்வியில் சிறந்து விளங்கும் தெரிவுசெய்யப்பட்ட மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்கள் வழங்கும் செயற்பாடு ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இப்பணிக்கு நன்கொடையாளர்களும் நிதியை வழங்கிவரும் நிலையில், தொடராக இச்செயற்பாடு முன்னெடுக்கப்படவுள்ளது. இதன் பிரகாரம் இடம்பெற்ற திருவிளக்கு பூஜையினை தொடர்ந்து வெளிவீதி உலாவின் தெற்கு வாசலில் வைத்து இப்பணி ஆரம்பித்துவைக்கப்பட்டது.

ஆரம்ப நிகழ்வில் ஆலையடிவேம்பு பிரதேச செயலாளர் வி.பபாகரன் மற்றும் அக்கரைப்பற்று இராணுவ முகாமின் 241ஆம் படைப்பிரிவின் கட்டளை அதிகாரி பிரிகேடியர் ஏ.எம்சி.அபயகோன் உள்ளிட்டவர்கள் கலந்துகொண்டனர்.

ஸ்ரீ வம்மியடிப்பிள்ளையார் ஆலயத்தில் கடந்த இரு வருடம் கொரோனா அச்சுறுத்தல் காரணமாக மகோற்சவம் இடம்பெறாத நிலையில், இவ்வருடம் மகோற்சவம் இடம்பெறுகின்றது.

இந்நிலையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற யாகபூஜைகள் தொடர்ந்து கொடித்தம்ப பூஜையும் திருவிளக்கு பூஜையும் இடம்பெற்றது. பின்னர் வசந்த மண்டபத்தில் வீற்றிருக்கும் விநாயகப் பெருமானுக்கு விசேட அலங்கார பூஜை நடைபெற்றதன் பின்னர் எழுந்தருளிய



விநாயகப்பெருமான் அடியார்களினால் நாதஸ்வர மேள ஒலி முழங்க அடியார்களின் பிரார்த்தனையுடன் உள்வீதி வலமாக அழைத்துச் செல்லப்பட்டு அழகிய சப்பரத்தில் அமர்த்தப்பட்டு வெளிவீதி உலாவாக அழைத்துச்செல்லப்பட்டார்.

தெற்கு வாசலில் வைத்து மாணவர்களின் சமய சொற்பொழிவுகள், பேச்சுகள் மற்றும் நடன நிகழ்வுகள் நடைபெற்றதுடன், கல்வியில் சிறந்து விளங்கும் தெரிவுசெய்யப்பட்ட மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்களும் வழங்கப்பட்டன. இதேநேரம் ஆலய மகோற்சவ பணிகளுக்கு ஒத்துழைப்பு மற்றும் உதவியினை வழங்கிய ஆலையடிவேம்பு பிரதேச செயலாளர் வி.பபாகரன் மற்றும் அக்கரைப்பற்று இராணுவ முகாமின் 241ஆம் படைப்பிரிவின் பிரிகேடியர் ஏ.சி.ஏ.அபயகோன் உள்ளிட்டோர் குருமார்களால் பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டனர்.

# கிழக்கிலும் 'கோட்டா கோ ஹோம்' போராட்டம்










**(அம்பாறை, மட்டக்களப்பு, கல்முனை, திருகோணமலை, மாளிகைக்காடு, காத்தான்குடி நிருபர்கள்)**

அரசாங்கத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்து 'கோட்டா கோ ஹோம்' போராட்டம் கிழக்கு மாகாணத்தின் அம்பாறை, கல்முனை, காத்தான்குடி, திருகோணமலை, மட்டக்களப்பு போன்ற இடங்களில் நேற்று முன்தினம் (09) மேற்கொள்ளப்பட்டது.

இதேவேளை, மாளிகைக்காடு சந்தியிலிருந்து கல்முனை நகர் வரையிலான 'கோட்டா கோ ஹோம்' போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. சமூக ஆர்வலர்கள் பலரும் ஒன்றிணைந்து முன்னெடுத்த இந்தப் போராட்டத்தில் சைக்கிள் பேரணியும் நடைபெற்றது.

கல்முனை வரை சென்ற போராட்டக்காரர்கள் இதன்போது, டீசல் இல்லை - கல்வி இல்லை, பெற்றோல் இல்லை - டீசல் இல்லை, வாழ்க்கை செலவு வான் அளவு, தொழில் இல்லை, கொள்ளையடித்த டொலர் இல்லை, வலை இல்லை, வயிற்றுப் பசி, சமையலுக்கு கேஸ் இல்லை, கோட்டா - ரணில் நல்ல துக்கம், கோட்டா - ரணில் வீட்டுக்குப்போ என்று கோஷங்களை எழுப்பினர்.

இதேபோன்று ஐக்கிய மக்கள் சக்தி கல்முனைத் தொகுதி அமைப்பாளர் சட்டத்தரணி எம்.எஸ்.அப்துல் றசாக் தலைமையில் ஐக்கிய மக்கள் சக்தி கல்முனைத் தொகுதி ஆதரவாளர்களினால் முன்னெடுக்கப்பட்ட ஆர்ப்பாட்டமொன்று சாய்ந்தமருது முடிவிலிருந்து ஆரம்பித்து கல்முனை வரை நடைபெற்றது. இதன்போது ஜனாதிபதி கோட்டா மற்றும் பிரதமருக்கு எதிராக பல்வேறு கோஷங்களை எழுப்பினர்.

இதேவேளை, திருகோணமலை - ஹொரவப்பொத்தான பிரதான வீதி மஹதிவுல்வெவ பாடசாலைக்கு முன்னால் மக்கள் அரசாங்கத்துக்கு எதிராக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். எதிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் வீதியை மறித்துப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

கோட்டா - ரணில் அரசாங்கத்தை விட்டு வெளியேற வேண்டும். நாங்கள் இந்த நாட்டில் இருக்க வேண்டும். இந்த நாட்டை விட்டு கோட்டா வெளியேற வேண்டும் எனவும் மக்கள் கோஷங்களை எழுப்பி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

மேலும், கிரான்குளத்தில் அரசுக்கு எதிராக மக்கள் எழுச்சி போராட்டம் இடம்பெற்றது.

"கோட்டா ரணில் கூட்டுச்சதியை முறியடிப்போம்" எனும் தொனிப்பொருளில் ஐக்கிய மக்கள் சக்தியின் ஏற்பாட்டில் கிரான்குளம் பகுதியில் மட்டக்களப்பு - கல்முனை பிரதான வீதியில ஆர்ப்பாட்டப் பேரணியொன்று முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது அரசுக்கு எதிராக வாசகங்கள் அடங்கிய பதாகைகள் ஏந்தியவாறும், ''கோட்டா கோ ஹோம்'' என்று கோஷமெழுப்பியவாறும் ஆர்ப்பாட்டப் பேரணியை முன்னெடுத்திருந்தனர்.

## ஓட்டமாவடி - ஓட்டுவெளியில் யானை தாக்கியதில் ஒருவர் பலி

**(மீராவோடை நிருபர்)**

வயல் காவலில் ஈடுபட்டுக்கொண்டிருந்த நபரொருவர் யானை தாக்கி மரணமடைந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.


வாழைச்சேனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஓட்டமாவடி - ஓட்டுவெளி எனும் வயல் பகுதியில் வைத்தே இந்தச் சம்பவம் கடந்த வெள்ளிக்கிழமை (8) இரவு 8 மணியளவில் இடம்பெற்றுள்ளது. வேளாண்மை அறுவடை நடைபெற்றுக்கொண்டிருந்தபோது வயல் காவலில் ஈடுபட்டுக்கொண்டிருந்தவேளை அப்பகுதிக்கு வந்த நான்கு யானைகளை குறித்த நபர் விரட்டியபோது அதில் ஒரு யானை தாக்கியுள்ளது.

இவ்வாறு யானையின் தாக்குதலுக்குள்ளான நபர் வாழைச்சேனை ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு சிகிச்சைபெற்றுவந்த நிலையில், சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

ஓட்டமாவடி - 3ஆம் வட்டாரம் பரியாரியார் வீதியைச் சேர்ந்த நான்கு பிள்ளைகளின் தந்தையான 65 வயதுடைய முகம்மது முகைதீன் அகமது லெப்பை என்பவரே யானை தாக்குதலில் உயிரிழந்தவராவார்.

மரணமடைந்த நபரின் உடல் வாழைச்சேனை ஆதார வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளதுடன், இச்சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை வாழைச்சேனை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## போடியார் புலம்பல்!



**எதிர்வரும் 13ஆம் திகதி பதவியை இராஜினாமா செய்வேன் என ஜனாதிபதி கோட்டா சொல்லியிருக்காரு எலுவா..?**

**ஏன் 13ஆம் திகதி ஒருவேள சாமான் எல்லாம் கட்டித்து வெளிநாட்டுக்கு போன புறகுதான் கடிதத்தில திகதிய 13 என போடச்சொல்லி சபாநாயகருட்ட ஏற்கனவே கடிதத்த கொடுத்துப்போட்டு போனாரோ யோசிக்க வேண்டிய விடயம்தான்!**

## திருமலை ஊடகவியலாளர் சங்கத்தினால் ஊடகர்களுக்கு எரிபொருள் வழங்க ஏற்பாடு



திருகோணமலை மாவட்ட ஊடகவியலாளர் சங்கத்தினால் ஊடகவியலாளர்களுக்கு எரிபொருள் வழங்குவதற்கான ஏற்பாடுகள் திருகோணமலை ஊடகவியலாளர் சங்கத்தின் தலைவர் மங்கள லியனாரச்சியினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

அந்தவகையில்



**(திருமலை நிருபர்)**

திருகோணமலை ஊடகவியலாளர்களுக்கு எரிபொருளை பெறுவதற்கான ஏற்பாடுகளை ஊடகவியலாளர் சங்கம் ஏற்பாடு செய்துள்ளது.

நாட்டில் ஏற்பட்டுள்ள அசாதாரண சூழ்நிலை காரணமாக எரிபொருள் தட்டுப்பாடு நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்ற நிலையில், அரசினால் விசேடமாக அத்தியாவசிய சேவைகளுக்கு எரிபொருள் வழங்குமாறு விசேட வர்த்தமானி மூலம் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

குறித்த வர்த்தமானியில், ஊடகத்துறையினை அத்தியாவசிய சேவையாக உள்ளடக்கப் படாமையினால் நாட்டில் பெரும்பாலான பிரதேசத்திலுள்ள ஊடகவியலாளர்கள் செய்தி சேகரிப்பின்போது எரிபொருளின்றி பெரிதும் சிரமப்பட்டு வருகின்ற நிலையில், திருகோணமலை மாவட்ட ஊடகவியலாளர்கள் எரிபொருள் கொள்வனவிற்காக எரிபொருள் நிரப்பு நிலையங்களில் நீண்ட வரிசைகளில் காத்திருக்காமல் எரிபொருளை கொள்வனவு செய்யக்கூடிய ஏற்பாடுகள் திருகோணமலை ஐ.ஓ.சி. எரிபொருள் நிரப்பு நிலையத்தில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

## ஆறு மாத சிசுவை கொலைசெய்த தாய் கைது

**(திருகோணமலை நிருபர்)**

திருகோணமலை சீனக்குடா பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சின்னம்பிள்ளை சேனை பகுதியில் ஆறு மாத சிசுவின் சடலமொன்று கடந்த வியாழக்கிழமை மீட்கப்பட்டிருந்தது. இந்நிலையில், சிசுவை கொலை செய்த தாய் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

துர்நாற்றம் வீசுவதாக பொலிஸாருக்குக் கிடைக்கப்பெற்ற தகவலையடுத்து குறித்த வீட்டை சோதனையிட்டபோது ஷொப்பிங் பேக் ஒன்றில் சிசுவின் சடலம் சுற்றி போடப்பட்ட நிலையில் கண்டெடுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, சீனக்குடா பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சின்னம்பிள்ளை சேனை பிரதேசத்தில் ஆறு மாத சிசுவை கொலைசெய்த தாய் கைதுசெய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.


திருகோணமலை சீனக்குடா சின்னம்பிள்ளை சேனை பிரதேசத்தில் தகாத உறவினால் கருவுற்ற தாய் ஒருவர் தனது 6 மாத சிசுவை கொலைசெய்துள்ளதாக பொலிஸாரின் விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

குறித்த சந்தேக நபரை திருகோணமலை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டுள்ளதாக சீனக்குடா பொலிஸார் தெரிவித்தனர். சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை சீனக்குடா பொலிஸார் மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

கிழக்கு செய்திகள்
easttamilan@gmail.com

## மாளிகைக்காடு, சாய்ந்தமருதில் பெருநாள் தொழுகை!







**(நூருல் ஹுதா உமர்)**

தியாகத்தைப் போதிக்கும் புனித ஹஜ்ஜுப் பெருநாளை நாட்டின் பொருளாதார சிக்கல் நிறைந்த சூழ்நிலையில் இம்முறை இலங்கை முஸ்லிம்கள் சுகாதார வழிமுறைகளைப் பேணி அமைதியான முறையில் நாடுதழுவிய ரீதியில் நேற்று (10) கொண்டாடி வருகிறார்கள். அதன் ஓர் அங்கமாக மாளிகைக்காடு அந்நூர் ஜும்மா பெரிய பள்ளிவாசலில் பெருநாள் தொழுகையும், குத்பா பிரசங்கமும் ஜும்மா பள்ளிவாசல் பேஸ் இமாம் மௌலவி ஏ.எல்.எம்.மின்ஹாஜ்ஜால் (உஸ்மானி) நிகழ்த்தப்பட்டது.


சாய்ந்தமருது அல்-அக்ஸா பள்ளிவாசல் நிர்வாகத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட பெருநாள் தொழுகையும், குத்பா பிரசங்கமும் சாய்ந்தமருது கமு/கமு/ லீடர் எம்.எச்.எம்.அஷ்ரப் வித்தியாலய மைதானத்தில் இடம்பெற்றது. பெருநாள் தொழுகையையும் குத்பா பிரசங்கத்தையும் மௌலவி அப்துல் ஜப்பார் நிகழ்த்தினார்.

சாய்ந்தமருது ஜாமிஉல் இஸ்லாஹ் ஜும்மாப் பள்ளிவாசல் நிர்வாகத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட பெருநாள் தொழுகையும், குத்பா பிரசங்கமும் சாய்ந்தமருது அப்பிள்தோட்ட திடலில் இடம்பெற்றது. பெருநாள் தொழுகையையும் குத்பா பிரசங்கத்தையும் மௌலவி எம்.எஸ்.எம். ஸாதிக் (ஸலபி) நிகழ்த்தினார்.

பொருளாதாரத் தடைகள், கஷ்டங்கள், நெருக்கடிகள் நீங்கி நாட்டில் சமாதானமும் சுபீட்சமும் ஓங்க துஆ பிரார்த்தனை இடம் பெற்றது. முஸ்லிம்கள் சுதந்திரமாகவும், மகிழ்ச்சியாகவும் தொழுகையில் ஈடுபட்டிருந்ததுடன், தொழுகை முடிந்தவுடன் தமது அன்பை ஒருவருக்கொருவர் பரிமாறிக்கொண்டனர். மரணித்த உறவுகளுக்காக அவர்களின் குடும்ப உறுப்பினர்களினால் மையவாடிகளில் துஆ பிரார்த்தனை இடம்பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## களுவாஞ்சியூர் அநோஜா பவளேந்திரனின் 'சுடுசோறு' சிறுகதை நூல் வெளியீடு!

**(க.கிருபாகரன்)**




பௌர்ணமி கலை, இலக்கியத் தொடரின் 44ஆவது நிகழ்வாக மகுடம் கலை இலக்கிய வட்டம் நடத்தும் களுவாஞ்சியூர் அநோஜா பவளேந்திரனின் 'சுடுசோறு' சிறுகதைகள் நூல் வெளியீட்டு விழா எதிர்வரும் 13ஆம் திகதி (புதன்கிழமை) களுவாஞ்சிக்குடி இராசமாணிக்கம் கலாசார மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

ஓய்வுபெற்ற கிழக்கு மாகாண மேலதிக கல்விப் பணிப்பாளர் சி.மனோகரன் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வுக்கு கோறளைப்பற்று மேற்குப் பிரதேச செயலாளர் வெ.தவராசா பிரதம விருந்தினராகவும், கிழக்குப் பல்கலைக்கழக ஓய்வுநிலைப் பேராசிரியர் செ.யோகராசா சிறப்பு விருந்தினராகவும், களுவாஞ்சிக்குடி கிராமத் தலைவரும், ஆலய பரிபாலன சபைத்தலைவருமான அ.கந்தவேள், களுவாஞ்சிக்குடி சைவ மகாசபைத் தலைவரும், கிழக்கு பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளருமான க.மதிசீலன், பட்டிருப்பு கல்வி வலய தமிழ்ப்பாட உதவிக் கல்விப் பணிப்பாளர் ந.நேச. கஜேந்திரன், ஓய்வுநிலை தமிழ்ப்பாட உதவிக் கல்விப் பணிப்பாளர் க.குணசேகரம், மண்டூர் 14 சக்தி மகா வித்தியாலய அதிபர் வ.சௌஜன், மகிழூர் சரஸ்வதி மகா வித்தியாலய அதிபர் சா.பத்மகுமார், பட்டிருப்பு கல்வி வலய சேவைக்கால பயிற்சி ஆலோசகர் திருமதி விஜயலெட்சுமி செல்வராசா மற்றும் ஓய்வு பெற்ற ஆசிரியை சி.ரஜனி ஆகியோர் கௌரவ விருந்தினர்களாகவும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

இந்நூலின் முதல் பிரதியை மட்டக்களப்புத் தமிழ்ச்சங்கத் தலைவரும், கொடைவள்ளலுமான சைவப்புலவர் வி. றஞ்சிதமூர்த்தி பெற்றுக்கொள்வார்.

இந்நூலுக்கான வெளியீட்டுரையை மகுடம் பதிப்பகத்தின் இயக்குனர் மகுடம் வி.மைக்கல் கொலினும், நூல் நயவுரையை கிழக்குப் பல்கலைக்கழக சுவாமி விபுலானந்தா அழகியற் கற்கைகள் சிரேஷ்ட விரிவுரையாளர் கந்தசாமி மேகனதாசனும், ஏற்புரையை நூலாசிரியை களுவாஞ்சியூர் அனோஜா பவளேந்திரனும் நிகழ்த்தவுள்ளனர்.

## பாம்பு தீண்டியதில் வயோதிபர் மரணம்

### வெல்லாவெளியில் சம்பவம்!

**(கல்லடி நிருபர்)**

வெல்லாவெளி பொலிஸ் பிரிவிற்குட்பட்ட திக்கோடை, தும்பாலை பிரதேசத்தில் பாம்பு தீண்டியதில் வயோதிபர் ஒருவர் வெல்லாவெளி பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

திக்கோடை, தும்பாலை பிரேதசத்தைச் சேர்ந்த பொன்னுத்துரை மாணிக்கம் (வயது-67) என்பவரே இவ்விபத்தில் பலியானவர்.

தனது மாடுகளை பராமரித்துவிட்டு, தனது வீட்டு அறையினுள் ஓய்வெடுத்திருந்தபோது, வீட்டு அறையினுள் மறைந்திருந்த பாம்பு தீண்டியதில் மயக்கமடைந்திருந்த நிலையில், உறவினர்களின் உதவியுடன் களுவாஞ்சிக்குடி ஆதார வைத்தியசாலைக்கு கொண்டுசென்றபோது, சிகிச்சை பலனின்றி மரணமடைந்திருந்ததாக பொலிஸாரின் ஆரம்பக்கட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

களுவாஞ்சிக்குடி பதில் நீதிமன்ற நீதிவானின் உத்தரவிற்கமைவாக சம்பவ இடத்திற்குச் சென்ற மண்டூர் பிரதேச திடீர் மரண விசாரணை அதிகாரி தம்பிப்பிள்ளை தவக்குமார் சடலத்தைப் பார்வையிட்டதுடன், சடலத்தை பிரேத பரிசோதனைக்கு உட்படுத்திய பின்னர், உறவினர்களிடம் பிரேதத்தை கையளிக்கும்படி உத்தரவிட்டுள்ளார்.

## சட்டவிரோதமாக விற்பனை செய்ய வைத்திருந்த 30 லீற்றர் பெற்றோலுடன் சந்தேக நபர் கைது

**(திருமலை நிருபர்)**

திருகோணமலை, சீனக்குடா பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட டிடிஏ சந்தி பிரதேசத்தில் சட்டவிரோதமான முறையில் பெற்றோல் விற்பனையில் ஈடுபட்ட நபர் ஒருவரை கைதுசெய்துள்ளதாக சீனக்குடா பொலிஸார் தெரிவித்தனர்.


சீனக்குடா பொலிஸாருக்குக் கிடைக்கப்பெற்ற இரகசியத் தகவலையடுத்து மேற்கொள்ளப்பட்ட விசேட சோதனை நடவடிக்கையின்போது சட்டவிரோதமான முறையில் விற்பனை செய்வதற்கு சேமித்து வைக்கப்பட்ட 30 லீற்றர் பெற்றோலுடன் நபர் ஒருவரை கைதுசெய்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இவ்வாறு கைதுசெய்யப்பட்ட சந்தேக நபரான டிடிஏ சந்தி பிரதேசத்தைச் சேர்ந்த பி.லியனாரச்சியை (வயது-52) நீதிமன்றத்தில் ஆஜர்படுத்துவதற்கான நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளதாகவும் மேலதிக விசாரணைகளை சீனக்குடா பொலிஸார் மேற்கொண்டு வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது.

## மட்டு. புன்னைச்சோலையில் சட்டவிரோத மதுபான விற்பனை நிலையம் முற்றுகை

### 126 கால் போத்தல்களுடன் வியாபாரி ஒருவர் கைது

**(கனகராசா சரவணன்)**



மட்டக்களப்பு தலைமையகப் பொலிஸ் பிரிவிலுள்ள குமாரபுரம் புன்னைச்சோலை பகுதியில் சட்டவிரோத மதுபான விற்பனை நிலையத்தை முற்றுகையிட்ட பொலிஸார், 126 கால் போத்தல்கொண்ட மதுபானப் போத்தல்களுடன் பெண் வியாபாரி ஒருவரை நேற்று முன்தினம் (09) இரவு கைதுசெய்துள்ளதாக மாவட்ட குற்ற விசாரணைப் பிரிவு பொறுப்பதிகாரி பி.எஸ்.பி.பண்டார தெரிவித்தார்.

மாவட்ட குற்ற விசாரணைப் பிரிவுக்குக் கிடைத்த தகவல் ஒன்றுக்கமைய சம்பவதினமான நேற்று இரவு குறித்த வீட்டை மாவட்ட குற்ற விசாரணைப் பிரிவு பொறுப்பதிகாரி பி.எஸ்.பி.பண்டார தலைமையிலான பொலிஸார் முற்றுகையிட்டபோது அங்கு மதுபான வியாபாரத்தில் ஈடுபட்டுக்கொண்டிருந்த 45 வயதுடைய பெண் ஒருவரை கைதுசெய்ததுடன், அவரிடமிருந்து 126 கால் போத்தல்கொண்ட மதுபானப் போத்தல்களை மீட்டனர். இதில் கைதுசெய்யப்பட்டவரை நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

# உலக செய்திகள்

## சர்வதேச சமுதாயம் இலங்கைக்கு உதவ வேண்டும்

### சோனியா காந்தி வலியுறுத்து



(திருச்சி எம்.கே.ஷாகுல் ஹமீது )


இலங்கைக்கு சர்வதேச சமுதாயம் உதவிக்கரம் நீட்ட வேண்டும் என்று காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தி வலியுறுத்தியுள்ளார்.

இதுகுறித்து காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தி வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியதாவது,

இலங்கையில் நிலவும் அரசியல் சூழ்நிலையை வருத்தத்துடன் காங்கிரஸ் கட்சி கவனித்து வருகிறது. இலங்கையில் ஏற்பட்டுள்ள பெரும் நெருக்கடியான சூழலில் அந்நாட்டு மக்களுடன் காங்கிரஸ் கட்சி துணை நிற்கிறது. பொருளாதார சவால்கள், விலைவாசி உயர்வு மற்றும் உணவு, எரிபொருள் மற்றும் அத்தியாவசிய பொருட்களின் பற்றாக்குறை ஆகியவற்றால் மக்களிடையே பெரிய அளவில் பாதிப்பும், மனஅழுத்தமும் ஏற்பட்டுள்ளது. இலங்கை மக்கள் இந்த நெருக்கடியில் இருந்து மீண்டு வருவார்கள் என்ற நம்பிக்கை உள்ளது.

நடப்பு சூழ்நிலையில் கஷ்டங்களை எதிர்கொண்டு வரும் இலங்கை அரசுக்கும், மக்களுக்கும் இந்தியா தொடர்ந்து உதவிகளை வழங்கும் என நாங்கள் நம்பிக்கை கொண்டுள்ளோம் என அவர் தெரிவித்துள்ளார். இதேபோன்று சர்வதேச சமூகமும் இலங்கைக்கு தேவையான அனைத்து உதவிகளையும், ஆதரவையும் வழங்க வேண்டும். தற்போதைய நெருக்கடி நிலையிலிருந்து இலங்கை மீண்டு வரும் என எதிர்பார்க்கிறேன் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

## பொன்னியின் செல்வனின் காதலியாக நடிப்பது யார்?



கல்கி எழுதிய பொன்னியின் செல்வன் சரித்திர நாவலை அடிப்படையாக வைத்து மணிரத்னம் இயக்கியுள்ள 'பொன்னியின் செல்வன்' படத்தின் முதல் பாகத்தின் டீசர் வெளியாகி பெரும் எதிர்பார்ப்பை ஏற்படுத்தியுள்ளது.

மிக முக்கிய கதாபாத்திரங்களில் நடிப்பவர்களை சில விநாடிகள் காட்டி, துணை கதாபாத்திரங்களில் நடிப்பவர்களை ஒரு பிரேமில் மட்டுமே டீசரில் காட்டியிருக்கிறார்கள். மற்ற கதாபாத்திரங்களில் நடிப்பவர்களின் தோற்றம் எப்படியிருக்கிறது என்பதை டீசரின் வேகத்தைக் குறைத்தே பார்த்து தெரிந்துகொள்ள வேண்டியதாக இருக்கிறது.

அப்படி தேடிப் பார்த்த பின்புதான் பொன்னியின் செல்வனாக நடிக்கும் ஜெயம் ரவியின் காதலியாக யார் நடிக்கிறார்கள் என்பதை சற்றே தெரிந்துகொள்ள முடிந்தது. சோழப் பேரரசின் சேனாதிபதியாக இருந்த கொடும்பாளூர் பெரிய வேளார் பூதி விக்ரம கேசரியின் மகளான வானதி தான் பொன்னியின் செல்வன் அருள் மொழி வர்மனின் காதலி.

அந்த வானதி கதாபாத்திரத்தில் புதுமுகம் சோபிட்டா துலிபலா நடித்திருக்கிறார். இவர் 2013ஆம் ஆண்டு பெமினா மிஸ் இந்தியா எர்த் பட்டம் வென்றவர். ஹிந்தி, தெலுங்கு, மலையாளத்தில் நடித்திருக்கிறார். தமிழில் அறிமுகமாகும் படம் இது. பொன்னியின் செல்வனில் சோபிட்டா ஏற்று நடித்திருக்கும் வானதி கதாபாத்திரம் ஒரு சுவாரஸ்யமான கதாபாத்திரம்.

இந்த சோபிட்டா துலிபலா தான் சமந்தாவின் முன்னாள் கணவரான நாக சைதன்யாவின் தற்போதைய காதலி என கடந்த சில வாரங்களாக தெலுங்கு மீடியாக்களில் கிசுகிசு எழுந்தது.

## ஜப்பான் முன்னாள் பிரதமர் ஷின்சோ அபேவின் உடல் நாளை நல்லடக்கம்

### பொதுமக்கள் அஞ்சலியால் கண்ணீர் மழையில் நனைந்த டோக்கியோ

ஜப்பானின் முன்னாள் பிரதமர் மறைந்த ஷின்சோ அபேவின் இறுதிச் சடங்குகள் நாளை (12ஆம் திகதி நடைபெறவுள்ளன. அபேவின் உடல், பொதுமக்கள் அஞ்சலிக்காக டோக்கியோவிலுள்ள அவரது வீட்டில் வைக்கப்பட்டுள்ளது.

கடந்த வெள்ளிக்கிழமை (08ஆம் திகதி) தேர்தல் பரப்புரையின்போது ஷின்சோ அபே சுட்டுக் கொல்லப்பட்டார். இந்நிலையில், அபேவின் உடல் நேற்று முன்தினம் நாரா மருத்துவமனையிலிருந்து











அமரர் ஊர்தியூடாக தலைநகர் டோக்கியோவிலுள்ள அவரது வீட்டிற்கு கொண்டுச் செல்லப்பட்டது. அபேவின் மனைவி அகி அபே கண்ணீர் மல்க, காரில் அமர்ந்தபடியே உடலை எடுத்துச்சென்றார். வீட்டின் முன் குவிந்திருந்த மக்கள், அபேவுக்கு அஞ்சலி செலுத்தினர். ஜப்பான் பிரதமர் கிஷிடோ, அபேவின் வீட்டிற்குச் சென்று அஞ்சலி செலுத்தினர்.





இந்நிலையில் அவரது உடல் நாளை 12ஆம் திகதி முழு அரச மரியாதையுடன் நல்லடக்கம் செய்யப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

#### குவாட் நாடுகள் அஞ்சலி

இந்தியா, அமெரிக்கா, அவுஸ்திரேலியா, ஜப்பான் ஆகிய நாடுகள் அமைந்துள்ள குவாட் அமைப்பு, மறைந்த ஷின்சோ அபேவுக்கு இரங்கல் தெரிவித்துள்ளன. இது தொடர்பாக, அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன், இந்திய பிரதமர் மோடி, அவுஸ்திரேலிய பிரதமர் அந்தோணி அல்பானிஸ் ஆகியோர் விடுத்துள்ள கூட்டறிக்கையில்,

''நமது ஒவ்வொரு நாட்டுடனும், ஜப்பான் உடனான உறவில் மகத்தான மாற்றத்தை ஏற்படுத்தியவர் அபே. குவாட் அமைப்பு நிறுவுவதிலும் அவர் முக்கிய பங்காற்றியுள்ளார். அமைதியான, வளமான இந்தோ-பசுபிக் பிராந்தியத்தை நோக்கிய எங்கள் பணியை இரட்டிப்பாக அதிகரிப்பதன் மூலம் அபேவின் நினைவை போற்றுவோம்'' - என தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், அபேவின் மறைவுக்கு இரங்கல் தெரிவிக்கும் வகையில், இந்தியாவிலும், அமெரிக்காவிலும் அரசு கட்டடங்களில் தேசியக் கொடி அரைக்கம்பத்தில் பறக்கவிடப்பட்டது.

கடந்த 2020ஆம் ஆண்டு, உடல் நலக்குறைவு காரணமாக ஷின்சோ அபே பதவி விலகினார்.

ஜப்பான் மேலவைக்கு தேர்தல் நடைபெறவிருக்கும் நிலையில், கடந்த வெள்ளிக்கிழமை ஆளும் Liberal Democratic கட்சியைச் சேர்ந்தவரும், முன்னாள் பிரதமருமான ஷின்சோ அபே மத்திய ஜப்பானிலுள்ள நாரா என்ற இடத்தில் பிரசாரம் மேற்கொண்டார்.

வெகுசிலரே கூடியிருந்த நிலையில், திடீரென பின்னாலிருந்து வந்த ஒருவர், மிக அருகிலிருந்து ஷின்சோ அபேவை நோக்கி இரு முறை துப்பாக்கியால் சுட்டார். இதில் சுய நினைவை இழந்த ஷின்சோ அபே இரத்த வெள்ளத்தில் சாய்ந்தார். ஜப்பான் நேரப்படி காலை 11.30 மணிக்கு இச்சம்பவம் நடைபெற்றது.

உடனடியாக ஹெலிகொப்டர் மூலம் நாரா மருத்துவப் பல்கலைக்கழக மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லப்பட்டார் அபே. 67 வயதான ஷின்சோ அபே உடலிலிருந்து அதிக அளவு இரத்தம் வெளியேறிய நிலையில், ஜப்பான் நேரப்படி மாலை 5.03 மணிக்கு உயிரிழந்ததாக மருத்துவர்கள் தெரிவித்தனர்.

மிகவும் இக்கட்டான நிலையில் மருத்துவமனைக்கு கொண்டுவரப்பட்ட ஷின்சோ அபேவுக்கு 100 யுனிட் வரை இரத்தம் செலுத்தப்பட்டதாகவும், துப்பாக்கி குண்டு இதயத்தின் ஆழம் வரை பாய்ந்ததால் அவர் இறந்ததாகவும் மருத்துவர்கள் தெரிவித்தனர்.

இதனிடையே ஷின்சோ அபேவை சுட்ட யமாகாமி டெட்சூயா (Yamagami Tetsuya) என்பவரை பொலிஸார் மடக்கிப் பிடித்துள்ளனர். அவர் பயன்படுத்திய துப்பாக்கியும் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது. ஜப்பான் கடற் பாதுகாப்பு படையில் பணியாற்றிய அவர் 2005ஆம் ஆண்டு இராஜினாமா செய்துள்ளார். ஷின்சோ அபேயின் நடவடிக்கைகள் பிடிக்காததால், அவரை கொலை செய்ய வேண்டும் என்ற நோக்கோடு சுட்டதாக அவர் வாக்குமூலம் அளித்துள்ளார்.

இருமுறை பிரதமராக பதவி வகித்த ஷின்சோ அபே, ஜப்பானில் நீண்ட காலம் பிரதமராக இருந்தவர் என்ற பெருமை பெற்றவர்.

முதலில் 2006 - 2007ஆம் ஆண்டு வரையிலும் பின்னர் 2012 - 2020ஆம் ஆண்டு வரையிலும் பிரதமராக இருந்த அபே, உடல் நலக்குறைவினால் பிரதமர் பதவியிலிருந்து விலகியமை குறிப்பிடத்தக்கது.

#### அபேவை சுட்டுக் கொன்றவர் வீட்டிலிருந்து விதவிதமான துப்பாக்கிகள் பறிமுதல்

ஜப்பான் முன்னாள் பிரதமர் ஷின்சோ அபேவை சுட்டுக் கொன்ற டெட்சுயா யமாகாமி (வயது 41) வீட்டிலிருந்து விதவிதமான துப்பாக்கிகள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.

ஷின்சோ அபேவை கொலைசெய்ய பயன்படுத்திய துப்பாக்கி போன்ற ஆயுதத்தை டெட்சுயா, வீட்டிலேயே தயாரித்துள்ளதாக ஜப்பான் பொலிஸ் தெரிவித்துள்ளது. அவரது வீட்டிலிருந்து விதவிதமான இரும்பு குழாய்களைக் கொண்ட 3 துப்பாக்கி போன்ற ஆயுதங்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.

ஒன்லைனில் ஓர்டர் செய்த பொருட்களைக் கொண்டு தயாரித்த குண்டுகளைப் பயன்படுத்தி அபேவை அவர் கொலை செய்ததாகவும் ஜப்பான் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அத்தோடு, தான் வெறுத்த சில அமைப்புகளுடன் ஷின்சோ அபே தொடர்பு வைத்திருக்கலாம் எனக் கருதி அவரை கொலைசெய்ததாக யமாகாமி வாக்குமூலம் அளித்துள்ளதாக ஜப்பான் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

## பிரித்தானிய பிரதமர் பதவிக்கான பிரசாரத்தை தொடங்கிய ரிஷி சுனக்

பிரித்தானிய பிரதமர் பதவிக்கான பிரசாரத்தை ஆரம்பித்த முன்னாள் நிதியமைச்சர் ரிஷி சுனக், ''நம்பிக்கையை மீட்டெடுப்போம், பொருளாதாரத்தை மறுகட்டமைப்பு செய்வோம், நாட்டை ஒருங்கிணைப்போம்'' என பிரசார வீடியோவை வெளியிட்டுள்ளார்.



பிரதமர் பதவியிலிருந்து விலகுவதாக பொரிஸ்ஜோன்சன் அறிவித்த நிலையில், அடுத்த பிரதமரை தேர்வுசெய்வதற்கான நடவடிக்கைகள் தீவிரமடைந்துள்ளன.

பிரதமர் போட்டியில் முன்னணியிலிருக்கும் முன்னாள் நிதியமைச்சர் ரிஷி சுனக், ''யாராவது ஒருவர் பொறுப்பை கையில் எடுத்து சரியான முடிவுகளை எடுக்கவேண்டும்'' என பிரசார வீடியோ வெளியிட்டுள்ளார்.

#### அருங்காட்சியகத்திலிருந்து பொரிஸ் ஜோன்சன் சிலை அகற்றம்

பிரித்தானிய பிரதமர் பதவியிலிருந்து பொரிஸ் ஜோன்சன் விலகியதை அடுத்து லண்டனிலுள்ள புகழ்பெற்ற மேடம் டூசாட் அருங்காட்சியகத்தில் இருந்து அவரது மெழுகுச் சிலை அகற்றப்பட்டுள்ளது.

நீலநிற ஆடையுடன் கூடிய சூட் அணிந்த பொரிஸ் ஜோன்சனின் மெழுகுச் சிலை, தற்போது அருங்காட்சியகத்திற்கு வெளியே நடைபாதையில் வைக்கப்பட்டுள்ளது. அவரது மெழுகுச் சிலை முன்பு புகைப்படம் எடுக்கவும் மக்கள் ஆர்வம் காட்டவில்லை.

### இந்தியா உட்பட 5 நாடுகளுக்கான

## தூதர்களை பதவி நீக்கியது உக்ரைன்

இந்தியா, ஜேர்மனி, செக் குடியரசு, நோர்வே மற்றும் ஹங்கேரி ஆகிய நாடுகளுக்கான தூதர்களை பதவி நீக்கம் செய்வதாக உக்ரைன் ஜனாதிபதி வெலோடிமிர் ஸெலென்ஸ்கி (Volodymyr Zelensky) அறிவித்துள்ளார்.

உக்ரைன் மீது ரஷ்யா 4 மாதத்திற்கும் மேலாக தாக்குதலை நடத்தி வருகிறது. இதன் காரணமாக ரஷ்யா மீது அமெரிக்கா, பிரித்தானியா, அவுஸ்திரேலியா உள்ளிட்ட பல்வேறு நாடுகள் பொருளாதார தடைகளை விதித்துள்ளன.

இருப்பினும் இந்தியா ரஷ்யாவிடமிருந்து சலுகை விலையில் மசகு எண்ணெயை இறக்குமதி செய்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## ரஷ்ய படைகளுக்கு எதிராக போரிட்டு வீடு திரும்பிய உக்ரைன் வீரரை கட்டியணைத்து கதறியழுத அவரது மகள்

ரஷ்ய படைகளுக்கு எதிராக போரிட்டு வீடு திரும்பிய உக்ரைன் வீரரை, அவரது மகள் கட்டியணைத்துக் கொண்டு கதறியழுத வீடியோ இணையத்தில் பகிரப்பட்டு வருகிறது.

உக்ரைனில் நான்கு மாதங்களுக்கு மேலாக போர் நீடித்து வரும் நிலையில், போருக்கு மத்தியில் வீரரொருவர் வீடு





திரும்பியுள்ளார். வீட்டில் தனது தந்தையைக் கண்டதும் பேரானந்தமடைந்த அவரது மகள், அவரைக் கட்டியணைத்துக் கொண்டு கதறியழ, உணர்ச்சிவசப்பட்ட வீரரும் கண் கலங்கினார். உக்ரைனின் உள்துறை அமைச்சகத்தின் ஆலோசகர் அன்டன் ஜெராஷ்செங்கோ இந்த வீடியோவை தனது ட்விட்டர் பக்கத்தில் பகிர்ந்துள்ளார்.

## பாகிஸ்தானில் பெருவெள்ளம்: 8 அணைகள் உடைப்பு; குழந்தைகள் உட்பட 57 பேர் பலி; பலர் படுகாயம்

தெற்கு பாகிஸ்தானின் பலூசிஸ்தான் மாகாணத்தில் பெய்துவரும் கடும் மழையால் ஏற்பட்டுள்ள பெருவெள்ளப்பெருக்கில் 8 அணைகள் உடைந்து, ஊருக்குள் வெள்ளம் புகுந்ததில் 57 பேர் உயிரிழந்தனர்.

விடிய விடிய பெய்த மழையால் குடியிருப்பு கூரைகள் இடிந்து விழுந்து பலர் படுகாயமடைந்தனர். கனமழை பெருவெள்ளத்தில் அணைகளின் மதகுகள் உடைந்து ஊருக்குள் வெள்ளம் புகுந்தது.



வெள்ளத்தில் பெண்கள், குழந்தைகள் உள்ளிட்டோர் அடித்துச் செல்லப்பட்டதில் 57 பேரின் சடலங்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன. நூற்றுக்கணக்கான மக்கள் வீடுகளை இழந்து வாழ்வாதாரமின்றி தவித்து வருகின்றனர்.

# குழந்தைகள், கர்ப்பிணிகளை தாக்கும் புதிய வகை வைரஸ் நோய் பரவல்

## அவதானமாக இருக்குமாறு வைத்தியர்கள் வேண்டுகோள்

கர்ப்பிணித் தாய்மார்கள் மற்றும் குழந்தைகளை தாக்கும் ஒருவகை வைரஸ் பரவுவதாக மகப்பேற்று மற்றும் மகளிர் மருத்துவ நிபுணர் சனத் லெனரோல் தெரிவித்துள்ளார்.

இதனால் கர்ப்பிணித் தாய்மார்களை முடிந்தவரை முகக்கவசம் அணியுமாறு அவர் வலியுறுத்தியுள்ளார். வைரஸ் பரவலைத் தடுக்க கர்ப்பிணித் தாய்மார் சனநெரிசல்மிக்க இடங்களுக்குச் செல்வதை தவிர்க்குமாறும் வைத்தியர் சனத் லெனரோல் அறிவுறுத்தியுள்ளார்.

கர்ப்பிணித் தாய்மார்களுக்கு காய்ச்சல் ஏற்பட்டால், உடனடியாக மகப்பேற்று மருத்துவ நிபுணரை சந்திக்குமாறும், குழந்தைகளுக்கு காய்ச்சல் ஏற்பட்டால் அருகிலுள்ள அரச வைத்தியசாலைகளுக்கு அழைத்துச் செல்லுமாறும் மகப்பேற்று மற்றும் மகளிர் மருத்துவ நிபுணர் சனத் லெனரோல் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, குழந்தைகளையும் ஒருவகை வைரஸ் நோய் தாக்குவதாக வைத்தியர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். கடுமையான காய்ச்சல், உடல்சோர்வு போன்ற அறிகுறிகள் தென்படும் பட்சத்தில் உடனடியாக வைத்தியசாலைக்கு குழந்தைகளை அழைத்துச் செல்லுமாறு வைத்தியர்கள் பெற்றோர்களைக் கோரியுள்ளனர்.

# ஒஸ்ட்ரியாவுக்கான இலங்கையின் புதிய தூதுவராக கிறிஸ்டியன் வின்சர் நியமனம்



ஒஸ்ட்ரியாவின் சால்ஸ்பேர்க்கில் இலங்கையின் தூதுவராக கிறிஸ்டியன் வின்சரை நியமனம் செய்யும் ஆணையை தூதுவர் மஜிந்த ஜெயசிங்க கையளித்தார்.

புதிதாக நியமிக்கப்பட்டுள்ள இலங்கையின் கௌரவ தூதுவர் வின்சர், 1979இல் பயோ-நஹ்ருங்ஸ்மிட்டலை ஸ்தாபித்த ஒரு முக்கிய தொழில்முனைவோராவதுடன், இந்த நிறுவனம் சுகாதாரத் தயாரிப்பு நிறுவனமான மெய்ரெடரின் துணை நிறுவனமாக 70 ஆண்டுகளுக்கும் மேலாக சால்ஸ்பர்க்கின் சுகாதார மற்றும் இயற்கைப் பொருட்கள் மற்றும் சான்றளிக்கப்பட்ட இயற்கை உணவுத்துறையில் முன்னணி நிறுவனமாக விளங்குகின்றது.

இந்தக் குழுமத்திற்குச் சொந்தமான நிறுவனம் ஒஸ்ட்ரியா, ஜேர்மனி, சுவிட்சர்லாந்து, பிரான்ஸ், செக் குடியரசு, ஹங்கேரி மற்றும் ஐரோப்பாவின் ஏனைய பகுதிகளில் இயற்கை உணவு வர்த்தகத்தில் நம்பகமான பங்காளியாக உள்ளது. இந்நிறுவனம் இலங்கையிலிருந்து தேங்காய் சிப்ஸை பெற்றுக்கொள்கின்றது.

ஒஸ்ட்ரியாவின் 4ஆவது பெரிய நகரமாக இருக்கும் சால்ஸ்பர்க் வணிகப் பரிவர்த்தனைகளுக்கான பொருளாதார மையமாக விளங்குவதுடன், அங்கு பல உலக சந்தைத் தலைவர்கள் உட்பட புகழ்பெற்ற புதுமையான மற்றும் நன்கு நிலைநிறுத்தப்பட்ட முன்னணி ஒஸ்ட்ரிய நிறுவனங்கள் தமது தலைமையகத்தை அமைத்துள்ளன. சால்ஸ்பர்க்கின் வரலாற்று மையம் யுனெஸ்கோவால் உலகப் பாரம்பரியத்தளமாக அறிவிக்கப்பட்டுள்ளதுடன், இது ஒரு விருப்பமான சுற்றுலாத்தலமாகும்.

# ஊடகவியலாளர்கள் தாக்கப்பட்டமை தொடர்பில் விரிவான விசாரணைகள்



**பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தகவல்**

பிரதமர் ரணில் விக்ரமசிங்கவின் இல்லத்திற்கு முன்பாக நேற்றுமுன்தினம் (09) ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டபோது ஊடகவியலாளர் சிலர் பொலிஸ் விசேட அதிரடிப்படை அதிகாரிகளினால் தாக்கப்பட்ட சம்பவம் தொடர்பில் விரைவாக விசாரணை நடத்தப்படும் - என பொலிஸ் ஊடகப் பேச்சாளர், சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சட்டத்தரணி நிஹால் தல்துவ தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் ஊடகங்களுக்கு விடுத்துள்ள அறிக்கையில், பிரதமரின் இல்லத்திற்கு அருகில் ஊடகவியலாளர்களை பொலிஸ் விசேட அதிரடிப்படை அதிகாரிகள் தாக்கியிருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இச்சம்பவம் குறித்து உடனடியாக விசாரணைகளை மேற்கொண்டு ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்குமாறு பொலிஸ் மா அதிபர் பணிப்புரை விடுத்துள்ளார்.

சிரச ஊடக வலைப்பின்னலுக்குட்பட்ட ஊடகவியலாளர்களுக்கு இலங்கை பொலிஸ் கவலை தெரிவிப்பதாகவும் தாக்குதலை மேற்கொண்ட பொலிஸ் விசேட அதிரடிப்படையினருக்கு எதிராக விசாரணை நடத்தி சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்றும் தெரிவித்துள்ளார்.

# புதையல் தோண்டிய மூன்று பேர் கைது

தம்புள்ளை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட அம்பவத்தவில் தொல்பொருள் இடத்தில் புதையல் தோண்டிய மூவர் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

பொலிஸாருக்குக் கிடைத்த இரகசிய தகவலுக்கமைய நேற்றுமுன்தினம் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின்போது இவர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளதுடன், புதையல் தோண்டுவதற்காகப் பயன்படுத்தப்பட்ட பொருட்களும் கைப்பற்றப்பட்டுள்ளன.

தம்புள்ளை, தலகிரியாகம பகுதிகளைச் சேர்ந்த 46, 47, 61 வயதுடையவர்களே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். நீண்டகால திட்டமிடல்களின் அடிப்படையிலேயே புதையல் தோண்டப்பட்டுள்ளதாகவும் இதனுடன் மேலும் பலர் தொடர்புபட்டிருப்பதாகவும் ஆரம்பகட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

இச்சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை தம்புள்ளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# பிரபல வர்த்தக நாமமான ஹேமாஸ் ஓமானின் சந்தைக்குள் காலடி வைக்கிறது




இலங்கையில் 72 வருடங்கள் பழைமை வாய்ந்த முன்னணி பொது மேற்கோள் நிறுவனமான ஹேமாஸ் ஹோல்டிங் பி.எல்.சி. ஓமான் சந்தையில் காலடி எடுத்துவைக்கவுள்ளது.

ஓமான் வர்த்தக மற்றும் தொழில்துறை சம்மேளனத்தின் தலைவரான ரேதா ஜுமா அல்-சலேஹ்வைச் சந்தித்த ஓமான் சுல்தானேற்றுக்கான இலங்கைத் தூதுவர் அமீர் அஜ்வத் மற்றும் சர்வதேச வர்த்தக ஊக்குவிப்புக்கான ஹேமாஸ் சிரேஷ்ட முகாமையாளர் கவீந்திர கசுன் சிகேரா ஆகியோர் ஹேமாஸ் வர்த்தக நாமத்தை அறிமுகப்படுத்தி வைத்தனர். ஹேமாஸ் தயாரிப்புகளை ஓமான் சந்தையில் வழங்குவதற்கான வழிகள் மற்றும் வழிமுறைகள் மற்றும் சுல்தானேற்றில் ஹேமாஸ் உற்பத்தி நிலையத்தை நிறுவுவதற்கான எதிர்கால நோக்கம் குறித்தும் அவர்கள் கலந்துரையாடினர்.

வணிக இணைப்புகளை நிறுவுவதற்காக, ஹேமாஸின் சர்வதேச வணிகத்திற்கான சிரேஷ்ட முகாமையாளர் மற்றும் மஸ்கட் பார்மசி (எவ்.எம்.சி.ஜீ. பிரிவு), கான்கார்டியா குழுமம், ஃபியுச்சர் வெல் டிரேடிங், லுலு ஹைப்பர் மார்க்கெட், ஸ்பார் பல்பொருள் அங்காடிகள் உட்பட ஓமானிலுள்ள அவர்களது சாத்தியமான சகாக்களுக்கு இடையேயான தொடர் வணிக சந்திப்புகளுக்கு மஸ்கட்டில் உள்ள இலங்கைத் தூதரகம் வழிவகுத்தது.

# பாடசாலை இல்லாத நாட்களில் மணவர்களுக்கு ஆன்மீகப் போதனை

## கல்வி அமைச்சரிடம் பாபு சர்மா வேண்டுகோள்



கல்வி அமைச்சின் ஏற்பாட்டில் கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தலைமையில் இந்து சமய பாட ஆலோசனை சபை அங்கத்தவர்களின் கலந்துரையாடல் இணையவழி ஊடாக நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

இதன்போது கல்வி அமைச்சின் செயலாளர், மேலதிக செயலாளர் மற்றும் பெருந்தோட்டப் பாடசாலைகளுக்கான பணிப்பாளர் முரளிதரன், உதவிக் கல்விப் பணிப்பாளர் (தமிழ், சமயம்) எஸ்.சுந்தரலிங்கம் ஆகியோருடன் இந்து கலாசார திணைக்களத்தின் பணிப்பாளர் அ.உமா மகேஸ்வரன், யாழ். பல்கலைக்கழக விரிவுரையாளர் ரமணா, கிழக்கு பல்கலைக்கழக விரிவுரையாளர் திருமதி கேசவன், இராமகிருஷ்ன சுவாமி, சின்மய மிஷன் சுவாமி ஆகியோரும் கலந்து கருத்துகளை பரிமாறினர்.

கலாநிதி ராமசந்திரக் குருக்கள் பாபு சர்மா, அமைச்சரிடம் தற்போதைய சூழ்நிலையில் பாடசாலைகள் நடைபெறாத காலங்களில் மாணவர்களின் சீர்நடத்தையை மேம்படுத்துவதற்கான அம்சமாக குறிப்பிட்ட காலநேரம் இந்து சமய பாட ஆசிரியர்கள் மூலம் அவர்களுக்கு தர்ம சிந்தனைகளை, ஆன்மீக ஈடுபாடுகளை ஏற்படுத்தும்வண்ணம் கலந்துரையாடலை நடத்த வேண்டும் என வேண்டுகோள் விடுத்திருந்தார்.

அதற்கு அமைச்சர், அதற்காக பெரும்பாலும் இந்த பாடசாலைகளை நடத்த நடவடிக்கைகளை மேற்கொள்ள இருப்பதாகவும் தெரிவித்து மாணவர்களின் கல்வி மேம்பாட்டிற்கு தொடர்ந்து இந்த கல்வி சேவையை முன்னெடுப்பதற்கான முயற்சிகளை மேற்கொண்டுவருவதாகவும் தெரிவித்தார்.



*ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவையும் பிரதமர் ரணில் விக்ரமசிங்கவையும் பதவி விலகுமாறு கோரி நாடளாவிய ரீதியில் நேற்றுமுன்தினம் முன்னெடுக்கப்பட்ட போராட்டத்தின் ஓர் அங்கமாக சிலாபத்திலும் எதிர்ப்புப் பேரணி இடம்பெற்றது.*

*(படப்பிடிப்பு: ஜூட் சமந்த)*

# போராட்டத்தின்போது ஊடகவியலாளர்கள் தாக்கப்பட்டமைக்கு புத்தளம் ஐக்கிய ஊடகவியலாளர்கள் ஒன்றியம் கண்டனம்

*(ரஸீன் ரஸ்மின்)*

பிரதமர் ரணில் விக்ரமசிங்கவின் வீட்டிற்கு முன்பாக போராட்டக்காரர்கள் ஒன்றுகூடியமையால் ஏற்பட்ட அமைதியின்மையை செய்தி சேகரிக்கச் சென்ற நியூஸ் பெஸ்ட் ஊடகவியலாளர்கள் மீது விசேட அதிரடிப்படையினரும், பொலிஸாரும் மேற்கொண்ட மூர்க்கத்தனமான தாக்குதலை வன்மையாகக் கண்டிப்பதாக புத்தளம் மாவட்ட ஐக்கிய ஊடகவியலாளர் ஒன்றியம் தெரிவித்துள்ளது.

ஜூடின் சிந்துஜன், ஜனித்த மென்டிஸ், வர்ண சம்பத், சரசி பீரிஸ் ஆகிய ஊடகவியலாளர்கள் மீதே இவ்வாறு தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதற்கு தமது கண்டனத்தை தெரிவித்து வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே மேற்படி தெரிவிக்கப்பட்டுள்ளது. அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது,

ஜனநாயக ரீதியில் முன்னெடுக்கப்பட்டுவரும் குறித்த மக்கள் எழுச்சிப் பேரணியில் செய்தி சேகரிக்கச் சென்ற மேற்படி ஊடகவியலாளர்கள் தங்களை ஊடகவியலாளர்கள் என்று அடையாளப்படுத்திய போதிலும், அதனை ஒருபோதும் பொருட்படுத்தாமல் அவர்களை கீழே வீழ்த்தி அவர்கள் மீது கண்மூடித்தனமாக தாக்குதல் நடத்தியமையை யாரும் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள்.

மேற்படி, தாக்குதல் சம்பவத்துடன் தொடர்பில் பாரபட்சமின்றி சட்ட நடவடிக்கையை எடுக்குமாறு பொலிஸ் மா அதிபர் உத்தர விட்டுள்ளார். அதேவேளை, இந்தத் தாக்குதல் சம்பவத்தை தான் கண்டிப்பதாகத் தெரிவித்துள்ள பிரதமர் ரணில் விக்ரமசிங்க, போராட்டக் களத்தில் செய்தி சேகரிப்பில் ஈடுபடும் ஊடகவியலாளர்கள் மீது தாக்குதல் நடத்தப்படுவதை உடனடியாக நிறுத்த வேண்டும் எனவும் கூறியுள்ளார்.

இவ்வாறு கண்டன அறிக்கைகளை விடுவது ஒருபுறம் இருக்க, மேற்படி ஊடகவியலாளர்களை கடுமையாக தாக்கிக் காயப்படுத்திய இராணுவ வீரர்களையும், பொலிஸாரையும் உடனடியாக கைதுசெய்து அவர்கள் மீது பாரபட்சமின்றி விசாரணைகள் முன்னெடுக்க வேண்டும்.

ஊடகவியலாளர்கள் தங்களது கடமையினை சுதந்திரமாக மேற்கொள்வதற்கு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட வேண்டும். அண்மைக் காலமாக இந்த நாட்டில் ஊடகவியலாளர்கள் மீது தொடர்ச்சியாக தாக்குதல்கள் நடத்தப்பட்டு வருவது மிகவும் கவலைக்குரிய விடயமாகும்.

எனவே, நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் மிகவும் அர்ப்பணிப்புடன் ஊடகப் பணிகளை முன்னெடுத்துவரும் ஊடகவியலாளர்களின் பாதுகாப்பினை உறுதிப்படுத்த பிரதமரும், ஊடக அமைச்சரும், பொலிஸ் மா அதிபர் உள்ளிட்ட பாதுகாப்புத் தரப்பினரும் முன்வர வேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# புத்தளத்தில் இடம்பெற்ற ஹஜ்ஜுப் பெருநாள் தொழுகை

*(ரஸீன் ரஸ்மின்)*

புத்தளம் - அல்-காசிமி சிட்டி ஜும்ஆ மஸ்ஜித் ஏற்பாடுசெய்த ஹஜ்ஜுப் பெருநாள் தொழுகையும் , கொத்பாவும் அல்-காசிமி சிட்டி ரிஷாத் பதியுதீன் முஸ்லிம் மகா வித்தியாலய மைதானத்தில் நேற்று இடம்பெற்றது.

இதன்போது அல்-காசிமி சிட்டி ஜும்ஆ மஸ்ஜித் பேஷ் இமாம் அஷ்ஷெய்க் என்.எம்.நவாஸிர் (ரஷாதி) தொழுகையையும் கொத்பாவையும் நடத்தி வைத்தார்.

இதில் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான ரிஷாத் பதியுதீன் உட்பட ஆண்கள், பெண்கள் என பெரும் எண்ணிக்கையிலானோர் கலந்துகொண்டனர்.

இதேவேளை, புத்தளம் மாவட்டத்தின் பல பகுதிகளிலுள்ள மஸ்ஜித்கள் மற்றும் மைதானங்களிலும் பெருநாள் தொழுகையும், கொத்பாவும் இடம்பெற்றதுடன், ஆண்கள், பெண்கள், முதியவர்கள் மற்றும் சிறுவர்கள் என அதிகளவிலானவர்கள் பங்கேற்றனர்.

அத்துடன், புத்தளத்தில் வாழும். முஸ்லிம் மக்கள் பெருநாள் தொழுகையை நிறைவேற்றிய பின்னர், தமது குடும்ப உறவினர்கள், அயலவர்கள் மற்றும் நண்பர்களின் வீடுகளுக்கு சென்று மிகவும் சந்தோஷமாக பெருநாளை கொண்டாடி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.











## 7 மாதத்துக்கு 7 கெப்டன்கள்

# இந்திய கிரிக்கெட்டின் அவலம்

இங்கிலாந்து சுற்றுப்பயணத்தை முடித்துக்கொண்டு மேற்கு இந்தியாவுக்குச் செல்லும் இந்திய கிரிக்கெட் அணி 3 ஒருநாள், 5 ரி20 போட்டிகளில் பங்கேற்கிறது.

முதலாவதாக நடைபெறும் 3 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடருக்கான இந்திய அணி அறிவிக்கப்பட்டது. அதில் கெப்டன் ரோகித் சர்மா, விராட் கோஹ்லி போன்றவர்கள் ஓய்வெடுக்கும் நிலையில் ஷிகர் தவான் கெப்டனாக நியமிக்கப்பட்டுள்ளமை பல ரசிகர்களையும் அதிருப்தியடைய வைத்துள்ளது. ஏனெனில், 2022 கலண்டர் வருடத்தில் ஜூலை வரையிலான 7 மாதத்தில் ஷிகர் தவான் இந்தியாவை 7ஆவது கெப்டனாக வழிநடத்தவுள்ளார்.

2022 புத்தாண்டு தொடங்கியதும் தென்னாபிரிக்க மண்ணில் நடந்த 3 போட்டிகள்கொண்ட டெஸ்ட் தொடரின் 2ஆவது போட்டியில் கெப்டன் விராட் கோஹ்லி காயமடைந்ததால் கே.எல்.ராகுல் கெப்டனாக அறிவிக்கப்பட்டார். அதன்பின் 3ஆவது போட்டிக்குத் திரும்பிய விராட் கோஹ்லி முதலும் கடைசியுமாக இந்தியாவை வழிநடத்தி கெப்டன் பதவியை இராஜினாமா செய்தார். அதைத்தொடர்ந்து பெப்ரவரி, மார்ச் மாதங்களில் முழுநேர கெப்டனாக அறிவிக்கப்பட்ட ரோகித் சர்மா மேற்கு இந்தியா, இலங்கை அணிகளுக்கு எதிராக இந்தியாவை வழிநடத்தினார்.

ஐபிஎல் 2022 தொடருக்குப் பின் சொந்த மண்ணில் நடந்த தென் ஆபிரிக்கா ரி20 தொடரில் ரோகித் சர்மா ஓய்வு கேட்டதாலும் கே.எல்.ராகுல் கடைசி நேரத்தில் காயத்தால் விலகியதாலும் ரிஷப் பண்ட் பின்னர் நடைபெற்ற ஐபிஎல் 2022 தொடருக்குப் பின் சொந்த மண்ணில் நடந்த தென் ஆபிரிக்கா ரி20 தொடரில் ரோகித் சர்மா ஓய்வு கேட்டதாலும் கே.எல். ராகுல் கடைசி நேரத்தில் காயத்தால் விலகியதாலும் ரிஷப் பண்ட் கெப்டனாக செயல்பட்டார். அதன்பின் பேர்மிங்காம் டெஸ்ட் போட்டியில் ஜஸ்பிரித் பும்ரா இந்தியாவின் 6ஆவது கெப்டனாக செயல்பட்ட நிலையில், தற்போது ஷிகர் தவான் 7ஆவது கெப்டனாக செயல்படவுள்ளார்.



கடந்த 1959இல் அதிகபட்சமாக 5 கெப்டன்கள் இந்தியாவை வழிநடத்தியிருந்த நிலையில், வரலாற்றிலேயே முதல்முறையாக இப்படி 7 கெப்டன்கள் மாறிமாறி செயல்படுவது 2017 முதல் 3 வகையான இந்திய அணியின் கெப்டனாக இருந்த விராட் கோஹ்லிக்கு பின் நல்ல கெப்டன் கிடைக்காததை காட்டுகிறது.

முழுநேர கெப்டனாக பொறுப்பேற்ற பின் ஒன்று காயத்தால் வெளியேறுவது, இல்லையேல் என்னமோ ஒரே மாதத்தில் 20 போட்டிகளில் விளையாடியதைப்போல் ஓய்வு கேட்பது என்ற வகையில் ரோகித் சர்மா செயல்பட்டு வருகிறார். இவ்வாறு செயல்பட்டால் எப்படி ஒரு கெப்டன் தலைமையில் தரமான வீரர்கள் கிடைத்து நிலையான அணி அமைந்து இந்தியா உலக கிண்ணத்தை வெல்ல முடியும் என்ற கவலை ரசிகர்களிடம் ஏற்பட்டுள்ளது.

இப்படியே போனால் இந்த வருடம் முடிவதற்குள் விளையாடும் 11 வீரர்களும் இந்தியாவின் கெப்டனாகும் அளவுக்கு இந்திய கெப்டன்ஷிப் மதிப்பற்றதாக மாறிவிட்டதாகவும் கிண்டலடிக்கிறார்கள். இந்நிலையில், 7 மாதத்தில் 7 கெப்டன்கள் என்பது நல்ல நிலைமை அல்ல என்பதை ஒப்புக்கொண்டுள்ள பிசிசிஐ தலைவர் சௌரவ் கங்குலி அவை அனைத்தும் கட்டுப்படுத்த முடியாத அல்லது எதிர்பாராத காரணங்களால் ஏற்பட்டதாக பதிலளித்துள்ளார்.

எதிர்பாராத தருணங்களில் கப்டன்கள் மாறியதை பிசிசிஐ கட்டுப்படுத்த முடியவில்லை என்று தெரிவிக்கும் சௌரவ் கங்குலி, இந்த வெவ்வேறு கெப்டன்களுடன் இணைந்து பணியாற்றும் பயிற்சியாளர் ராகுல் டிராவிட்டை நினைத்தால் தான் கவலையாக இருப்பதாக தெரிவிக்கிறார். ஏனெனில், நிலையான கெப்டன் இருந்தால்தான் அவருடன் ஒரு பயிற்சியாளராக நீண்டகால திட்டங்களை ஒரே மாதிரியான அணுகுமுறையைக் கையாண்டு வகுக்க முடியும்.

இது பற்றி அவர் மேலும் பேசியது பின்வருமாறு. "இங்கிலாந்தில் பயிற்சிப் போட்டியில் திடீரென ரோகித் சர்மா விலகும் நிலை ஏற்பட்டதற்கு யாரையும் குறை சொல்ல முடியாது. இந்த வருட கலண்டரில் நாம் சிலருக்கு ஓய்வளித்த நிலையில், சிலர் காயத்தால் வெளியேறினர். மேலும் சில வீரர்களின் பணிச்சுமையும் கருத்திற்கொள்ள வேண்டியுள்ளது. இந்த சமயத்தில் தலைமைப் பயிற்சியாளர் ராகுல் டிராவிட் மீது பரிதாபப்பட வேண்டும். தவிர்க்க முடியாத சூழ்நிலைகளால் ஒவ்வொரு தொடரிலும் அவருடன் புதிய கப்டன்கள் செயல்படுகின்றனர்" - என்று கூறினார்.



## எலெனா ரைபாகினா சம்பியனானார்!

விம்பிள்டன் டென்னிஸ் தொடர் நடந்து வருகிறது. பெண்கள் ஒற்றையர் பிரிவில் சம்பியன் மகுடத்துக்கான இறுதி ஆட்டத்தில் துனிசியாவின் ஒன்ஸ் ஜபீர் மற்றும் கஜகஸ்தான் வீராங்கனை எலினா ரைபகினா ஆகியோர் மோதினர். விறுவிறுப்பான இந்த ஆட்டத்தில் சிறப்பாக விளையாடிய எலினா ரைபகினா 3-6, 6-2, 6-2 என்ற செட் கணக்கில் வெற்றி பெற்று விம்பிள்டன் டென்னிஸ் பெண்கள் ஒற்றையர் பிரிவில் சம்பியன் பட்டம் வென்றார். இது எலினா ரைபகினா வென்ற முதல் சம்பியன் பட்டமாகும் தரவரிசையில் 2ஆவது இடத்திலுள்ள ஜபியருக்கு எதிரான வெற்றியை இரண்டு மணி நேரத்திற்கும் மேலாக ரைபகினா முறியடிக்கவில்லை,

1962ஆம் ஆண்டுக்குப் பிறகு கிராண்ட்ஸ்லாம் பட்டப் போட்டியில் அறிமுகமான ஒரு ஜோடி வீராங்கனைகளுக்கு இடையேயான முதல் விம்பிள்டன் மகளிர் இறுதிப் போட்டி இதுவாகும், மேலும் ரைபகினா தொடக்கத்தில் பதற்றமாக இருந்ததை ஒப்புக்கொண்டார்.

100 ஆண்டுகள் பழைமையான ஸ்டேடியத்தை நிரப்பும் சூரிய ஒளியில் அவள் அடியெடுத்து வைத்தபோது, ஜபீர் செய்ததுபோல் பார்வையாளர்களை நோக்கி அவள் கை அசைக்கவில்லை. அதற்குப் பதிலாக, ரைபகினா தனது தோள்களில் மாட்டியிருந்த ரொக்கெட் பையின் கறுப்பு மற்றும் சிவப்பு பட்டைகளை உறுதியாக இரட்டைப் பிடியில் வைத்திருந்தார்.

மேலும், ஜபேர்தான் ஆரம்பத்தில் சிறப்பாக விளையாடினார், ரைபகினாவின் வலுவான சர்வீஸ் மற்றும் கிரவுண்ட் ஸ்ட்ரோக்குகளை கையாண்டு 2-1 என்ற எட்ஜ் வரை முறியடித்தார். கடந்த ஆண்டு பிரெஞ்ச் ஓபனில் செரீனா வில்லியம்ஸை ரைபகினா வீழ்த்தினார்.

## விளையாட்டு செய்திகள்

thamilansports@gmail.com

## இலங்கை அணி 67 ஓட்டங்களால் முன்னிலை
## தினேஸ் சந்திமால் 13ஆவது டெஸ்ட் சதம்

இலங்கை மற்றும் அவுஸ்திரேலிய அணிகளுக்கு இடையிலான இரண்டாவது டெஸ்ட் போட்டியில் முதல் இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி நேற்றைய ஆட்டநேர முடிவில் 66 ஓட்டங்களால் முன்னிலை பெற்றுள்ளது.

இலங்கை மற்றும் அவுஸ்திரேலிய அணிகளுக்கு இடையிலான இரண்டாவது டெஸ்ட் போட்டியில் நாணய சுழற்சியில் அவுஸ்திரேலிய அணி வெற்றிபெற்று முதலில் துடுப்பெடுத்தாடியது. அதன்படி, தனது முதல் இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலியா சகல விக்கெட்டுகளையும் இழந்து 364 ஓட்டங்களை பெற்றுக்கொண்டது.

அவுஸ்ரேலிய அணி சார்பாக ஸ்ரீவன் ஸ்மித் 145 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காதிருந்தார். 272 பந்துகளை எதிர்கொண்ட ஸ்மித், 16 பவுண்டறிகளை அடித்தார். அலெக்ஸ் கேரி 28 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். இலங்கை அணி சார்பில் பிரபாத் ஜெயசூர்ய 6 விக்கெட்டும், ரஜிதா 2 விக்கெட்டும் வீழ்த்தினர்.

இதனையடுத்து, பதிலுக்கு முதல் இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடிய இலங்கை 2ஆம் நாள் ஆட்டநேர முடிவில் முதல் இன்னிங்ஸில்




2 விக்கெட்டுகளை இழந்து 184 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

இரண்டாம் நாள் ஆட்டநேர முடிவில் குசல் மெண்டிஸ் 84 ஓட்டங்களுடனும் ஏஞ்சலோ மெத்யூஸ் 6 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காதிருந்தனர். இதனையடுத்து, நேற்று மூன்றாம் நாள் ஆட்டத்தை ஆரம்பித்தபோது, 84 ஓட்டங்களை பெற்றிருந்து குசல் மெண்டிஸ் ஒரு ஓட்டத்தை பெற்றதோடு, நேதன் லயனின் பந்தில் 85 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார்.

பின்னர் துடுப்பாட்டத்தில் இணைந்த தினேஷ் சந்திமால் மற்றும் ஏஞ்சலோ மெத்யூஸ் ஆகியோர் 86 ஓட்டங்களை இணைப்பாட்டமாக பெற்றுக்கொண்டபோது, 52 ஓட்டங்களை பெற்றிருந்து ஏஞ்சலோ மெத்யுஸ் ஆட்டமிழந்தார்.

இதனைத் தொடர்ந்து சிறப்பாக துடுப்பெடுத்தாடிய தினேஷ் சந்திமால் தனது 13 ஆவது டெஸ்ட் சதத்தை பெற்றுக்கொண்டார். அத்தோடு, கமிந்து மெண்டிஸ் 61 ஓட்டங்களை பெற்று ஆட்டமிழந்தார். நேற்றைய ஆட்டநேர முடிவில் இலங்கை அணி 6 விக்கெட்டுகளை இழந்து 431 ஓட்டங்களை பெற்று 67 ஓட்டங்களால் முன்னிலை பெற்றுள்ளது. தினேஷ் சந்திமால் 232 பந்துகளில் 118 ஓட்டங்களைப் பெற்று ஆட்டமிழக்காதிருந்தார்.

Sri Lanka Cricket
தேசிய கிரிக்கெட் அணியின் உத்தியோகப்பூர்வ அனுசரணையாளர்
Dialog



# ஒருநாள் கிரிக்கெட்டில் அதிக வருடங்கள் விளையாடிய ஜாம்பவான்கள்!

கிரிக்கெட் உட்பட எந்த வகையான விளையாட்டாக இருந்தாலும் அதில் நாட்டுக்காக சர்வதேச அளவில் விளையாடி பெருமை சேர்ப்பதே ஒரு வீரரின் மிகப்பெரிய இலட்சியமாக இருக்கும். அதை சிறுவயதிலேயே கனவுகண்டு பாடசாலை வயதில் அதற்கான முதல் படிகளை தொட்டு உள்ளூர் அளவில் நிறைய வருடங்கள் தங்களது மிகச் சிறப்பான செயல்பாடுகளால் தெரிவுக் குழுவினரின் கதவை சத்தமாக தட்டி முதல் முறையாக நாட்டுக்காக தெரிவாவதே அந்த மிகப்பெரிய இலட்சியத்தின் முதல் வெற்றியாகும்.

ஒருநாள் கிரிக்கெட்டில் நீண்ட காலம் விளையாடிய வீரர்களின் பட்டியலில் இந்திய நட்சத்திர வீரர் டெண்டுல்கர் முதலிடத்தில் இருக்கிறார்.

அப்படி சிறப்பாக செயல்பட்டு தொடர்ச்சியான நிலையான இடத்தைப் பிடிக்கும் வீரர்கள் நாளடைவில் நம்பிக்கை நட்சத்திரங்களாக உருவெடுத்து உலகின் எந்த இடத்திலும் தரமான எதிரணிகளையும் அற்புதமாக எதிர்கொண்டு நாட்டுக்கு வெற்றியைத் தேடித்தருவார்கள்

### சோயப் மாலிக்

1999இல் அறிமுகமான இவர், கடந்த தனது சிறப்பான செயல்பாடுகளால் பாகிஸ்தான் மிடில் ஆர்டரில் முக்கிய பேட்ஸ்மேனாக 287 போட்டிகளில் 7,534 ஓட்டங்களை 34.50 என்ற நல்ல சராசரியில் குவித்து நிறைய வெற்றிகளுக்கு முக்கிய பங்காற்றினார். 2007 – 2009 வரையிலான காலகட்டத்தில் கெப்டனாகவும் செயல்பட்ட இவர், 2019 உலகக் கிண்ணத்துடன் ஓய்வு பெறுவதாக அறிவித்தார். 19 வருடங்கள் 245 நாட்கள் பாகிஸ்தானுக்காக விளையாடிய கௌரவத்தையும் பெருமையையும் பெற்றுள்ள இவர், இந்தப் பட்டியலில் 5ஆவது இடம் பிடிக்கிறார்.

### கிறிஸ் கெயில்

ஜமேக்காவைச் சேர்ந்த இவர், சர்வதேச அரங்கில் மேற்கிந்திய தீவுகளுக்காக கடந்த 1999இல் இந்தியாவுக்கு எதிராக ஒருநாள் கிரிக்கெட்டில் அறிமுகமானார். ஆரம்ப காலம்முதல் அதிரடியான பேட்டிங்கை வெளிப்படுத்தி சிக்ஸர்களை பறக்க விட்டு ரசிகர்களை மகிழ்வித்த இவர், ஏராளமான வெற்றிகளை பெற்று கொடுத்து 10,480 ஓட்டங்களை விளாசி ஜாம்பவனாக கடந்த 2019ஆம் ஆண்டு அதே இந்தியாவுக்கு எதிராக விடைபெற்றார். அதிலும் 2015 உலகக் கிண்ணத்தில் இரட்டை சதமடித்த முதல் வெஸ்ட் இண்டீஸ் வீரராக சாதனை படைத்த இவர், 19 வருடங்கள் 337 நாட்கள் ஒருநாள் கிரிக்கெட்டில் விளையாடி அதிக வருடங்கள் வெஸ்ட் இண்டீஸுக்காக விளையாடிய வீரர் என்ற பெருமையுடன் இப்பட்டியலில் 4ஆவது இடம் பிடிக்கிறார்.

### ஜாவேத் மியாண்டட்

80 மற்றும் 90களில் பாகிஸ்தானின் முக்கிய நம்பிக்கை நட்சத்திரமாக வலம் வந்த இவர், கெப்டனாக வழிநடத்தும் அளவுக்கு அபாரமாக செயல்பட்டார். 1975இல் அறிமுகமாகி 1996இல் ஓய்வுபெற்ற இவர், பாகிஸ்தானுக்காக ஒருநாள் கிரிக்கெட்டில் 20 முழுமையான வருடங்கள் மற்றும் 272 நாட்கள் விளையாடி அதிக வருடங்கள் விளையாடிய வீரராக சாதனையுடன் ஓய்வுபெற்றார்.

### சனத் ஜெயசூர்ய

90களில் அற்புதமான சுழல் பந்துவீச்சு ஓல்-ரவுண்டராக இலங்கைக்கு ஏராளமான வெற்றிகளை பெற்றுக்கொடுத்த இவர், தொடக்க வீரர்கள் அதிரடியாக விளையாட வேண்டும் என்ற கலையை இலங்கைக்கு கற்றுக்கொடுத்தவர் என்றால் மிகையாகாது. பகுதிநேர சுழல் பந்துவீச்சாளராக சச்சின் போன்றவர்களையும் திணறடித்த இவர், 1989இல் அறிமுகமாகி 2011 வரை 13430 ஓட்டங்களையும் 323 விக்கெட்டுகளையும் எடுத்த ஒரு மகத்தான ஓல்-ரவுண்டராகவே போற்றப்படுகிறார். 21 வருடங்கள் 184 நாட்கள் விளையாடிய இவர் ஒருநாள் கிரிக்கெட்டில் அதிக வருடங்கள் விளையாடிய இலங்கை வீரராக இன்றும் சாதனை படைத்துள்ளார்.

### சச்சின் டெண்டுல்கர்

1989இல் 16 வயது பிஞ்சு கால்களுடன் வாசிம் அக்ரம், வக்கார் யுனிஸ் போன்ற தரமான பந்துவீச்சாளர்களை ஆரம்பத்திலேயே எதிர்கொண்டு அவர்களை விட உலகத்தரம் வாய்ந்த வீரராக உருவெடுத்த இவர், நாளடைவில் இந்திய பேட்டிங்கின் முதுகெலும்பாக உருவெடுத்து ஓய்வுபெறும்வரை அதை தனது தோளில் சுமந்தார்.

90களில் இவர் அடித்தால்தான் இந்தியா வெற்றி, இல்லையேல் தோல்வி என்ற நிலைமையே இவரின் தரத்திற்கு சான்று. மேலும் ஒருநாள் கிரிக்கெட்டில் தொடவே முடியாது என்று கருதப்பட்ட 200 ஓட்டங்களை முதல் முறையாக எட்டிப்பிடித்த இவர், யாராலும் சுலபமாக எட்ட முடியாத 18,426 ஓட்டங்களையும் 49 சதங்களையும் அடித்து மாபெரும் உலக சாதனை படைத்துள்ளார்.

1992 முதல் 5 உலகக் கிண்ணங்களை வெல்லமுடியாத இவர், கடைசி முயற்சியில் சொந்த மண்ணில் 28 வருடங்கள் கழித்து இந்தியா உலக கிண்ணத்தை வெல்ல அதிக ஓட்டங்கள் குவித்த இந்திய பேட்ஸ்மேனாக முக்கிய பங்காற்றி 2011 உலக கிண்ணத்தை வென்று 2012இல் ஓய்வு பெற்றார்.

22 வருடங்கள் 91 நாட்கள் விளையாடிய இவர், ஒருநாள் கிரிக்கெட்டில் அதிக வருடங்கள் விளையாடிய வீரர் என்ற உலக சாதனையும் படைத்துள்ளார்.




Printed by the Kalukodayawa, Malwana Press & Published by Liberty Publishers (Pvt.) Ltd. 91, Wijerama Mawatha, Colombo 7